


29 வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416-282-8059
Fax: 416-286-0334
email: vlambaram@sympatico.ca
info@vlambaram.com
web: vlambaram.com
tamilvanakkam.com




நதி: 29 | பாலம்: 14 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JULY 15, 2019

# கனடிய முதல்வர்களின் மாநாடு

கனடாவின் பத்து மாகாணங்களினதும் மூன்று பிரதேசங்களினதும் முதல்வர்களைக் கொண்ட கூட்டமைப்பின் (Council of Federation) மாநாடு 2019 ஜூலை 9இல் இருந்து 11வரை சஸ்கச்சுவான் மாகாணத்தில் உள்ள சஸ்கற்ரூன் நகரில் நடைபெற்றது.



சஸ்கச்சுவான் மாகாண முதல்வர் Scott Moe கனடிய முதல்வர்களை வரவேற்றதுடன் இந்த மாநாட்டில் கனடிய மக்களுக்குத் தேவையான பல முக்கிய விடயங்களைப் பற்றி ஆராயப்பட இருப்பதாகக் கூறினார். முக்கியமாகக் கனடியப் பொருளாதார வளர்ச்சி, வர்த்தகம் மற்றும் சுகாதாரம் பற்றி விரிவாக ஆராயப்படும். கனடிய மாகாணங்களுக்கு இடையே வர்த்தகம் செய்வதற்குப் பலவிதமான நிர்வாகத் தடைகள் இருக்கின்றன. கனடாவில் அதிக வேலை வாய்ப்பை உருவாக்க மாகாணங்களுக்கு இடையேயான வர்த்தகத் தடைகளை அகற்ற நாங்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றார். சுகாதார செலவினங்களுக்குக் கனடிய மத்திய அரசின் பங்கு குறைந்து வருவது மாகாணங்களையும் பிரதேசங்களையும் பாதிக்கிறது. கனடியர் எல்லோருக்கும் நிரந்தரமாகச் சுகாதார வசதிகள் கிடைப்பதை உறுதி செய்வதற்கான வழிகளை நாங்கள் ஆராய வேண்டும் என்று மாநாடு தொடங்க முன்னர் ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில் அவர் தெரிவித்திருந்தார்.

ஒக்ரோபரில் நடைபெறவிருக்கும் கனடியப் பொதுத்தேர்தலுக்கு முதல் இடம்பெறும் கனடிய முதல்வர்களின் கூட்டமைப்பின் இறுதி மாநாடு இது என்பதால் பலவிதத்தில் இம்மாநாடு முக்கியத்துவம் பெறுவதுடன் ஊடகவியலாளர்களின் கவனத்தையும் ஈர்த்தது.

இம்மாநாட்டில் கலந்து கொண்ட 13 முதல்வர்களில் ஏழு பேர் பழமைவாதக் கோட்பாடு உடைய கட்சிகளைச் சேர்ந்தோர். மூவர் லிபரல் கட்சியையும் ஒருவர் புதிய ஜனநாயகக் கட்சியையும் சேர்ந்தவர்கள். இருவர் மட்டுமே எந்த ஒரு தேசியக் கட்சிகளையும் சாராதோர் ஆவர்.

கனடிய மாகாண முதல்வர்கள் மற்றும் பிரதேசங்களின் முதல்வர்களைக் கொண்ட கூட்டமைப்பான Council of Federation 2003 டிசம்பர் 5இல் பிரின்ஸ் எட்வேர்ட் தீவு மாகாணத்தில் உள்ள Charlottetown நகரில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் நோக்கமாக கனடிய ஒற்றுமைக்காக வேலை செய்தல், கனடாவின் ஆக்கபூர்வமான கூட்டமைப்பை ஊக்குவித்தல் மற்றும் கனடாவின் கூட்டாட்சி அரசாங்க முறையில் உள்ள பல்வேறு மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களுக்கு இடையேயான வேறுபாடுகளை அங்கீகரித்தல் இருந்தன.

இக்கூட்டமைப்பின் உறுப்பினர்களான 13 முதல்வர்களும் ஒரு வருடத்தில் இரண்டு தடவை கூடிக் கலந்துரையாடுவர். இம்முறை இவர்களது மாநாடு 2019 ஜூலை 9இல் ஆரம்பமாக முன்னர் கனடிய வர்த்தக சங்கத்தின் தலைவரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான Perrin Beatty 13 முதல்வர்களுக்கும் பகிரங்கக் கடிதம் மூலம் வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.

கனடிய மத்திய அரசு 2017 ஜூலை 1இல் அமலாக்கிய கனடிய மாகாணங்களுக்கு இடையேயான சுதந்திர வர்த்த ஒப்பந்தத்தை (CFTA) அர்த்தமுள்ளதாக்கிக் கனடிய மாகாணங்களுக்கு இடையே சுதந்திர வர்த்தகத்தை நடைமுறைப்படுத்துமாறு கனடிய வர்த்தக சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள இரண்டு இலட்சம் வணிக நிறுவனத்தின் சார்பில் 13 முதல்வர்களையும் அவர் அதில் கேட்டிருந்தார்.

கனடிய மத்திய அரசு CFTAஐ அமலாக்கி

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)































Sold Over Asking
In One Day
Just Listed
27-811 Wilson Rd N
Oshawa
BR:3 WR:3
Maint Fee:$187
$799,900
Just Listed
Port Union & Sheppard
Open House: Everyday
Call For Time
BR: 4+1
WR;3
Kennedy & Sheppard
Only 10% Down until 2022
Pre Constuction Condos
& Townhouses at VIP Price
Over 20 Projects in Hand
CALL FOR PROMOTIONS & DISCOUNT
$899,900
JUST LISTED
Scarborough
Markham & Finch
Open House Every Day
Call For Time
BR:3+2 WR:4
Detached Bungalow
$749,900
Priced to Sell BR:4 WR:3
Pickering
$789,900
Oshawa
BR:4 WR:4
$99,000
Double Double
PIZZA & CHICKEN
Franchise Opportunity
Oshawa
$819,900
Oshawa
BR:4 WR:3
$539,000
Scarborough
BR: 2+1 WR: 2
Attention Sellers
Free Home Staging
Over $100,000 Staging Furniture
Certified Stager
Interest Free Renovation Loan
Only the Best Deals in Real Estate
BUILDERS' APPROVED
PLATINUM / VIP AGENT
Not intended to Solicit buyers/ sellers under contract.
Thas Thirunavukkarasu
Sales Representative - Dip-in-Eng (Hons)
416-388-4333
thasremax@gmail.com
RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
3-1286 Kennedy Road, Scarborough ON


GOOD SHEPPARD
PHYSIOTHERAPY
REHAB CLINIC
தமிழ்நாட்டிலும் கனடாவிலும் பத்து
வருடத்துக்கு மேலாக அனுபவமுள்ள
பிசியோத்திரபிஸ்டுகளால் ஆரம்பிக்கப்பட்ட
REHAB CLINIC IN SCARBOROUGH
( Markham & Lawrence )
OUR SERVICES
• PHYSIOTHERAPY
• LASER THERAPY
• CHIROPRACTIC
• MASSAGETHERAPY
• ORTHOTICS
• VESTIBULAR REHAB (DIZZINESS)
• PELVIC HEALTH PHYSIOTHERAPY
• COMPRESSION STOCKINGS,
• BRACES
CONDITIONS TREATED
• SPORTS INJURIES, LIGAMENT INJURIES
• NECK PAIN
• BACKPAIN
• SHOULDER PAIN
• HEEL PAIN
• JOINT PAIN
• DIZZINESS
• PELVIC PAIN- PROLAPSE, INCONTINENCE
• POST-OPERATIVE REHAB EXERCISES
சகல விதமான காப்புறுதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும்...
சகல காப்புறுதி நிறுவனங்களுடன் நேரடியாக தொடர்பு கொண்டு உங்கள் கட்டணங்களை பெற்றுக்கொள்வோம்
LIVING WITH PAIN? CALL FOR 15 minutes FREE consultation.
15 நிமிடம் தமிழில் இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்
Opening Hours
Monday - Friday 10 AM - 7 PM
Saturday 10 AM - 5 PM
Sunday Closed.
Phone: 416.431.3200 | Fax: 416.431.3202
3340 Lawrence ave East. Unit 2B Scarborough, M1H 1A7
email: goodsheppardphysio@gmail.com | web: www.goodsheppardphysio.ca



அம்மா
Amma Pawn Broker
தங்கநகை அடைவு மாடம்
✔ ரொரன்றோவில் வர்த்தகத்துறையில் 25வது வருட வெள்ளி விழா காணும் நிறுவனம்
✔ உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டி வீதமும் தரும் ஒரே நிறுவனம்
✔ 5 நிமிடங்களில் உங்கள் கையில் குறைந்த வட்டியுடன் பணமும் பாதுகாப்பும் அளிக்கும் நட்பான சேவையுடன் கைராசியான நிறுவனம்.
✔ உங்கள் பழைய நகைகளை அதியுயர் பெறுமானத்திற்கு எம்மிடம் விற்றுக்கொள்ளலாம்
1.5% முதல் 2% வட்டி மட்டுமே (per month)
எவ்வளவு தொகையானாலும் மிக குறைந்த வட்டியுடன் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்
அம்மா போல அம்மா பவுண் புறோக்கர்ஸ்
நம்பிக்கை
நாணயம்
உத்தரவாதம்
உங்கள் முதலை மாதாமாதம் கட்டிக்குறைக்கலாம் உங்கள் கட்டுப்பணத்தை வங்கியினூடாகவும் செலுத்தலாம்.
கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்று முழுக் காப்புறுதி செய்யப்பட்ட முதன்மையான அடைவுசேவை
416-757-0034, 416-994-3861
105A - 2425 Eglinton Ave, E, Scarborough
ammapawnbroker@gmail.com
கடைக்குப் பின்புறத்தில் போதிய வாகனத்தரிப்பிட வசதிகள் உண்டு.
Shankar & Co. விற்கு அருகாமையில்




Closing Problem !!!!!!
You need secured Loan from $200* per month for $20,000.00*
Cottage
Farm
BUY & SELL REAL ESTATE
Business
New Condo
Airport Rd/ castlemore
7 Car Parking
4 bedroom 6 washroom home with ,3 bedroom basement legal apartment 3 kitchen luxury Home....2 unit in the basement with separate entrance surrounded by three school and all amenities
Markham and finch
$689,900
Condo With 2 Bedrooms, 2 bath 900 sq ft close to mall school etc..
Warden And Lawrence
Excellent Condo Apt 9 Feet Ceiling, 1+1 den can be 2 bm
East of Whitby
$689,900
New 2,400 Sq.Ft 4 Bedroom 3 Baths
Richmond Hill. Yonge /
$420k
1+1 Bed Suite W/2 bath 837 Sq. Ft. Indoor Pool,
Scarborough/Lawrence ave east
$689,900
3 BM W/ SEP ENTRANCE BASEMENT APARTMENTShows 10+! Move In And Enjoy!
Markham/ Ellesmere 40 x 127.8 Feet LARGE LOT
$599,900
3 BM HOME
BUY OR SELL THROUGH PAT in 2019 &WIN 1WEEK TRIP FOR TWO in CARIBBEAN**
WIN
WIN
HOME SWEET LOAN
Century 21 Affiliate Realty Inc.
416-290-1200
Pat Pushpakanthan
Broker
416-894-1187
MASTERS
HALL OF FAME
5% Mortgage TJT financial Interest rate from 2.79% 416-894-1187

# நாமும் நமது இல்லமும் - 538

# கனடிய வட்டி வீதத்தில் மாற்றமில்லை!



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

வருடாவருடம் எட்டுத் தடவை மத்திய வங்கியின் முக்கிய உறுப்பினர்கள் சந்தித்து கனடிய பொருளாதாரத்தின் எதிர் கால நிலைமையை பற்றிய முக்கிய தகவல்களைப் பகிர்ந்து கொள்வர். அதன் முடிவாக மத்திய வங்கியின் ஆளுநர் கனடிய வட்டி வீதத்தைப் பற்றிய முடிவை அறிவிப்பார்.

கடந்த புதன்கிழமை ஜூலை 10, 2019ஆம் திகதி வங்கியின் ஆளுநர் ஸ்ரீபன் போலஸ் (Stephen Poloz) தனது குழுவின் சார்பாக வட்டி வீதம் பற்றிய தகவல் களையும் கனடிய உலகப் பொருளாதார நிலை பற்றிய நீண்ட அறிக்கையையும் வெளியிட்டிருந்தார். அதன் முடிவாக கனடிய மத்திய வங்கியின் வட்டி வீதம் 1.75%ஆக மாறாமல் காணப்படுகிறது.

முதன்மை நிதி நிறுவனங்கள் கனடிய மத்திய வங்கியிடமிருந்து பெற்றுக் கொள்ளும் கடனிற்கு இந்த வட்டி வீதமே அறவிடப்படும். இதனை வங்கி வீதம் (Bank Rate) எனக் கூறப்படும். இதன் தொடர்ச்சியாக நிதி நிறுவனங்கள் தமக்கு ஒரு பெறுமதியை அதிகரித்து முதன்மை வட்டி வீதம் (Prime Rate) எனத் தமது வாடிக்கையாளர்களுக்கு கொடுக்கும் வட்டி வீதம் ஆகும். பொதுவான நிதி நிறுவனங்களின் முதன்மை வட்டி வீதம் 3.95% TB Bank தவிர அதாவது வங்கியின் வீத (1.75% + 2.20% =3.95%) துடன் அதிகரிக்கப்படுகிறது. இதுவே 3.95% இன்றைய பொதுவான முதன்மை வட்டிவீதமாகும்.

கனடியப் பொருளாதாரம் சிறப்பாக காணப் படுகிறது. ஆனால் அமெரிக்கப் பொருளா தாரம் இறுக்க நிலையை நோக்கி செல் வதால் அமெரிக்க வட்டி வீதத்தில் இறக்கம் ஏற்படக் கூடிய சந்தர்ப்பமும் அதிகமாகக் காணப் படுகிறது. இதனா லேயே அண்மைக் காலத்தில் கனடிய டொலரின் பெறுமதி அதிகரித்து வருவ தைன் காணடிக் கூடிய தாக உள்ளது. வங்கி வட்டி வீதம் ஒக்ரோபர் 2018இற்கு பிற்பாடு எதுவித மாற்றமும் இல்லாமல் 1.75% ஆகவே காணப்படுகிறது.
அண்மைக்காலமாக அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கிடையில் ஏற்பட்டு வரும் பொருளாதாரப் போரினால் உலகளாவிய பொருளாதாரத்தில் ஸ்திர மற்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. அமெரிக் கப் பொருளாதார இறக்கத்திற்கு இதுவும் ஒரு காரணமாகும். அத்துடன் கனடிய




உலக பொருளாதார வளர்ச்சியும் குறைவதனைக் காணலாம். இதனால் உலகப் பொருளாதார வளர்ச்சி 2019இல் 3.2%ஆக இருக்கும் என ஏப்ரல் 2019இல் கூறப்பட்டது. ஆனால் இந்தப் பெறுமதி இப்பொழுது 3.0% ஆக குறைத்தே எதிர்வு கூறப்படுகிறது. அத்துடன் உலக பொருளாதார வளர்ச்சி 2020இல் 1.9% ஆகவும் 2021இல் 2.1% ஆகவும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் 2019இல் கனடிய பொருளாதார வளர்ச்சி 1.2%ஆக இருக்கும் என ஏப்ரலில் கூறப்பட்ட போதிலும் இப்பொழுது ஜூலை 2019இல் 1.3% ஆக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ரொறொன்ரோ பெரும்பாகத்தில் ஆதன விலை வியா பாரம் ஓரளவு சீரடைந்து வருவதனைக் காணலாம். அடமானக் கடன் பெறுவதில் ஏற்படும் நெருக்கடி, பல வாங்குனர்களை நிறுத்தி வைத்துள்ளது. அண்மைக்கால மாக 5 வருடத்திற்குரிய மாறாத அடமானக்கடன் (5 years fixed mortgage rate) குறைந்து வருவதனைக் காணலாம். இப்பொழுது உள்ள வட்டி வீதம் 5 வருடங்களிற்கு முன்புள்ள (2014) வட்டி வீதத்தை அடைந்துள்ளது.

புதிதாக நிர்மாணம் செய்யும் ஆதனங் களின் எண்ணிக்கை மாத மாதம் அறிக்கையாக வெளிவரும் அண்மைக் காலங்களில் ஜூன் 2019இல் வெளியிடப் படும் தகவலின்படி இவ்வருடம் ஏறக் குறைய 215,000 புதிய ஆதனங்கள் நிர்மாணம் செய்ய இருக்கிறது. இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விடயம் என்னவெனில் இவற்றில் 80% இற்கு மேலானவை அளவில் அடுக்கு மாடி மனைகள் ஆகும். அதாவது கனடியர் களின் நிலையின்படி அடுக்குமாடி மனை களையே விரும்புகின்றனர். அல்லது அவற்றையே அவர்கள் வாங்கக் கூடிய நிலையில் உள்ளனர். இதுவே இன்றைய நிலைமை.


## JAFFNA CAMPUS MATH ACADEMY

Free special summer learn ahead program for next school year

Quality tutoring offered in Math, Physics and Computer Science from Grades 9-12 and University.

Free registration at https://site.jaffnacampus.com/registration-form
Email: info@jaffnacampus.com
Phone: 916-220-0173
(long distance charges may apply)
WhatsApp: +1-916-220-0173

BARCODE • Tired of reading paper, use your QR-Code reader to read in your iPhone or Android device. Cool! enjoy!

### Key benefits of our programs:

- Concept based learning to build strong foundational skills
- Quality homework help, test preparation and conceptual learning programs.
- Provincial Exams practice offered.
- We follow Ontario Curriculum with focus on ON PLO's (Prescribed Learning Outcomes) set out by Ministry of Education

Schedule an appointment https://site.jaffnacampus.com/booking

### ASSESSMENTS

All our students start by taking a customized assessment which pinpoints their learning needs. **We meet them where they are and take them where they need to go.** Our Service's unique assessment process determines (with great accuracy) exactly what each child knows and what they need to learn. **Our assessment reveals each specific skill area that needs to be mastered so kids aren't wasting time reviewing concepts they already know.** Assessments continue throughout the program.

### Homework Hotline

Get help for your homework assignments from experts in the field. Here you get from "huh I can't do it" moment to " aha I got it " moment. **Here the instructor doesn't tell you the answer they will guide you to it until you arrive at the "aha" moment that you will be able solve the problems of similar types.** Please understand that we can't just do your homework for you and if you don't put your full effort to solve the problem on your own. **If you tried hard and couldn't do the problem on your own because you didn't understand the concept that was taught in the regular school. This is where our experts come to help you.**

### Computer Science Developer Hotline

You can get help for your computer science homework assignments, job interview mock exam, Java certification, tips and tricks to land in a top notch software company as a first class developer Languages covered: Java, C#, PHP, Python and VB

### MCAT Preparation

We can help you to prepare for US Medical College Admission Test (MCAT).

# MORTGAGE

## நல்ல ரேட்ல மோட்கேஜ்(OAC*)

## லைன் ஒப் கிரெடிட்(HELOC)

## ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

## Private 1st Mortgage (No Income Verification)

## 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)


பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கான மோர்ட்கேஜ்

## எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க

## பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

## And For All Your Real Estate Services

MORTGAGE CLINIC



நீங்களும் வெல்லலாம்

**$100,000***

எம்மிடம் மோட்கேஜ் பெறுவதன் மூலம்.



www.mortgageclinicanada.com

உங்களுக்கு கை கொடுக்க காத்திருக்கிறது

**ஜெ (Jey) இராசதுரை** MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

416-613-2788 / 416-816-9011

**Cell : 416 - 624 - 4843**

RIGHT AT HOME REALTY INC.

1504 Markham Road,
Toronto ON M1B 2V9
(Markham Road & HWY 401)

MORTGAGE ALLIANCE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

*http://www.mortgagealliance.com/JeyRasathurai/minimize-your-mortgage-sweepstakes

# தமிழ் மக்களுக்கு மாற்றுத் தலைமை சாத்தியமாகுமா?




- ஆதித்தன் -

தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு மாற்றாக ஒரு கூட்டணியை அமைப்பது குறித்து அண்மைய நாட்களாகத் தீவிர கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன. எனினும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிரான கருத்துக்களை கொண்டுள்ள கட்சிகள் தங்களுக்குள் ஒற்றுமைப்பட்டு ஒரு கூட்டணியை அமைக்குமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. அண்மைய நாட்களில் நடைபெற்ற சந்திப்புகள், கலந்துரையாடல்களில் எவ்வித உடன்பாடும் எட்டப்படவில்லை.

வடக்கின் முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் இணைந்தால் அது தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு மாற்றான ஒரு கூட்டணியாகத் திகழும் என்கின்ற எதிர்பார்ப்பு சிலரிடத்தில் உள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிராகவுள்ள கட்சிகளைச் சேர்ந்தோர், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைகளில் ஏமாற்றம் அடைந்துள்ள தமிழ் மக்கள், கூட்டமைப்பின் செயல்நெறியை கடுமையாக விமர்சிக்கும் புத்திஜீவிகள் போன்றோர் மாற்று அணியொன்று அவசியம் என்பதில் அதிக அக்கறை கொண்டுள்ளனர்.

முன்னர், தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிரான கருத்துக்களைக் கொண்டுள்ள சில கட்சிகள் ஒரு கூட்டணியை அமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டன. டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் சில உதிரிக் கட்சிகள் சேர்ந்து கூட்டணி அமைத்தன. ஆனால், பின்னர் அதற்கு என்ன நடந்தது என்று தெரியாமலேயே கலைந்து போனது. மக்கள் செல்வாக்கு இல்லாமையே அது நிலைக்காமைக்குக் காரணமாகும்.

காலப்போக்கில் நிலைமை வேறானது. தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்குள்ளேயே முரண்பாடுகள் தோன்றி, அவை நாளுக்கு நாள் அதிகரிக்க ஆரம்பித்தன. சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சி கூட்டணியிலிருந்து விலகியது. இப்போது கூட்டணியில் இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) ஆகிய மூன்று கட்சிகளே அங்கம் வகிக்கின்றன. அவை மூன்றும் கூட இப்போது ஒன்றையொன்று ஒட்டாத நிலையிலேயே இருக்கின்றன. இதற்குத் தமிழரசுக் கட்சியின் தான்தோன்றித் தனமான செயற்பாடுகளே காரணமாகச் சொல்லப்படுகின்றது.



தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் பிரதானமான நடவடிக்கைகளில் தனித்தே தீர்மானங்கள் மேற்கொள்வதாகவும் ஏனைய பங்காளிக் கட்சிகளுடன் ஆலோசனைகூட நடத்துவதில்லை என்றும் அக்கட்சிகளைச் சேர்ந்தோர் குறை கூறுகின்றனர்.

தமிழரசுக் கட்சியே கூட்டமைப்பின் தாய்க் கட்சி என்று அதன் தலைவர்கள் கூறுகின்றனர். தாங்களே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதாக அவர்களின் போக்கு அமைந்திருக்கின்றது என்பதை மறுதலிக்க முடியாது. இந்த நிலைமையே கூட்டமைப்பின் கட்சிகளுக்குள் தோன்றியிருக்கும் முரண்பாட்டிற்கான பிரதான காரணமாகும்.

விடுதலைப்புலிகள் அமைப்பினால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பில் எந்தவொரு தனிக் கட்சிக்கும் பிரதான இடமளிக்கப்படவில்லை. ஆரம்பத்தில் அந்தக் கூட்டணியில் தமிழரசுக் கட்சியே இருக்கவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியே இருந்தது. அந்தக் கட்சியின் உதயசூரியன் சின்னத்திலேயே தமிழ் தேசியக் கூட்டமைப்பு தேர்தல்களில் போட்டியிட்டது.

ஆனந்தசங்கரியின் கருத்துக்கள் மற்றும், செயற்பாடுகளில் விடுதலைப்புலிகளுக்கு முரண்பாடு ஏற்பட்டபோது அவர் கூட்டமைப்பிலிருந்து விலக நேர்ந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சியும், அதன் உதய சூரியன் சின்னமும் யாருக்கானது என்கின்ற வாதாட்டத்தில் அவை ஆனந்தசங்கரிக்கே உரித்தானது. வழக்கின் தீர்ப்பின் மூலம் இம்முடிவு ஏற்பட்டது. இதன் பின்னரே தமிழரசுக் கட்சி தூசு தட்டப்பட்டு அதன் வீட்டுச் சின்னம் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் சின்னமாகக் கொண்டுவரப்பட்டது. இன்று தமிழரசுக் கட்சியே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தாய்க் கட்சி என்று வாதாடுவது நியாயமானதல்ல. இந்த நிலைமைகளே கூட்டமைப்பின் கட்சிகளிடையே முரண்பாடுகள் வலுப்பெறக் காரணமாகும்.

தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மீது ஏற்பட்டுள்ள வெறுப்புணர்விற்கு அவர்களிடையே தோன்றி உள்ள ஒற்றுமையின்மையே காரணமாகும். விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் அறிவுபூர்வமான போராட்ட வழிமுறையொன்றை தமிழ் தேசியக் கூட்டமைப்பு வடிவமைத்து செயற்படவில்லை. தமிழ் மக்களின் எந்தவொரு பிரச்சினைக்கான தீர்வினையும் கூட்டமைப்பு பெற்றுக் கொடுக்கவில்லை. அரசாங்கத்துடன் பேரம்பேசும் சந்தர்ப்பங்கள் கிடைத்த வேளைகளிலும் அதனைச் சரியாக பயன்படுத்திக் கொள்ளவில்லை.

போர் முடிவுற்று பத்து வருடங்கள் கழிகின்ற போதிலும், இந்தவொரு நீண்ட காலகட்டத்திலும் பிரயோசனமான நடவடிக்கைகள் எதனையும் கூட்டமைப்பு மேற்கொள்ளவில்லை. போருக்குப் பின்னாளில் தீர்வு காணப்பட வேண்டிய இரு முக்கிய விடயங்களான காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினை, அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பான பிரச்சினை இரண்டும் கைவிடப்பட்ட நிலையிலேயே உள்ளது. மக்கள் தொடர்ந்தும் வீதியில் நின்று போராடி வருகின்றனர். இவையெல்லாம் தமிழ் மக்களுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மீது ஏற்பட்டுள்ள வெறுப்பிற்கான காரணங்கள்.

இதனால், ஒரு மாற்று அணி உருவாக வேண்டும் என்று தமிழ் பொதுமக்களும் விரும்புகின்றனர். ஆனால், அவ்வாறான மாற்று அணிக்குத் தகுதியான தலைவர்கள் யார் என்பதில் மக்களுக்கு குழப்பம் உள்ளது. போர் முடிவிற்கு வந்ததன் பின்னர் தமிழ் மக்களுக்கான தலைமை இடைவெளியொன்று ஏற்பட்டுள்ளதை மக்கள் உணர்கின்றனர். இந்நிலையில், இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு மாற்றாக ஒரு கூட்டணி அவசியம் என கூட்டமைப்புடன் முரண்பட்டு நிற்கும் கட்சிகள் உணர்வதும், பொதுமக்கள் உணர்வதற்குமிடையில் வித்தியாசம் உள்ளது.

நீதியரசரான முன்னாள் வடக்கு முதல்வர் விக்னேஸ்வரனை மாற்றுத் தலைமையாக ஏற்றுக் கொள்வதிலும் கேள்விகள் உள்ளன. போர் முடிவுற்றதும் இலங்கை அரசாங்கத்தினால் விரும்பியோ விரும்பாமலோ ஒரு மாகாணசபை வடக்கிற்கு வழங்கப்பட்டது. அதற்குப் போதிய அதிகாரங்கள் வழங்கப்படாதிருந்த போதும், இருக்கின்ற அதிகாரங்களைக் கொண்டு ஆற்ற வேண்டிய பணிகளைக்கூட விக்னேஸ்வரன் தலைமையிலான வடமாகாணசபை மேற்கொள்ளவில்லை. மத்திய அரசாங்கம் வழங்கும் நிதிகளைக் கூட சரியாகப் பயன்படுத்த முடியாமல் அவைத் திரும்பிப்போன சந்தர்ப்பங்களும் இடம்பெற்றுள்ளன. மாகாணசபை என்பது மக்களுக்கான அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒரு நிர்வாக மையம். அரசியலுக்கு அப்பால் மக்களுக்கு சிறந்ததொரு நிர்வாகத்தை

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7


# கனடாவின் பழங்குடியினரும் ஈழத்தமிழரும் - 53



குரு அரவிந்தன்

வழமைபோல இந்த வருடமும் கனடா தினத்தை கனடியர் மிகவும் சிறப்பாகக் கொண்டாடினர். இந்த வருடம் யூலை மாதம் 152ஆவது பிறந்த தினம் கொண்டாடப்பட்டது. பல்லின கலா சாரத்தைக் கொண்ட கனடா நாடு இதுவரை காலமும் வெளிநாட்டவர்களை உள்ளவாங்கியதில் ஏற்பட்டதுதான் இந்தப் பல்லின கலாசாரமாகும். இவர்களுக்கு நடுவேதான் இந்த மண்ணில் முதற்குடி மக்களும் வாழ்கின்றனர். 2016ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி 1,673,785 முதற்குடி மக்கள் வாழ்வதாகத் தெரிகின்றது. இதைவிட அரசு மேற்கொண்ட கணக்கெடுப்பில் அகப்படாதோரும் உண்டு. தேசிய குடிமக்களில் சுமார் 5 வீதமானோராகப் பழங்குடி மக்கள் இந்த மண்ணில் இருக்கின்றனர். பழங்குடி மக்கள் முக்கியமான மூன்று பிரிவுகளுக்குள் அடங்குவர். அவர்களை முதற்குடி மக்கள், மெற்ஸ், இன்யூட் என அடையாளப்படுத்துவர். இதில் முக்கியமான பிரிவினரான முதற்குடி மக்கள் 977,230, மெற்ஸ் குடிமக்கள் 587,545, இன்யூட் மக்கள் 65,025 இந்த மண்ணில் இருக்கின்றனர். இதில் மிகுதியானோர் சிறுகுழுக்களைச் சேர்ந்த முதற்குடி மக்களாவர். (Aboriginal Canadians, are the indigenous peoples within the boundaries of Canada.They comprise the First Nations,Inuit,and Métis. In Section Thirty-five of the Constitution Act, 1982, "Aboriginal peoples of Canada" includes the Indian, Inuit and Métis peoples.)

ஓல்ட் குறோ பிளாட்ஸ், புளுபிஸ் கேவ் போன்ற இடங்களில் மிகப்பழைய குடிமக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் இப்பொழுதும் இருக்கின்றன. அலஸ்கா ஓடை வழியாக அமெரிக்கா வந்து நிரந்தரமாக இவர்கள் தங்கியதாகத் தெரிகின்றது. அதேபோல கிறீன்லாந்து, ஐஸ்லாந்து பகுதி மக்களின் வழித்தோன்றல்களாகச் சிலர் இருப்பதும் தெரியவருகின்றது. புவியியல் ரீதியாக நிலங்கள் ஒன்றுபட்டிருந்த போது இவர்கள் வட அமெரிக்காவில் குடியேறி இருக்கலாம். இல்லாவிட்டால் காலப் போக்கில் பல பகுதிகளில் இருந்தும் படகுகள் மூலமும் இங்கு வந்திருக்கலாம். வரலாறு என்பது இருக்கின்ற நம்பக்கூடிய ஆதாரங்களைக் கொண்டு கணிக்கப்படுவது என்பதால், தற்போது எதைக் கனடிய வரலாறு என்று சொல்கின்றனரோ, அதையேதான் நாங்களும் ஏற்றுக் கொள்கின்றோம்.



தொண்டீஸ்வரம் - புதிய தோற்றம்

கனடா பழங்குடி மக்களைப் பற்றி எழுதும் போது ஈழத்தமிழர் வரலாறும் இப்படித்தான் அரைகுறையாக இருப்பதை அவதானிக்க முடிகின்றது. தங்களோடு தொடர்புடைய பல வரலாற்றுச் சம்பவங்களை தமிழ் மக்கள் ஆவணப் படுத்தாததால் இன்று எதையுமே நிரூபிக்க முடியாமல் இருக்கின்றோம். அலட்சியமும், போட்டி பொறாமையும் இதையெல்லாம் செய்யமுடியாமல் எமது கைகளைக் கட்டிப் போட்டிருக்கின்றன. தமிழரின் சொத்துக்களாக இருந்த பல ஆவணங்களும் வேண்டுமென்றே அழிக்கப்பட்டு விட்டன. அதன் பலனைத்தான் பதவி ஆசை பிடித்தோரின் மத்தியில் வாய்மூடி மௌனமாக நாங்கள் இப்போது அனுபவித்துக் கொண்டிருகின்றோம். யாரை நம்புவது என்று தெரியாத நிலையில் இன்று எதுவுமே செய்ய முடியாத நிலைக்கு நம்மவர்களே எங்களைக் கொண்டுவந்து விட்டு விட்டனர். மிஞ்சியிருக்கும் ஆவணங்களை எப்படி ஆவணப்படுத்தலாம் என்ற சிந்தனையோடே பல ஆண்டுகள் கடந்து விட்டன. சுயநலம் பிடித்தோர் மிகவும் தந்திரமாகத் தொடர்ந்தும் குட்டையைக் குழப்பிக் கொண்டே இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

சென்ற மாதம் சொந்த மண்ணுக்குச் சென்று வர முடிந்தது. கடந்த நாற்பது ஆண்டுகளில் நடந்த முக்கிய மாற்றங்களை அங்கே அவதானிக்க முடிந்தது. மதவாச்சியில் இருந்து காங்கேசந்துறை செல்லும் வரையும் ஏ-9 வீதிக் கரையோரம் எல்லாம் படைகளின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன. எமது மாணவப்பருவத்தில் அனுராதபுரம், மதவாச்சிப் பகுதிகளில் கணிசமான அளவு தமிழ் மக்கள் வாழ்ந்தனர். தற்போது அதையெல்லாம் காண முடியவில்லை, அதற்கான அடையாளங்களும் அங்கே இல்லை. குறிப்பாக வீதியின் வலது பக்கக் கரையோரம் தற்போது இராணுவ, விமானப்படை, பொலீஸ் முகாம்கள் என்று தொடர்ச்சியாகவே இருக்கின்றன.

அனேகமான இடங்களில் வீதித்தடை போட்டிருக்கின்றனர். கனடா என்று சொன்னதும் எந்த மேலதிக விசாரணையும் இன்றி மேற்கொண்டு செல்ல அனுமதிக்கின்றனர். எங்கே சென்றாலும் கடவுச் சீட்டைக் கொண்டு செல்வது பயணிகளுக்குப் பாதுகாப்பானது.

இந்த முகாம்களுக்கு அருகே படையினரின் உறவினர் நடத்தும் உணவகங்களும் இருக்கின்றன. முகாம்களில் உள்ளோரின் தேவைகளுக்கான பொருட்களும், சுற்றுலாப் பயணிகளுக்கான உணவு வகைகளும் இங்கே இருக்கின்றன. தேனீர், கோப்பி, கோக், பன்ரா, ஜின்சரேல் போன்ற குளிர்பான வகைகளும் இங்கே கிடைக்கின்றன. இதைவிட றோள்ஸ், கட்லட், றொட்டி போன்ற உணவு வகைகளும் உண்டு. இந்த உணவகங்களுக்கு அருகே கழிப்பறை வசதியும் உண்டு. மிகவும் தூய்மையாக இடத்தை வைத்திருக்கின்றனர்.

முக்கியமாக இந்த வருடம் சுற்றுலாப் பயணிகளின் வருகை மூலம் கிடைக்கும் வருமானத்தையே அவர்கள் நம்பியிருந்தனர். எதிர்பாராத விதமாக ஏற்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவங்கள் சுற்றுலாத்துறையைப் பெரிதும் பாதித்திருக்கின்றது. ஹோட்டல்களில் விசாரித்தபோது 60 வீதமான வருகை திடீரெனக் குறைந்து விட்டதாக அப்போது தெரிய வந்தது. ஹோட்டல்களிலும் குறிப்பிட்ட உணவு வகைகளையே பெற்றுக்கொள்ள முடிகின்றது. தமிழகத்தில் இருந்து வெளிவரும் கலைமகள் இதழ் நடத்திய இராமரத்தினம் குறுநாவல் போட்டியில் பரிசு பெற்ற எனது குறுநாவலான தாயுமானவர் என்ற குறுநாவலில் நான் ஈழத்தில் உள்ள மிகப்பழைமையான பஞ்ச ஈஸ்வரங்கள் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். எல்லா ஈஸ்வரங்களையும் தரிசித்திருந்தாலும் தொண்டீஸ்வரத்திற்கு உள்ளே சென்று தரிசிக்கும் வாய்ப்பு அப்போது கிடைத்திருக்கவில்லை.

இம்முறை எப்படியாவது அங்கு செல்ல வேண்டும் என்ற விருப்போடு தென்பகுதி நோக்கிப் பயணித்தேன். இது எட்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட ஈஸ்வரமாகும். மாத்தறை மாவட்டத்தில் தேவேந்திரமுனை என்ற இடத்தில் இந்த ஈஸ்வரம் அமைந்திருக்கிறது. தற்போது தெவிநுவர என்று அழைக்கின்றனர். வாகன ஓட்டுனரிடம் இடத்தைப் பற்றிச் சொன்ன போது, தனக்கு இந்த 'தெவிநுவர விஷ்ணு தேவாலய' தெரியும் என்று சொன்னார். போர்த்துக்கேயர் காலத்தில் பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான இந்த சிவாலயம் அழிக்கப்பட்டது. எப்படி புராதன ஆலயமான மாவிட்டபுரம் கட்டிடங்களை இடித்துக் காங்கேசந்துறை கோட்டை அத்திவாரம் போட்டார்களோ, அதேபோல இந்த சிவன் ஆலயமும் அழிக்கப்பட்டு மாத்தறைக் கோட்டை போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்டது. எஞ்சியிருந்த விஷ்ணு தெய்வத்தை இங்குள்ளவர்கள் ரகசியமாக வழிபட்டு வந்தனர். நந்தி அப்படியே இருக்கின்றது. தற்போது இதன் அமைப்பே முற்றாக மாறிவிட்டது. சிங்களக் கலாச்சார முறைப்படி எல்லாம் மாற்றப்பட்டு விட்டன. கட்டிடத்தை நீலநிறமாக மாற்றி இருக்கின்றனர். புத்தபகவானின் மிகப் பெரிய சிலை ஒன்றை எல்லோர் பார்வையிலும் படும்படியாகச் செய்து வைத்திருக்கின்றனர். முருகன் ஆலயத்திற்கு 'கதிர்காம



தொண்டீஸ்வரம் - தேவிநுவர மாத்தறை

தெய்யோ' என்று சிங்களத்தில் எழுதியிருக்கின்றனர். கதிர் காமத்தைப் போலவே இங்கும் மௌன பூசை நடைபெறுகின்றது. தாமரைப் பூக்களையும், பழத்தட்டுக்களையும் ஏந்தியபடி வெள்ளை ஆடை அணிந்த சிங்களப் பெண்களை வரிசையில் காண முடிந்தது. தமிழ் மொழிக்கோ அல்லது ஆங்கில மொழிக்கோ அங்கு ஓர் இடமும் இருக்க இல்லை. தப்பித்தவறி ஒரு தமிழ் எழுத்தைக்கூட அங்கே காண முடிய வில்லை. நன்கு திட்டமிட்டுத் தமிழைத் தவிர்த்திருக்கின்றனர்.


Struggling with 2nd Mortgage...Too much Credit Card debts..?

MORTGAGE ALLIANCE

Mortgage Alliance
1585 Markham Road, Unit 110,
Scarborough, ON. M1B 2W1
Tel 647-350-7050

Get Approved & payoff high interest debts!
• One Mortgage to combine 1st & 2nd mortgage
• Debt Consolidation Mortgage
• Debt Consolidation Credit Line
Call for free consultation

SAM SURENDRAN
Mortgage Broker Lic# 16002312
Direct: 647-922-5704
www. OKmortgages.ca



Corporate Office: Mortgage Alliance, 2005 Sheppard Ave. E. Suite 200, Toronto ON. M2J 5B4 Tel: 1-877-366-3487

# தமிழ் தேசிய கூட்டமைப்பு அரசாங்கத்தை மீண்டும் காப்பாற்றியுள்ளது

**- விகிர்தன் -**

மீண்டும் ஒரு முறை தமிழ் தேசியக் கூட்டமைப்பு ரணில் அரசாங்கத்தை காப்பாற்றியுள்ளது. ஜே.வி.பியினால் அரசாங்கத்திற்கு எதிராகக் கொண்டுவரப் பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களித்ததன் மூலம் ரணில் அரசாங்கம் கவிழ்ந்து விடாமல் அதனைக் காப்பாற்றியுள்ளது கூட்டமைப்பு. முன்னர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட்ட போதும் தமிழ் தேசியக் கூட்டமைப்பே ரணிலை பாதுகாத்தது. இம்முறையும் ரணில் அரசாங்கத்தை காப்பாற்றியிருக்கின்றது.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலை தடுப்பதற்கு இருந்த தனது பொறுப்பை அரசாங்கம் மீறியிருப்பதாகக் கூறி அரசுக்கு எதிராக ஜே.வி.பியினர் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்தனர்.

பயங்கரவாத தாக்குதல்கள் நடத்தப் படலாம் என முற்கூட்டியே புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருந்த போதும் அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஜே.வி.பி சுட்டிக் காட்டியிருந்தது. அரசாங்கம் தனது பொறுப்பை சரிவர மேற்கொள்ளாமை உள்ளடங்கலாக நான்கு பிரதான தலைப்புக்களின் கீழ் 13 குற்றச்சாட்டுகளை ஜே.வி.பி சுமத்தி இருந்தது.

கடந்த 11ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான வாக்கெடுப்பில் ரணில் அரசாங்கம் தப்பிப் பிழைத்தது.

29ஆவது ஆண்டு
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப்பொறுப்பாளர்: விஜய் செல்லையா
தட்டச்சு: கலா விஜயபாலன்
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிவு: Canyon Press Inc.

**Vlambaram Publications Inc.**
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 / FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca / info@vlambaram.com
Web: www.vlambaram.com / www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை 27 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப் பட்டது. நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக 92 வாக்குகளும், எதிராக 119 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

பிரேரணைக்கு ஆதரவாக ஜே.வி.பி மற்றும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உள்ளடங்கலாக 92 பேர் வாக்களித்திருந்தனர். எதிராக ஆளும்




கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 14 உறுப்பினர்களும் வாக்களித்திருந்தனர்.

டக்ளஸ் தேவானந்தா, துமிந்த திஸ்ஸா நாயக்க, சிவசக்தி ஆனந்தன் உள்ளிட்ட 13 பேர் வாக்கெடுப்பில் கலந்துகொள்ள வில்லை. எதிரணியிலுள்ள ஆறுமுகன் தொண்டமான்,முத்துசிவலிங்கம், அங்கஜன் இராமநாதன், காதர் மஸ்தான் மற்றும் வியாழேந்திரன் ஆகியோர் நம்பிகை யில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

ரணில் அரசாங்கத்திற்கு எதிரான இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அளித்த வாக்குகள் மிக முக்கியமானவை. முன்னதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்த நம்பிக்கை யில்லா பிரேரணை தொடர்பில் எவ்வித மான முடிவை எடுக்கப்போகின்றது என்பது தொடர்பில் எதிர்பார்ப்புகள் இருந்தன.

ஜே.வி.பியினர் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தங்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பர் என நம்பிக்கை வெளியிட்டிருந்தனர். மிக முக்கியமான தருணங்களில் ரணில் அரசாங்கத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாதுகாத்த போதும், அரசாங்கம் தமிழ் மக்களுக்காக எதனையும் செய்யவில்லை என்றும் அதனால் இம்முறை தமிழ் தேசியக் கூட்டமைப்பு சரியானதொரு முடிவை எடுக்கும் என்றும் தமிழ் மக்கள் சிலர் எதிர்பார்த்திருந்தனர்.

குறிப்பாக காணாமலாக்கப்பட்டோரின் உறவினர் இவ்வாறானதொரு எதிர் பார்ப்பினை வைத்திருந்தனர். அண்மைக் காலங்களில் தங்களின் பிரச்சினையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எதனையும் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டை அவர்கள் தொடர்ச்சியாக வெளியிட்டு வந்துள்ளனர். இம்முறையாயினும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு காணாமலாக்கப் பட்டோர் தொடர்பாகவும், அரசியல் கைதிகள் தொடர்பாகவும் ரணில் அரசாங்கத்துடன் உறுதியானதொரு பேரம் பேசுதலை மேற்கொள்ளலாம் என்ற எதிர்பார்ப்பு பொதுவாகக் காணப்பட்டது. ஆனாலும். இவற்றை விடுத்து கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவது தொடர்பான விடயத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேரம் பேசியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் இது தொடர்பில் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கை யில்லாத் தீர்மானத்திற்கு எதிராக வாக் களித்தமையின் மூலம் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் தரமுயர்த்தல் செயற்பாடுகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள் ளதாக சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கல்முனை வடக்குப் பிரதேச செயலகத் தின் தரமுயர்த்தல் செயற்பாடுகளை துரித கதியில் மேற்கொள்ள அரசாங்கம் உறுதி யளித்துள்ளதாகவும், முதற்கட்டமாக நிதி அதிகாரம் வழங்கும் அனைத்து நடவடிக் கைகளும் பூர்த்தி செய்யப் பட்டுள்ள தாகவும் அவர் தெரிவித்தார். இந்த நம்பிக்கையில்லா பிரேரணைக்கான வாக் கெடுப்பு நடைபெற்று முடிந்த அன்றே இதனை அவர் வெளிப்படுத்திருந்தார். தொடர்ந்து, ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திசாநாயக்கவும் இது குறித்து கருத்து வெளியிட்டுள்ளார். கல்முனை வடக்கு பிரதேச சபை விவகாரம் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எழுத்து மூலம் தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கு உத்தரவாதம் கொடுத்தே அவர்களின் வாக்குகளை பெற்றுக்கொண்டார் என அவர் தெரிவித்துள்ளார். ரணில் விக்கிரம சிங்க வழமைபோன்று கப்பம் கொடுத்தே நம்பிக்கையில்லா பிரேரணையை வெற்றி கொண்டார் என்றும் அநுரகுமார திசா நாயக்க குற்றம்சாட்டியுள்ளார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும், எதிர்க்கட்சி தலைவர் மஹிந்த ராஜபக்ஷவும் சரியான ஒரு தீர்மானம் எடுத்திருந்தால் இந்த நம்பிக் கையில்லா பிரேரணையை வெற்றி கொண்டிருக்க முடியும் என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

இது இவ்வாறிருக்க, தமிழ் தேசியக் கூட்டமைப்பு இம்முறை மேலும் கடுமை யான பேரம் பேசுதலை மேற்கொண்டிருக் கலாம் என்கின்ற விமர்சனம் தமிழ் தரப்பினரால் முன்வைக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் குறிப்பாக, ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக கொண்டுவரப் பட்ட நம்பிக்கையில்லா பிரேரணையின் போதே இந்தப் பேரம் பேசுதலை செய்தி ருக்கலாம். ஓர் இக்கட்டான நிலையில் அப்போது பிரதமர் ரணில் விக்கிர மசிங்கவின் நிலைமை இருந்தது. ஆனால் அப்போது பிரயோசனமான எந்தவொரு பேரம் பேசுதலையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்ளவில்லை.

இம்முறை கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம் தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க தமிழ் தேசியக் கூட்டமைப் பிற்கு உறுதிப்பாடு ஒன்றை வழங்கியுள்ள தாகக் தெரியவருகின்றது. இது ஒரு சாதாரண பேரம் பேசுதல் என்ற விமர்சனம் முன்வைக்கப்பட்டாலும், பல வருடங்களாக கல்முனை வடக்கு தமிழ் மக்கள் முன் வைத்துவரும் கோரிக்கைக்கும், கடந்த மாதம் மேற்கொண்ட போராட்டத்திற்கும் கிடைத்த வெற்றியாகவே கல்முனை வடக்கு தமிழ் மக்கள் இதனைப் பார்க்கின்றனர்.


கல்முனை வடக்கு பிரதேச செயல கத்திற்கு முழு அதிகாரம் கொண்ட கணக் காளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் அப்பிரதேச மக்கள் மகிழ்ச்சி வெளி யிட்டுள்ளனர். இவ்வறிவித்தல் வெளியான கடந்த 11ஆம் திகதி மாலை கல்முனை நகரில் தமிழ் இளைஞர் பட்டாசுக் கொளுத்தி தங்களது மகிழ்ச்சியை வெளிப் படுத்தியுள்ளனர். தமிழ் தேசியக் கூட்ட மைப்பினரின் இந்த நகர்வு குறித்து கல்முனை வடக்கு தமிழ் மக்கள் திருப்தியடைந்துள்ளனர்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்துமாறு கோரி கடந்த மாதம் பௌத்த பிக்குகள் தலைமையில் மதகுரு மார்கள் முன்னெடுத்த உண்ணா விரதப் போராட்டம் மிகப் பரபரப்பானதாக அமைந் தது. இதன்போது ரணில் அரசாங்கம் சாதகமான வாக்குறுதியை வழங்கியதை அடுத்தே போராட்டம் இடை நிறுத்தப் பட்டது. கல்முனை பிரதேச செயலகத்தை தரமுயர்த்தும் நடவடிக்கைகளுக்கு ஒரு

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்...)

# மெல்லக் கொல்லும் கழிவுகள்

## நாடும் நடப்பும் - 13



சி. நற்குணலிங்கம்
நெல்லியடி - இலங்கை

சூழலுடன் நேரடியாகவும், மறைமுகமாகவும் இடைத்தாக்கம் செய்துகொண்டு வாழ்ந்து வரும் மனிதன், சிந்தனையற்ற முறையில் வாழ்ந்து வருகின்றான். மனம் போன போக்கில் மக்கள் செயற்பட்டுக் கொண் டிருப்பதால் அழிவு என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக உள்ளது. சூழலைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பை அந் தந்தப் பகுதியில் வாழும் மக்களே ஏற்க வேண்டும் என்பதிலிருந்து மக்கள் விலகிச் செல்கின்றனர். சுற்றாடலானது பல வளங் களுடன் பின்னிப் பிணைந்துள்ளது. நாம் சுற்றாடலைப் பாதுகாப்பதன் மூலம் வளங்கள் பேணப்படுகின்றன. சுற்றாடலுக்கு எம்மால் ஏற்படுத்தப்படும் மாசுக்கள், எம்மை மாசடையச் செய்கின்றது. எமது சமனிலையிலும் மாற்றத்தை ஏற்படுத்து கின்றது. இவை பற்றி தெரிந்தும்கூட நாம் சுற்றாடலை மதிப்பதில்லை.

மனிதனால் சுற்றாடலுக்கு தினமும் சேர்க் கப்படுகின்ற குப்பைகள், கழிவுகளின் அளவு அதிகரித்துச் செல்கின்றது. எதிர் காலத்திலும் எதிர் நோக்க வேண்டிய பிரதான பிரச்சனைகளில் ஒன்றாக இந்தப் பிரச்சனையைக் குறிப்பிடலாம். இலங் கையில் ஒரு நாளுக்கு உற்பத்தி செய்யப் படுகின்ற குப்பைகளின் அளவு 2740 மெற்றிக்தொன் என்பதிலிருந்து இதனை விளங்கிக் கொள்ளலாம். மக்களால் கழிவுப் பொருள்கள் ஒழுங்கற்ற முறையில் சில பகுதிகளில் கொட்டப்படும் காரணத்தால் அங்கு வீசும் காற்றால் சூழல் மாசடை கின்றது. வடிகால்களில் கழிவு நீர் அகற்றப் படாத நிலையில் துர் நாற்றம் வீசுவதும் காற்றால் சூழல் மாசடைகின்றது. அத்துடன் இதனால் நுளம்புகள் பெருக்கமடைந்து நோய் வருவதற்கான அறிகுறிகளும், சுவாச நோய்களும் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரித வண்ணம் உள்ளது.

குப்பைகள், கழிவுப் பொருள்கள் கண்ட இடங்களிலும் கண்டபாட்டுக்கு கொட்டப்படு வதால் இவை விலங்குகளாலும், பறவைக ளாலும் போக்குவரத்துப் பாதைகளில் சிந் தப்படுவதாலும் மக்கள் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இன்று கழிவுகள், குப்பைகளால் என்றுமில்லாத அளவில் சுற்றுச்சூழல் மாசடைதல், இயற்கை வளங்களின் பேரிழப்பு, நஞ்சுப் பொருள்கள் குவிதல், காடுகளின் அழிவு, மற்றும் அவற்றினால் ஏற்படும் பேரழிவு, நிலம் மற்றும் நிலத்தடி நீர் மாசடைதல் போன்றன மனித மற்றும் இதர உயிரினங் களுக்கும் ஆபத்தை ஏற்படுத்துகின்றன.



குப்பைகள், கழிவுகள் அடித்துச் செல்லப் பட்டு மீண்டும் சுத்தம் செய்யப்பட்ட பகுதிகளை அசுத்தமாக்கி மீளவும் சுத்தம் செய்ய வேண்டிய தேவைப்பாட்டை தோற்று வித்தல், ஊறுவிளைவிக்கும் பூச்சிகளை ஈர்த்தல், மற்றும் ஒழுங்கற்ற குப்பை நிரப்பு நிலங்களில் பொதுவாக கிடைக்கப்பெறும் பக்க விளைவுப் பொருளான மெதேன் வாயு, காபனீரொக்சைட் வாயு போன்றவை, மேலும் சரியாக வடிவமைக்காத, சரியாக நிர்வகிக்காத நிலப்பகுதிகளில் குப்பைகள், கழிவுகள் வீசப்படுவதால் பல வகையான எதிரிடையான சுற்றுச் சூழல் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. எதிர் காற்றுக்கு உட்படும் கழிவுப் பொருள்களை காற்றிலா முறையில் மக்கி உருச்சிதைக்கும் போது உற்பத்தி யாகின்றன. இவ் வளியானது இந்தப் பகுதியால் மக்கள் செல்ல முடியாத, அண்மித்து வாழ முடியாத நிலையை உருவாக்குவதுடன் இவ் வளியின் துர்நாற்ற மானது மேற்பரப்பில் தாவரங்களின் வளர்ச்சியையும் குன்ற வைக்கும் தன்மை கொண்டது. எனவே குப்பைகள், கழிவு களை வீசும், கொட்டும் விடயத்தில் மக்கள் மிகவும் அவதானத்துடன் நடந்து கொள் ளாமை வருந்தத் தக்கதாக உள்ளது. இது மக்கள் தமக்குத் தாமே தீமையை ஏற்படுத்துவதாக உள்ளது.

கழிவுப்பொருள்களை ஒழுங்கற்ற முறையில் வீசுவதால் பல்வேறு வகையான பிரச்சி னைகள், நோய்கள் என்பவற்றுக்கு மக்கள் முகங்கொடுக்கின்றனர். இப்பிரச்சினை மக்க

(தொடர்ச்சி 19ஆம் பக்கம்...)



# கனடிய..

01ஆம் பக்கத்தொடர்ச்சி

இரண்டு வருடங்கள் முடிவடைந்து விட்டன. ஆனால் இன்னமும் கனடிய மாகாணங்களுக்கு இடையே வர்த்தகம் செய்யப் பலவிதமான நிர்வாகத் தடைகள் உள்ளன. கனடிய அரச அறிக்கை ஒன்றின்படி கனடிய மாகாணங்களுக்கு இடையே உள்ள கட்டுப்பாடுகள் வருடம் தோறும் $130 பில்லியனைக் கனடியப் பொருளாதாரத்தில் வீணடிக்கின்றன.

CBC ஊடகத்திற்கு வழங்கிய பேட்டியில் Perrin Beatty நாடுகளுக்கு இடையே இல்லாத அளவு மோசமான நிர்வாகத் தடைகள் கனடாவிற்கு உள்ளே மாகாணங்களுக்கு இடையே வர்த்தகம் செய்ய விதிக்கப்பட்டுள்ளன. இது ஒரு மிகவும் வெட்கக்கேடான விடயம். குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியத்தில் நாடுகளுக்கு இடையே வர்த்தகம் செய்யக்கூட இவ்வாறான நிர்வாகத்தடைகள் இல்லை. சில வர்த்தகங்கள் எமக்கு மற்றைய நாடுகளுடன் செய்வது மற்றைய மாகாணத்துடன் வர்த்தகம் செய்வதைவிட இலகுவாக உள்ளது. ஒன்ராரியோ மாகாணத்தில் உள்ள ஒருவர் குறிப்பிட்டளவு வைன் (Wine)ஐயே பிரிட்டிஸ் கொலம்பியா மாகாணத்தில் இருந்து இறக்குமதி செய்ய முடியும்.

ஒரு பாரவண்டி ஓட்டுனர் தனது வண்டியை கனடாவின் மாகாணங்கள், பிரதேசங்களுக்கு இடையே செலுத்துவதற்கு 13 விதமான சட்டதிட்டங்கள், கட்டுப்பாடுகளுக்கு உட்பட வேண்டும் என்றார். இதனால் Perrin Beatty வர்த்தகர்கள் சார்பில் 13 முதல்வர்களையும் பின்வரும் ஆறு விடயங்களை அமல்படுத்துமாறு கேட்டிருந்தார்.

● ஒருவர் கனடாவில் ஓரிடத்தில் பெற்ற தொழில்முறைத் தகுதிகளை (Professional Qualifications) அனைத்து மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களுக்கும் இடையே அங்கீகரியுங்கள்.

● கனடா முழுவதும் தொழிலாளர்களும் பொருட்களும் சுயாதீனமாக இயங்கக் கூடியவாறு மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களுக்கு இடையே வேறுபடும் சட்டவிதிகள் மற்றும் கட்டுப்பாடுகளை தளர்த்துங்கள்.

● மாகாணங்கள் மற்றும் பிரதேங்களுக்கு இடையே தொழிலாளர்களும் பொருட்களும் சுயாதீனமாக இயங்கும் நோக்கத்துடன் நீங்கள் இனி அமலாக்கும் ஒவ்வொரு புதிய விதிகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்குப் பழைய நடைமுறையில் உள்ள இரண்டு விதிகள் மற்றும் கட்டுப்பாடுகளை நீக்குவோம் என உறுதி பூணுங்கள்.

● 2025ஆம் ஆண்டுக்குள் உங்கள் மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களின் வரவு செலவுத் திட்டத்தை சமப்படுத்த ஓர் உறுதியான திட்டத்தை அமல்படுத்துங்கள்.

● முன்னேற்றம் அடையாத சிறு கிராமங்கள் உட்பட கனடா முழுவதும் அதிவேக இணையத்தள சேவையை உருவாக்குங்கள்.

● இன்றைய மற்றும் எதிர்காலப் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றவாறு கல்வித் திட்டம் மற்றும் தொழில் பயிற்சியை ஏற்படுத்தத் தற்போதைய தொழில்துறை நிபுணர்களுடன் கலந்து ஆலோசித்து அரசாங்கத்திட்டங்களை உருவாக்குங்கள்.

முதல்வர்களுக்கு இடையேயான கூட்டமைப்பின் ஒவ்வொரு மாநாடுகளின் போது வழங்கும் வெற்று வாக்குறுதிகள் போலல்லாது இம்முறை இவற்றை நடைமுறைப் படுத்துங்கள் என Perrin Beatty முதல்வர்களைக் கேட்டிருந்தார்.

ஜூலை 9இல் இருந்து 11வரை சஸ்கச்சுவான் மாகாணத்தில் நடைபெற்ற முதல்வர்களின் கூட்டமைப்பு மாநாட்டில் பங்குபற்றிய முதல்வர்கள்:

Jason Kenney - அல்பேட்டா - ஐக்கிய பழமைவாதக்கட்சி
Dennis King - பிரின்ஸ் எட்வேர்ட்தீவு - PEI பழமைவாதக்கட்சி
Blaine Higgs - நியூபிரண்ஸ்விக் - NB பழமைவாதக்கட்சி
Francois Legault - குவிபெக் - Coalition Avenir Quebec கட்சி
Doug Ford - ஒன்ராரியோ - ON பழமைவாதக்கட்சி
Brian Pallister - மனிற்ரோபா - MB பழமைவாதக்கட்சி
Scott Moe - சஸ்கச்சுவான் - சஸ்கச்சுவான்கட்சி
Dwight Ball - நியூபவுண்லான்ட் & லபிரடோர் - NL லிபரல்கட்சி
Stephen MeNeil - நோவாஸ்கோசியா - N லிபரல்கட்சி
Sandy Silver - யுகோன் - YT - லிபரல்கட்சி
John Horgan - பிரிட்டிஸ் கொலம்பியா - BC புதிய ஜனநாயகக்கட்சி
Bob Mcleod - வடமேற்கு பிரதேசம் - ஒருமித்த அரசு (Consensus Governement)
Joe Savikataaq - நுணாவிற் - ஒருமித்த அரசு

முதல்வர் Jason Kenney நான்கு பழமைவாதக் கட்சி முதல்வர்களை (ஒன்ராரியோ, நியூ பிரண்ஸ்விக், சஸ்கச்சுவான் மற்றும்



வடமேற்குப் பிரதேசம்) கல்ஹகரியில் தற்போது நடைபெறும் Stampede விழாவிற்கு அழைத்துக் கலந்துரையாடினார். முதல்வர் Dwight Ball ஊடகவியலாளர்களுக்குத் தெரிவிக்கையில் லிபரல் கட்சி முதல்வர்களின் எண்ணிக்கைக் குறைவு தமக்கு கரிசனையாக இல்லை. ஆனால் இம்முறை ஒரு பெண் முதல்வரும் இந்தக் கூட்டமைப்பில் இல்லாதது மிகுந்த மனவருத்தத்தைத் தருகிறது என்றார்.

மாநாட்டு இறுதியில் வெளியிடப்பட்ட அறிக்கையில், அனைத்துக் கனடியர்களுக்கும் நிரந்தர உயர்தர சுகாதார சேவை வழங்க எல்லா முதல்வர்களும் உறுதி பூண்டுள்ளனர். அனைத்து மாகாணங்களும் பிரதேசங்களும் மனவள ஆரோக்கியத்தில் (mental health) குறிப்பாகக் கவனம் செலுத்தப்படும். அத்துடன் மாகாணங்களுக்கு இடையே CFTAஐ அமல்படுத்தத் தடையாக உள்ள நிர்வாகச் சட்டமூலங்களை நீக்க நடவடிக்கைகள் எடுக்க முதல்வர்களின் கூட்டமைப்பு உறுதி பூண்டுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

Jason Kenney மற்றைய மாகாணங்கள் அல்பேட்டா மாகாணத்துடன் பொருட்கள் மற்றும் ஒப்பந்தங்கள் கொள்முதல் (Procurement) செய்யத் தடையாக இருக்கும் சில விதிமுறைகளை உடனடியாகத் தளர்த்துவதாக உறுதி அளித்தார். இதே வேளை, சில விடயங்களில் மாகாண முதல்வர்களுக்கு இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு எந்த ஒரு முடிவும் எடுக்கப் படவில்லை. எண்ணை கொண்டுசெல்லக் கனடாவின் கிழக்குக்கரையை நோக்கி அமைக்க இருக்கும் எண்ணைக் குழாய்கள் தொடர்பாக அல்பேட்டா மற்றும் சஸ்கச்சுவான் மாகாணங்களுக்கு இடையே ஒற்றுமையும் குவிபெக் மாகாணத்தின் தீவிர எதிர்ப்பும் மாநாட்டில் வெளிப்படையாகத் தெரிந்தது. குவிபெக் மாகாணம் பல பில்லியன் டொலர் உதவிப்



முதற் குடிமக்களின் தலைவர்களை சஸ்கச்சுவான் மாகாணத்தில் உள்ள பிரின்ஸ் அல்பேர்ட் நகரிற்கு அண்மையில் உள்ள முதற் குடிமக்களின் இடத்தில் 2019 ஜூலை 9இல் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னரே கனடிய முதல்வர்களது கூட்டமைப்பின் மாநாடு ஆரம்பமானது.

கனடிய முதல்வர்களது கூட்டமைப்பு மாநாடு தொடங்க முன்னர் அல்பேட்டா

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)







# உலகப் பணக்காரர்

சீன இனத்தவரின் தனிநபர் வருமானம் குறைவாக இருக்கலாம். இதற்கு சனத் தொகை, அந்த நாட்டின் பணத்தின் பெறுமதி காரணமாகலாம். ஆனாலும் அவர்களில் உலகப் பணக்காரர்களின் எண்ணிக்கை மற்றைய எந்த நாடு களையும் விட மிகவும் அதிகமானதாகும்.

பொதுவாக ஆகக்கூடிய அதி பணக் காரர்கள் அல்லது பில்லியனர்கள் (Billio naire) அதிகமாக வாழும் நாடு எது வென்று கேட்டால் எமது பதில் அமெரிக் காவாகத்தான் இருக்கும். ஆனால் இது இப்போ பிழைத்து விட்டது.

இன்றைய கணக்கின்படி, உலகில் அதிக கூடிய பில்லியனர்கள் வாழும் நாடு சீனா. இங்கு 658 பில்லியனர்கள் (1000 மில் லியன் = 1 பில்லியன்) வாழ்கின்றனர். ஆனால் அமெரிக்காவில் 584 மட்டுமே. 2017இன் ஆரம்ப பகுதியில் சீனாவில் 65,000 குடும்பங்கள் 30 மில்லியன் டொலருக்கும் அதிகமான பெறுமதியைக் கொண்டிருந்தனர். அத்துடன் 99,000 குடும்பங்கள் 15 மில்லியன் டொலருக்கும் அதிகமான பணத்தை கொண்டிருந்தனர். தற்போது மேலும் 1.5 மில்லியன் குடும்பங்கள் 15 மில்லியன் டொலருக்கும் அதிகமான பணத்தை தமதாக்கியுள்ளனர்.

சீனர்களில் ஏறக்குறைய 40 வீதமானோர் மேல் நாட்டிற்குப் புலம்பெயர விரும்பு வதாகக் ஜூன் 2018இல் வெளிவந்த



தகவல்கள் தெரிவிக்கின்றன.
முன்னை காலங்களில் அதிகமானோர் அமெரிக்காவுக்கே சென்றனர். ஆனால் இன்றைய கால கட்டத்தில் விசா (EB – 5 விசா) பெறுவதற்கு ஏழத்தாழ 10 வருடங்கள் பொறுத்திருக்க வேண்டி யுள்ளது. இதனால் வேறு நாடுகளை இவர்கள் தெரிவு செய்கின்றனர். இதில் கனடாவும் முக்கிய இடம்பெறுகின்றன. ஐரோப்பாவும் சில நாடுகளும் முதலீடு செய்து விசா பெறும் முறையை இப்பொழுது நடைமுறைப்படுத்த தொடங் கியுள்ளது. உதாரணமாக கிறீஸ் ( Greece), ஸ்பெின் (Spain), போர்த்துக்கல் (Portugal) மற்றும் மோல்ரா (Molta) வை குறிப்பிடலாம்.

முக்கியமாகப் பசுபிக் தீவு நாடான Vanatuஇல் ஒருவர் 150,000 டொலர் முதலீடு செய்வதன் மூலம் கடவுச்சீட்டைப் பெறுவதுடன் அந்த நாட்டின் குடியுரி மையும் கிடைக்கிறது. அதில் முக்கியம் என்னவென்றால் சீனாவின் 90%ஆன High Net Worth Indivtual (HNWI) பிள்ளைகளுடன் வெளிநாடுகளுக்கு சென் றதாலும் பின்னைய காலத்தில் அவர்கள் சொந்த நாட்டிற்குத் திரும்புவதாகத் தெரிய வருகிறது.

முக்கியமாக இவர்கள் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்வதன் நோக்கம் பிள்ளை களிற்கு சிறந்த படிப்பு (Education), திறமான வாழ்க்கை, கலப்படமின்றி சுவாசிக்க கூடிய காற்று, சமூக சூழ் நிலை, ஆரோக்கியம் கொடுக்கக் கூடிய வசதிகள் என நிறைய காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. எனினும் எதிர் காலத்தில் சீனாவில் நடைபெற இருக்கும் மாற்றங்கள் மூலமே புதிய சமுதாயம் உருவாகலாம்.

---

# கனடிய..

10ஆம் பக்கத்தொடர்ச்சி

பணத்தை மத்திய அரசில் இருந்து பெறுவதும் அப்பணத்தை மத்திய அரசுக்கு அல்பேட்டா மாகாணமே பெரு மளவு வழங்குவதைச் சுட்டிக்காட்டிய அல்பேட்டா முதல்வர், “எமது சக்தி வளத்தால் பயன் அடைவோர் அந்தச் சக்தி வளத்தை முன்னேற்ற உதவ வேண்டும்” என்றார்.

முதல்வர்கள் எல்லோரும் ஒற்றுமையாக மத்திய அரசிடம் சுகாதார சேவைகளுக்கு மாகாண அரசிற்கு வழங்கும் மானியம் வருடம் தோறும் 5.2 %ஆல் அதிகரிக் கப்பட வேண்டுமென்று கோரிக்கை விட்டனர். தற்போது இது வருடம் தோறும் 3%ஆலேயே அதிகரிக்கப்படுகிறது. அவர்கள் கனடிய மத்திய அரசு, அமெரிக்க அரசிடம் அமெரிக்க உற் பத்திகளை மட்டுமே வாங்க வேண்டும் என்ற அதன் கொள்கைக்குக் கனடிய உற்பத்திகளுக்கு விதிவிலக்குப் பெறுவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த



வேண்டும் என்றனர். அடுத்த முதல் வர்களின் மாநாடு குவிபெக் மாகாணத்தில் 2020ஆம் ஆண்டு ஜுலை 22இல் இருந்து 24 வரை நடைபெறும்.

> நன்றாகவும், கவனமாகவும்
> செய்யப்பெற்ற காரியங்களைப் பற்றி
> அஞ்ச வேண்டியதில்லை.
> \- ஷேக்ஸ்பியர்

# இன்னல் நீக்கும் இயற்கை - 53



- அகணி -
authorakani@gmail.com

அன்பான விளம்பரம் வாசகர்களே!

ரெய்கியைத் தாவரங்களுக்கும், எல்லா உயிரினங்களுக்கும் செய்து அவற்றின் ஆரோக்கியத்திற்கு உதவலாம். ரெய்கியை ஒருவிதமான ஆன்மீக சிகிச்சை முறையென்றும் குறிப்பிடலாம். ஆனால் இது எந்த மதமும் சார்ந்தது அல்ல. பிரபஞ்ச சக்தியைப் பயன்படுத்தி நமக்கு வேண்டியவர்களின் ஆரோக்கியத்திற்கு உதவுவதற்கு நமக்குக் கிடைத்த அரிய வழிவகையாகப் பார்க்கலாம். ஒரு குருவின் மூலமாக ஒருவர் தனக்குள் இருக்கும் தேவையற்ற எண்ணங்களைத் தூய்மைப்படுத்திக் கொண்டு ஒருவிதமான தீட்சை பெற்று பிரபஞ்ச சக்தியை உள்வாங்கி அதனைக் கைகள் மூலமாக வெளிக்கொணர்ந்து உள்ளங்கைகளில் அந்தச் சக்தியை உணர்ந்து அந்தச் சக்தியோடு சில மந்திரங்களையும் சேர்த்து தனக்குத் தானே சக்தி அளித்துக் கொள்ளலாம். உடல் முழுவதும் வியாபித்து இருக்கும் ஏழு சக்கரங்களுக்கும், கண், காது, கழுத்து, தோள், கை, கால் என்று உடலின் எல்லாப் பாகங்களுக்கும் மந்திரம் சொல்லி சக்தி கொடுத்து வாழ்நாள் முழுவதும் ஆரோக்கியத்துடன் இருக்க முடியும். ரெய்கிக் குறியீடுகளையே இங்கே மந்திரம் என்று குறிப்பிட்டுள்ளேன். இந்தக் குறியீடுகளை மனதில் நினைத்து காற்றில் வரைந்து நமது குருவையும், முன்னோர்களையும் வணங்கித் தியானம் செய்து கொண்டு ஆகாயத்தில் இருந்து பிரபஞ்ச சக்தியை உள்வாங்கிக் கொள்வதால் ரெய்கியை வழங்குவதற்கான வலு ஏற்பட்டு விடுகிறது. அடிப்படையில் சோ-கூ-ரே, சாய்-காய்-கே, ஹொன்-ஸ-ஸோ-னென் என்ற மூன்று குறியீடுகளைப் பயன்படுத்துவர். நான்காவது குறியீடான ஹோசன்னா என்பதை சுத்தப்படுத்துவதற்குப் பயன்படுத்துவர்.

சோ-கூ-ரே என்ற ரெய்கி குறியீடு அல்லது மந்திரம் எல்லாவற்றுக்கும் பயன்படுத்தப்படும் பொதுவான மந்திரம். இது மிகவும் சக்தி வாய்ந்த மந்திரமாகக் கருதப்படுகிறது. இதன்மூலம் மிகவும் சக்தி வாய்ந்த பிரபஞ்ச சக்தியை உடலின் மீதும், நாம் பயன்படுத்தப்படும் எந்த பொருளின் மீதும் பரவச் செய்யலாம். இந்த மந்திரத்தை வாயால் சொல்லியும், கையால் 'குறியீடாக வரைந்தும் கொள்ளும் பொழுது பிரபஞ்ச சக்தி ஊட்டப்படுகின்றது. நாங்கள் மனதில் மிகவும் முக்கியமாக பதியச் செய்ய வேண்டிய விடயம் ரெய்கியை நல்ல நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப் பட முடியும்.

சாய்-காய்-கே என்ற இரண்டாவது ரெய்கி மந்திரம் அல்லது குறியீடு சுய கட்டுப்பாடு, மனவுறுதி, தன்னம்பிக்கை போன்றவற்றை அளிக்கின்றது. நினைவாற்றல், அறிவுத்திறன் போன்றவற்றை அளிக்கின்றது.




ஹொன்-ஸ-ஸோ-னென் என்ற மந்திரம் அல்லது குறியீடு ஏனைய மந்திரங்களை விடவும் நீளமானது. தொலைதூர சிகிச்சையில் பயன்படுத்தப்படுகின்றது. நமது கர்ம வினையை நீக்கவும் பயன்படுத்தப்படுவதாகக் கூறப்படுகின்றது. நாள்பட்ட வியாதிகள், முதுகுவலி, கால்வலி போன்ற பல பிரச்சினைகளுக்குப் பயன்படுத்தலாம். உலகத்தின் எங்கோ ஒரு மூலையில் இருப்போருக்கு மூன்றாவது கண் மூலம் தொடர்பினை ஏற்படுத்தி, பிரபஞ்ச சக்தியை அளித்து அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உதவலாம். நாம் சிகிச்சை அளிக்க வேண்டியோருடன் தொலைபேசி மூலம் தொடர்பினை ஏற்படுத்தி உரையாடி, கை, கால் அசையாது ஓர் இடத்தில் அமர்ந்திருக்கச் செய்து, அல்லது படுக்க வைத்தபின்பு நமக்கு முன்னே அவர்கள் இருப்பதாகக் கற்பனை செய்துகொண்டு சுத்தம் செய்யும் மந்திரம் அல்லது குறியீடு மூலம் சுத்தப்படுத்தி விட்டு ஏனைய மந்திரங்கள் அல்லது குறியீடுகள் மூலம் பிரபஞ்ச சக்தியை வழங்கலாம்.

ஹோசன்னா என்ற மந்திரம் அல்லது குறியீடு உடலையும், நாமிருக்கும் இடத்தைச் சுத்தப்படுத்தவும் பயன்படுத்தலாம். ரெய்கி உடலுக்கும், மனதுக்கும், வாழ்க்கைக்கும் எண்ணற்ற பலன்களைக் கொடுப்பதால் வாழவைக்கும் வாழ்க்கைக் கலை என்று கருதப்படுகின்றது.

தொலைதூரத்தில் உள்ளவர்களுக்கும் நாம் இருக்குமிடத்தில் இருந்து காற்று மண்டலத்தினூடாகவும், மூன்றாம் கண்ணூடாகவும் ரெய்கி சக்தியை அனுப்பி ரெய்கி சிகிச்சையை வழங்கமுடியும். ரெய்கி சக்தியை சிகிச்சையாக மட்டும் பயன்படுத்த வேண்டியதில்லை. நாங்கள் எடுத்துக் கொள்ளும் உணவு, மருந்து போன்றவற்றிற்கும் ரெய்கி சக்தியைக் கொடுத்து அதன் பின்பு சாப்பிடும் பொழுது நல்ல பலன் ஏற்படும் என்று சொல்லப்படுகின்றது. நாங்கள் பயணம் செய்யும் வாகனம், பரீட்சை எழுதும் பேனா என்று பல பொருட்களுக்கும் ரெய்கி சிகிச்சையை வழங்கிப் பயனடைகின்றனர் என்று சொல்லப்படுகின்றது. காணாமல் போன பொருட்களைக் கண்டறிவதற்குக் கூட ரெய்கி சக்தி பயன்படுத்தப்படுகின்றது. கலாநிதி மிகாவ் உசாயி மூன்று குறியீடுகளை தெய்வசக்தியால் கண்டறிந்தாரென்றும், பின்பு அவர் வழி வந்த ரெய்கி பயிற்சியாளர்கள் மேலும் சில குறியீடுகளைக் கண்டறிந்து விரிவுபடுத்தியுள்ளனர்.

உடலில் உள்ள ஏழு சக்கரங்களை சமநிலையில் வைத்திருந்தால் உடல் ஆரோக்கியமாக இருக்கும். மனதைச் சுத்தப்படுத்துவதற்கு ஸோஹம் என்ற மந்திரத்தைப் பயன்படுத்தலாம். தலை உச்சி சிகரம் நரம்பு மண்டலத்தை ஆட்சி செய்கிறது. நெற்றி சக்கரம் சுய கட்டுப்பாடு, மனவுறுதி, போன்றவற்றை அளிக்கின்றது. தொண்டை சக்கரம் நோய் எதிர்ப்புச் சக்தியைக் கொடுக்கின்றது. இருதய சக்கரம் அன்பு செலுத்தும் தன்மையைக் கொடுக்கின்றது. வயிற்றுச் சக்கரம் ஜீரண சக்தியைக் கொடுக்கின்றது. தொப்புளடிச் சக்கரம் இனவிருத்தியுடன் தொடர்புடையது. மூலாதார சக்கரம் எலும்பு மண்டலத்தைப் பாதுகாக்கின்றது. இந்த ஏழு சக்கரங்கள் உடலின் ஆரோக்கியத்தில் முக்கிய பங்கை வகிக்கின்றன.

ஒவ்வொரு உடலைச் சுற்றியும் இருக்கும் சூட்சும சக்தியை ஆரா (Aura) என்றழைப்பர். தியானப் பயிற்சியை ஒழுங்காகச் செய்து வரும்பொழுது இந்த ஆரா தெளிவானதாகவும், பெரிதானதாகவும் புலப்படும். இது ஒருவரில் உள்ள நேர்மறையான சக்தியைக் காட்டி நிற்கும். நாம் ஒரு கண்ணாடி முன்னே நின்று வைத்த கண் விலகாது நமது விம்பத்தை கண்ணாடியில் பார்க்கும் பொழுது எமது ஆரா தலையைச் சுற்றியிருப்பதைக் காணலாம். எம்மைச் சுற்றி அதிகமான நேர்மறையான சக்திகள் இருக்கும் பொழுது நமது ஆரோக்கியமும் நன்றாகவிருக்கும்.

அடுத்த இதழிலும் எனது தேடலில் கிடைக்கும் புதிய தகவல்களுடன் தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணங்களையும் தெரியப்படுத்துங்கள். மீண்டும் சந்திப்போம் என்று கூறி விடைபெறுகின்றேன்.

நாமும் நன்றாக வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும்.

**அன்பான விளம்பரம் வாசகர்களே!**

இயற்கை வளங்களால் எவ்வாறு இன்னல் நீங்கி வாழலாம் என்று அறியும் பொருட்டு எழுந்த தேடலில் கிடைத்த தகவல் பதிவாக அசைந்து கொண்டிருக்கும் இந்தத் தொடர் கட்டுரை எமது பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் எழுதப்படுகின்றது. இந்தக் கட்டுரையில் கூறப்படும் கருத்துக்கள் இயற்கை சார்ந்து இருந்தாலும் உங்கள் உடல்நிலைக்கேற்ப பொருத்தமான மருத்துவ கருத்துக்களாக அமைந்துவிடாது என்பதை கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் பொருத்தமான வைத்திய ஆலோசனையை மேற்கொள்ளுங்கள் என்று வலியுறுத்திக் கூறிக்கொள்கின்றேன். ஆனாலும் நாம் இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கான தகவலையும், விழிப்புணர்வையும், ஆரோக்கியமாக வாழ்வதற்கு வேண்டிய பொதுவறிவையும் இந்தக் கட்டுரை வழங்கும் என்று நம்புகின்றேன்.

ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL
• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat

Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca

# ஆயுள் காப்புறுதியில் நீதி கேட்டுப் போராடிய இல்லத்தரசிகள் இருவர்!

## கனடியத் தகவல் தொடர்- 312




கனடாவில் காப்புறுதிகளுடன் சேர்ந்த சட்டப் பிரச்சினைகள், நீதிமன்ற வழக்குகள், வழங்கப்பட்ட தீர்ப்புகள், தீர்ப்புகளை தொடர்ந்து மாறும் வழமைகள் போன்ற விடயங்களை ஆய்வு கண்ணோட்டத்துடன் படிப்பதும் தொடர்ந்து அவற்றினை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதும் எனக்குப் பிடித்த விடயமாகும்.

காப்புறுதித் தொழில் துறையில் ஆழமான, தெளிவான புரிந்துணர்வுடன் தங்கள் தங்கள் காப்புறுதி உடன்படிக்கைகளை காலத்திற்கு ஏற்றவாறு தெளிவு பண்ணிக் கொள்ளுங்கள் என்பது வாடிக்கையாளர்களுக்கு நாம் அடிக்கடி கூறும் அறிவுரையாகும். காப்புறுதி நிறுவனங்களும் அதனையே சொல்லுகின்றன.

ஏனெனில் எம்மை சுற்றி என்ன நடக்கிறது என்பதனைப் புரிந்து கொள்ளாது தூக்க நிலையில் வாழ்வினை தொடர்வோமாக விருந்தால் விழித்து எழுந்தால் என்ன நடக்கும் என்பதற்கு கடந்த வருடம் பகிரங்கத்திற்கு வந்த இவ்வழக்கு ஓர் எச்சரிக்கையாகும்.

கணவனின் மரணத்தினை தொடர்ந்து அவரின் $250,000 ஆயுள் காப்புறுதிப் பணத்தினை பெறுவதில் அவரின் இரு மனைவியர் தொடர் போராட்டம் நடத்தினர். கனடாவின் ஆரம்ப நீதிமன்றத் தீர்ப்பினை ஆட்சேபித்து மேல் முறையீடு நீதிமன்றம் சென்றனர். மேல் முறையீடு நீதிமன்றத்தின் தீர்ப்பினை எதிர்த்து இறுதியாக முடிவு காணும் உயர் நீதி மன்றமும் சென்றனர். இறுதியில் முடிவு என்ன?

கனடாவில் வெளிவரும் ஆங்கில ஊடகமான 'National Post' பின்வரும் தலைப்பில் இச்செய்திக் கட்டுரையினை விபரமாக வெளியிட்டிருந்தது. முன்னாள் மனைவி கட்டணம் செலுத்திக் கொண்டிருந்த காப்புறுதியில் புதிய மனைவி உயிர்ழப்புப் பணத் தொகையினைக் கோர முடியாது. (New wife cannot claim life Insurance that ex-wife paid for – Supreme court rules. National post. Nov.26, 2018)

மிஷேல் ஹொன்ஸ்ரான்ஸ் மூர் எதிர் றிசா லோறெயன் ஸ்வீற் (Michelle Constance Moore vs Risa Lorrane sweet) என்ற வழக்கின் விபரம் இதுவேயாகும். அந்தத் தம்பதியினர் 1979ஆம் ஆண்டு திருமணம் செய்து மிசிசாகாவில் உள்ள அவர்களின்



குடும்ப இல்லத்தில் வாழ்ந்து வந்தனர். 34, 33 மற்றும் 29 வயதில் அவர்களுக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர். 1985ஆம் ஆண்டில் கணவன் $250,000 டொலருக்கு ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் சேர்ந்திருந்தார். Canadian general life Insurance Companyயில் கைச்சாத்திட்ட ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் தொடர்ந்து RBC Insurance கம்பனிக்கு மாகாண நிதிய மைச்சினால் மாற்றப்பட்டது. தமது முதல் மனைவியின் பெயர் பணம் பெற உரித்துடையவராக அவரது ஆயுள் காப்புறுதி உடன்படிக்கையில் நியமிக்கப்பட்டது. கூட்டான அவர்களின் வங்கிக் கணக்கிலிருந்து வருடம் $507.50 வருடாந்தம் ஆயுள் காப்புறுதி தொகைக்கு கட்டணம் செலுத்தப்பட்டு வந்தது.

1999ஆம் ஆண்டு இன்னொரு பெண்ணைச் சந்தித்தார். அவர்கள் இருவரின் உறவுகளின் தொடர்பு ஆரம்பமானது. இதன் காரணமாக முதல் மனைவியை விட்டுப் பிரிந்தார். 2000ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து மரணமாகும் வரை சுமார் 13 வருடங்கள் இரண்டாவது மனைவியுடன் வாழ்ந்து வந்தார். 2002ஆம் ஆண்டில் முதல் மனைவியை சட்ட ரீதியாகப் பிரிந்தார். ஆனால் அவர் ஏற்கனவே செய்துகொண்ட ஆயுள் காப்புறுதிக்குரிய பணம் அவரது முதல் மனைவியின் வங்கிக் கணக்கிலிருந்தே செலுத்தப்பட்டுக் கொண்டிருந்தது.

தாம் இருவரும் பிரியும்போது ஆயுள் காப்புறுதிக்குரிய பணத்தினை தொடர்ந்து செலுத்துமாறும் பணம் பெற உரித்துடையவர் பெயர் எந்த சந்தர்ப்பத்திலும் மாற்றம் செய்யப்பட மாட்டாது என்று வாய்மொழி உறுதி வழங்கப்பட்டதாக தமது நீதிமன்ற வழக்கில் முதல் மனைவி தெரிவித்திருந்தார். (Kitchen table agreement paid as life Insurance premium)

● செப்ரெம்பர் 21, 2000ஆம் ஆண்டில் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் பணம் பெற உரித்துடையவராக தமது இரண்டாவது மனைவியின் பெயரினை முதல் மனைவிக்குத் தெரியாது மாற்றிக் கொண்டார். இந்த மாற்றத்திற்கு உதவியவர் முகவராக இருந்த முதலாவது மனைவியின் சகோதரியின் கணவர் என்பது விசாரணையில் வெளிப்பட்டது. இங்கு அவரில் குற்றமில்லை. அவர் தமது தொழிலை செய்தார். ஆனால் வாய்மொழி உடன்படிக்கையினை நம்பிய முதலாவது மனைவியின் வங்கிக் கணக்கிலிருந்தே காப்புறுதிக்குரிய பணம் அவர் மரணமாகும் வரை போய்க் கொண்டிருந்தது.

● கணவன் ஜூன் 20, 2013யில் மரணமானார். மரணத்தினைத் தொடர்ந்து ஆயுள் காப்புறுதி தொகையில் பணம் கோர விண்ணப்பம் சமர்ப்பித்த போதே தாம் பணம் செலுத்தி கொண்டிருந்த தமக்கு தெரியாது பணம் பெற உரித்துடையவர் பெயர் மாற்றம் செய்யப்பட்டது முதலாவது மனைவிக்கு தெரிய வந்தது.

● எவர் பெயர் பணம் பெற உரித்துடையவர் என இறுதியாக மரணமடைந்த தினத்தில் உடன்படிக்கை பதிவுகளில் உள்ளதோ அவர் மட்டுமே பணத்தினைப் பெற உரித்துடையவர் என்பது கனடிய ஆயுள் காப்புறுதி சட்டங்களின் உறுதியான கோட்பாடாகும். மரண சாசனப் பத்திரங்களில் (Last will and testament) குறிப்பிடும் வார்த்தைகள் கூட ஆயுள் காப்புறுதியில் சரி வராது. ஆனால் இங்கு நிலைமை என்பது மாறியது.

முதல் மனைவி துரித கதியில் நீதிமன்ற ஆணை எடுத்து காப்புறுதிப் பண கொடுப்பனவினை தற்காலிகமாக நிறுத்தி வைத்தார். தொடர்ந்து மரணமானவரின் இரு மனைவியரும் பணம் பெற உரித்துடையவர் எவர் என்ற சட்டப் போராட்டத்தில் கனடிய நீதிமன்றங்களின் படிமுறை வடிவில் ஆரம்ப நீதிமன்றம், மேல் நீதிமன்றம், இறுதியாக உயர் நீதிமன்றம்வரை கடந்த ஐந்து வருடங்களாக வழக்கு தொடர்ந்தது. கணவன் மதுவுக்கு அடிமையானவர், கடன் தொல்லைகள் இன்னொரு பக்கம், கனடிய வருமான வரி இலாகாவிற்கு மட்டும் $70,000 டொலர் வரை செலுத்த வேண்டும். முதல் மனைவியும் அவரும் இவை காரணமாக வங்குரோத்து

(தொடர்ச்சி 19ஆம் பக்கம்...)



# கீழடி அகழ்வாய்வுகள்

## கிளறப்படும் உண்மைகள்-பன்முகப் பார்வை



- கனி -
416.261.1348

இப்பொழுது கீழடியில் 5ஆம் கட்ட அகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவையும் பரபரப்பான விடயங்களை வெளிக்கொண்டு வருகின்றன. அவற்றுள் யூன் 13இல் ஆரம்பமாகி ஒரு மாதத்திற்குள் முக்கிய காட்சியாக கருப்பையா, முருகேசன் என்ற இருவரின்



காணிகளில் இரண்டு சுவர்களை அகழ்ந்து காட்டியிருக்கின்றனர். கிட்டத் தட்ட 4.5 மீற்றர் ஆழத்தில் காணப்படும், சுடுசெங்கற்களினால் கட்டப்பட்ட, இவ் இரண்டு சுவர்களில் ஒன்று 5.5 மீற்றர் நீளமானது, மற்றது 2.5 மீற்றர் நீளமானது. இவ்விரு சுவர்களும் அடுத்துத் தோண்டப் படும் குழிகளிலும் நீண்டு கொண்டு போகும் எனத் தொல்லியல் நிபுணர்கள் கூறுகின்றனர். கி.மு 5ஆம் நூற்றாண்டுக் கும் கி.பி. 3ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட சங்ககாலத்திற்கு ஒத்ததான செங்கட்டிகளால் அமைக்கப்பட்டிருக்கும் இச்சுவர்கள் எப்படியான கட்டிட அமைப்பினைக் காட்டுகின்றன என்பதை இப்போது கூற முடியாது எனக் கூறும் ஆய்வாளர்கள், இந்த ஐந்தாம் கட்ட



அகழ்வுகளின் முடிவில் அதனைக் கூறக் கூடியதாக இருக்கும் என நம்புகின்றனர்.

கீழடியில் உள்ளூர்த் தொழிலாளர்களின் உதவியுடன் தமிழ்நாடு தொல்லியல்துறை நிபுணர்கள் நடத்திக் கொண்டிருக்கின்றனர். இந்த 5ஆம் கட்ட அகழ்வில் பெற்ற இந்தச் சுவர்கள் போலவே இந்திய மத்திய தொல்லியல் துறையின்கீழ் அமர்நாத் நடத்திய முதலாம், இரண்டாம் கட்ட அகழ்வு களிலும் செங்கற் சுவர்கள் வெளிக் கொண்டு வரப்பட்டன என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். 3ஆம், 4ஆம் கட்ட ஆய்வுகளில் இப்படி நீளமான சுவர்கள் எதுவும் கண்டு பிடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கு எடுக்கப்பட்ட செங்கற்கள் 28 சதமமீற்றர் 30 சதமமீற்றர் பரிமாணம் கொண்டவை. ஓரடி உயரமும் ஒன்றரையடி அகலமும் கொண்ட இதுபோன்ற செங்கட்டிகள் முன்னர் அழகன்குளம், உறையூர், காவிரி பூம்பட்டிணம் போன்ற பகுதிகளில் செய்த அகழ்வுகளின் போதும் பெறப்பட்டதை அகழ்வாய்வாளர்கள் நினை



வுக்குக் கொண்டு வருகின்றனர். நான் முன்னர் குறிப்பிட்டபடியே, மிகக் குறுகிய காலத்தில், இன்னமும் மூன்று மாதங் களுக்குள் தோண்டப்பட இருக் கின்ற, மொத்தம் 15 குழிகளும் வேறும் பல விடயங்களை வெளிக் கொண்டுதான் வரப்போகின்றன. அவற்றிக்கு முன்னதாக இப்போது ஏற்பட்டுள்ள முக்கிய மாற்றம் ஒன்றினையும் கவனிப்போம்.

ஆதிச்சநல்லூர் கீழடி போன்ற அகழ்வு களின் வெளிப்பாடாகவோ என்னவோ, சில இலக்கிய ஆர்வலர்கள் எங்களது சங்க காலத்தின் ஆரம்பக் காலத்தை இப்போது கி.மு. 3இல் இருந்து கி.மு. 5க்கு, முன் நோக்கி நகர்த்தியுள்ளனர். இது ஒரு மகிழ்ச்சியை தரக் கூடிய செய்திதான். எதிர்காலத்தில், கீழடியின் 110 ஏக்கர் பரப்பும் அகழ்வுக்குள்ளாக, இந்த நகர்த் தலானது இன்னமும் முன்நோக்கிச் செல்ல லாம். மேலும் தமிழினத்தின் செழிமையும் கூட, இன்னமும் பல வெவ்வேறு வடிவங்களையும் பெறலாம்.

குறிப்பாக, தமிழரின் முச்சங்கங்களும் அவற்றின் காலங்களும் இலக்கியர் களினால் மெதுமையாக மறுக்கப்பட்டு, நளினமாக ஒன்றிணைக்கப்பட்டு, சங்க காலம் என, அண்மையில் அமைந்த சில வருடங்களுக்குள் அடக்கப்பட்டதை நாங்கள் அறிவோம். மேலும், வேறு வழியின்றி நாங்களும் அவற்றினை ஏற்றுக் கொண்டும் விட்டோம். ஆனால் ஆதிச்ச நல்லூர், கீழடி போன்ற தென்னாட்டின் தொல்லியல் ஆய்வுகளின் வெளிப்பாடு கள், தமிழரின் தொன்மையை வெளிக் கொண்டுவருவதுடன், எமது முச்சங்கங்கள் அன்று இருந்தனதான் என்பதனை எதிர்காலத்தில் வெளிப்படுத்தும் என்பதை கட்டியம் கூறுகின்றன. இன்னமும் 'கிரகாம் கான்கொக்' போன்றோரின் கரையோர ஆய்வுகள் நிச்சயமாக வீணாகிப் போய் விடாது. எதிர்காலங்களில் நிகழக் கூடிய ஆழ்கடற் தேடல்களும் முச்சங்கங்களின் காலங்களைக் கூடத் துல்லியப்படுத்தத் தான் போகின்றன. இன்னமும் பல்லாவரம் கற்கருவிகள் காட்டிக் கொடுத்த கூடியம் குகைகளின் இரகசியங்கள் வெளிப் படுத்தப்படும் போது, நூறாயிரம் ஆண்டு காலத்திற்கும் மேலாக தமிழகத்திலும் அதன் கீழாகத் தாமிரபரணி என்கிற இலங்கையிலும் மனித இனத்தின் வாழ்வியற் தொடர்ச்சி இருந்தது என்பதும் வெளிப்படும்.

ஆதிச்சநல்லூர், கீழடி போன்ற இடங் களின் அகழ்வுகள் தொடரட்டும், உலக மாந்தர் பற்றிய உண்மைகள் வெளிப் படட்டும் என்ற வாழ்த்துதல்களுடன் இத் தொடரினை முடிவுக்குக் கொண்டு வருகிறேன். ஒருவேளை, எதிர்காலத்தில் முக்கியமான முடிவுகள் எதுவும் வெளிக் கொண்டு வரப்பட்டால் அதனையும் உங்களுடன் பகிர்ந்து கொள்வேன்.

> **"விண்ணளந்து வியந்து கொண்டிருக்கும் என்கண்கள், அனைத்துமளந்த எம்முன்னோர்களை அறிய விரிந்து கொள்கின்றன்."**

அடுத்து முன்னர் நான் கூறியபடியே சிந்துவெளி பற்றிய எனது பார்வையை விரித்துக் கொள்ளப் போகின்றேன். ஆயி னும் அதற்கு முன்னராக, விண்வெளி யையும் நிமிர்ந்து பார்த்து, அண்மைக்கால அறிவியல் உயர்வுகளைப் பற்றிச் சிறிது பார்ப்போம். குறிப்பாக, சந்திரன் பற்றிய விடயங்களையும், செவ்வாய்க் கோள் பற்றிய தெளிவுகள் சிலவற்றையும் சில நாட்களுக்கு விளம்பரம் ஊடாகப் பார்க்கப் போகின்றோம்.

அடுத்த இதழிற் சந்திப்போம், சரிதானே!




# தமிழ்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

மாதகால அவகாசத்தை அரசாங்கம் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, இதற்கு கல்முனை முஸ்லிம்களும், முஸ்லிம் தலைவர்களும் எதிர்ப்பை வெளியிட்டு வந்தனர். இந்த நிலையில், நம்பிக்கையில்லா பிரேரணை யை முன்வைத்து இதற்கொரு முடிவு வந்துள்ளது. முஸ்லிம்களின் எதிர்ப்பு களுக்கு மத்தியில், இந்தப் பிரதேச



செயலகத்தை முழுமையாக தரமுயர்த்தும் நடவடிக்கை சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# GtaMath

## Summer Program

# G11 & G12

## July 1st week

SCORE 90's & ABOVE

GUARANTEED RESULTS

416 666 5515

www.GTAmath.com

# பார்வைக் கண்ணாடி




சிந்தனைப்பூக்கள்
எஸ். பத்மநாதன்

# Eye glass

எண்சாண் உடம்புக்கு சிரசே பிரதானம். அந்த சிரசிலும் கண்களின் சிறப்பு அளவிட முடியாததொன்றாகும். எந்த ஆபத்து வந்தாலும் கண்கள் தானாக மூடிக்கொள்ளும். எந்த நோயையும் கண்கள் காட்டிக் கொடுக்கும். வருட மொன்றுக்கு சராசரியாக 200,000 தடவை கண்களை சிமிட்டிக் கொள்கின்றோம். கர்ப்பம் தரித்து 2 கிழமையில் உருவாகி விடும் இக்கண்கள் வாழ்நாள் முழுவதும் எம்முடன் வாழ்பவை. ஆனால், சிக்கல் வாய்ந்த இந்தக் கண்களின் அமைப்பினால் பல்வேறு பார்வை கோளாறுகள் ஏற்படுகின்றது.

ஒவ்வொரு மனிதனுக்கும் கண்ணின் கருவிழி நிறத்தை உறுதி செய்வது அவனின் மரபணுக்களாகும். நீலம், பச்சை, கறுப்பு, பழுப்பு நிறம் ஆகியன மனித கருவிழியின் நிறங்களாகும். ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் விழித்திரை மாறுபடும். உலகில் உள்ள எந்த இரு மனிதருக்கும் விழித்திரை ஒன்றாக இருப்பதில்லை (இரட்டைப் பிறவிகளுக்கு கூட அவை மாறும்).

மனிதனின் கண் வெளிச்சம் மற்றும் அழுத்தம் ஆகியவற்றுடன் தொடர்புடைய ஓர் உறுப்பு ஆகும். ஓர் உணர்வு உறுப்பாகப் பாலூட்டிகளின் கண் பார்வையை அனுமதிக்கிறது. மனிதக் கண்கள் முப்பரிமாண நகரும் உருவத்தை வழங்க உதவுகின்றன. பொதுவாகப் பகல்




நேரங்களில் நிறங்களை உணர்த்து கின்றன. விழித்திரையில் உள்ள குச்சி மற்றும் கூம்பு வடிவான ஒளிவாங்கிகள் ( rod and cone shaped photoreceptors in the human retina ) ஒளி உணர்வு மற்றும் வண்ண வேறுபாடு உள்ளிட்ட பார்வை செயல்பாடுகளுக்குக் காரணமாகின்றன. மனிதக் கண் 10 மில்லியன் நிறங்களை வேறுபடுத்தி அறியும் திறன் கொண்டதாகும்.

எப்போதும் 20/20 என்ற அளவில் பார்வை சோதனையிடப்படுகிறது. அதன் காரணம் 20 அடி தூரத்திலிருந்து எம்மால் வாசிக்க முடியுமா என்பதே அதன் பொருளாகும். கண்ணை: விழி, நயனம், நேத்திரம் என்றெல்லாம் அழைப்பர். எமது கண்களில் ஏற்படும் பல்வேறு பிரச்சனை களை தீர்க்கவே பார்வைக் கண்ணாடிகள் அணிய வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. பொதுவாக பார்வைக் குறைபாட்டை சீர்செய்ய வைத்தியர் சிபாரிசு செய்யும் போது சிலர் அதன் முக்கியத்துவத்தை உணராமல் அலட்சியம் செய்கிறார்கள்.

பொதுவாக பார்வையை சரிசெய்ய கண்ணாடிகள் உதவுகின்றன. கிட்டப் பார்வை (Myopia), தூரப்பார்வை (Hypermetropia or Hyperopia), ஒரு தளப்பார்வை (Astigmatism), வெள்ளெழுத்து ( Presbyopia) என்பனவே பொதுவான பார்வை பிரச்சனைகளாகும். ஒவ்வொன்றின் தன்மைக்கும் ஏற்ப கண்ணாடிகள் வழங்கப்படுகின்றன. இவை தவிர சூரிய வெளிச்ச (ultra violet) பாதுகாப்புக் கண்ணாடிகள் (Sunglasses), பாதுகாப்புக் கண்ணாடிகள் (Safety Glasses), முப்பரிமாண கண்ணாடிகள் (3D Glasses), நிறமூட்டப்பட்ட கண்ணாடிகள் (Tinted eyeglasses) என்பனவும் உபயோகத்தில் உள்ளன.

பார்வைக் கண்ணாடிகளின் முக்கியமான ஆரம்பம் வடக்கு இத்தாலியில் உள்ள PISA என்ற இடத்தில் 1290களில் ஆரம்பித்துள்ளது. படிப்படியாக பல்வேறு வகைகளில் கண்ணாடிகள் தயாரிக்கப் பெற்றன. 1604இல் Johannes Kepler என்ற ஜேர்மனியர் முதன்முதலாக கண்பார்வை பரிசோதனைகளையும், அதற்கேற்ற கண்ணாடிகளையும் அறிமுகம் செய்தார். சில ஆய்வுகள் இந்தியாவில் கூட கண்ணாடி தயாரிக்கப்பட்டதாக கூறுகின்றன. எப்படி பார்த்தாலும் இத்தாலியின் வர்த்தகமே ஆரம்பத்தில் மேலோங்கி இருந்துள்ளது.

படிப்படியாக கண்ணாடி அமைப்புக்கள், வடிவங்கள், சட்டங்கள் (Frames) என்பன வற்றில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. பிளாஸ்டிக், உலோகம் என்பவற்றில் சட்டங்கள் (Frames) தயாரிக்கப்பட்டன. 1930களில் இந்த கண்ணாடிகள் ஒரு மருத்துவ கருவியாக (Medical Appliances) மாறியது. படிப்படியாக நாகரிக உலகிலும் கண்ணாடிகள் புகுந்து கொண்டன. இதனை stylish eyewear என்பர். இன்று உலகெங்கிலும் கண்ணாடி களின் உற்பத்தி அதிகரித்துள்ளது.

கண்களில் ஏற்படும் நோய்கள் தவிர குறைபாடுகளே அதிகமாகும். மிக முக்கிய மானவை குறைபாடுகள் கிட்டப் பார்வை (Myopia or Nearsightedness), தூரப் பார்வை (Hyperopia or Farsightedness )

1. கிட்டப்பார்வை எனப்படும் மையோபியா (Myopia or Nearsightedness) கண் வில்லையின் புற வளைவுப் பகுதி அதிகரிப்பதினாலும் கண்கோளம் நீட்சியுறு வதாலும் ஏற்படுகிறது. உட்செல்லும் ஒளிக்கதிர்கள் தேவைக்கு அதிகமாகச் சிதறலடையும் போது, ஒளிக்கதிர் விழித் திரைக்கு முன்னாலேயே குவிக்கப்படு கிறது. இதனால் பிம்பம் தெளிவற்றதாக உணரப்படுகிறது. இந்நிலை கிட்டப்பார்வை எனப்படும். ஏனெனில் தூரத்தில் உள்ள பொருட்களிலிருந்து வரும் ஒளிக்கதிர்கள் சரியாக விழித்திரையின் மேல் குவிக்கப்பட இயலவில்லை. இந்நிலையைக் குழி வில்லைகளின் மூலம் சரி செய்யலாம். எவ்வாறு எனில் குழி வில்லையின் புறப் பகுதியின் வழியாக உள் செல்லும் ஒளிக் கதிர்கள் சற்றே விலக்கப்படுவதால் ஒளிச் சிதறலடைதலும் மாறுபாடு அடைகிறது. இம்மாற்றத்தினால் கிட்டப்பார்வை நிலை யுடைய கண்ணில் ஒளி சரியான முறை யில் விழித்திரையில் குவிக்கப்படுகிறது.

கண் மருத்துவர்கள் இக்குறைபாட்டினை பொருத்தமான குழிவில்லைகள் கொண்ட மூக்குக் கண்ணாடிகள் மூலமோ அல்லது தொடுவில்லைகள் ( contact lenses) மூலமோ சரிசெய்கின்றனர். அண்மைக் காலங்களில் அறிவியல் வளர்ச்சியால் சீரொளி (Laser) உதவியுடன் குறைதிருத்த அறுவையும் மேற்கொள்ளப்படுகிறது. இவை தற்போது விலை உயர்ந்த சிகிச்சையாக இருப்பதாலும் சிகிச்சைக்குப் பின் சில சிக்கல்கள் எழ வாய்ப்பிருப்பதா லும் பரவலாகப் பயன்பாட்டில் இல்லை. கிட்டப்பார்வைக்குத் தரப்படும் திருத்த வில்லைகளின் திறன் எதிர்ம எண்களில் (Negative numbers ) குறிக்கப்படுகிறது.



2. தூரப் பார்வை (farsightedness அல்லது Hypermetropia or Hyperopia) என்றும் அறியப்படும் கண்ணின் குறை பாடு விழிக்கோளமோ விழி வில்லையோ செம்மையாக இல்லாமையால் உருவா கிறது. இக்குறைபாட்டினால் அண்மை யிலுள்ள பொருட்களைக் காண்பதில் சிரமம் ஏற்படுகிறது. விழியின் அண்மைப் பார்வைக்கான குவிமையத்தன்மை ஆற்றல் குறைகிறது. சில தீவிரமான குறைபாடுகளில் எந்தத் தொலைவிலுள்ள பொருளையுமே குவியப்படுத்த இயலாது போகலாம். ஓர் பொருள் கண்ணின் அருகே வரும்போது நலமான கண்ணின் வில்லையானது தனது வலுவை கூட்டிக்கொண்டு பொருளின் விம்பத்தை விழித்திரையில் படியச் செய்யும். ஆனால் கருவிழி மற்றும் கண்வில்லையின் வலுக் குறைந்து இவ்வாறு ஏற்ற இயலாவிடில் எட்டப் பார்வைக் குறைபாடு ஏற்படுகிறது. இதனால் பொருளின் விம்பம் விழித் திரைக்குப் பின்னால் உள்ளதொரு புள்ளி யில் குவியப்பட்டு தெளிவின்றித் தெரியும். இக்குறைபாடு மரபுவழியாக மிகச்சிறிய கண் அல்லது தட்டையான கரு விழியிருப்போருக்கு ஏற்படுகிறது. இதனை

(தொடர்ச்சி 25ஆம் பக்கம்...)

SUNCITY
FAMILY MEDICAL CENTER
Now accepting
New patients and Walk -Ins!
• Walk-Ins welcome • Walk-Ins வரவேற்கப்படும்
• Lab on site • அலுவலகத்தின் உள்ளேயே ஆய்வகம்
• Open 7 days a week • வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்
• No wait times • காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை
CALL US TODAY (416) 292-9111
Located at the Suncity Plaza
C19 -2761 Markham Road.
Scarborough, ON. M1X 0A4
info@suncitymedicalcenter.com

Quick, quality medical care when you need it the most
உங்களுக்கு மிகவும் தேவைப்படும் போது
விரைவான, தரமான மருத்துவ பராமரிப்பு வழங்கப்படும்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

# வயிற்றுப்போக்கு



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
(Diploma in Yoga Therapy( India)
416.617.5721/416.289.2033
(After 7 pm)

உலக சுகாதார அமைப்பின் வரையறைப் படி ஒருவருக்கு ஒரு நாளைக்கு மூன்று முறை அல்லது அதற்கு மேல் இயல்புக்கு மாறாக அடிக்கடி இளகி அல்லது நீர் போல மலம் வெளியேறுவது வயிற்றுப் போக்கு என்று கூறப்படுகின்றது. சாதாரணமாக இந்த நிலை இரப்பை நோய்த் தொற்றின் அறிகுறியாகும். நோய்த் தொற்று பல்வேறு வைரஸ், ஒட்டுண்ணிகள் (Parasites) பக்ரீரியா நுண்ணுயிரிகளால் உண்டாகிறது.

நாம் பயன்படுத்தும் சுகாதாரமற்ற உணவு மற்றும் குடிநீரில் இந்த நுண்ணுயிரிகள் தங்கி, பெருகி பின் வயிற்றுப்போக்கை ஏற்படுத்துகின்றன. இந்த நுண்ணுயிரிகள் அனைத்தும் வயிற்றுப்போக்கு ஏற்பட்டவரின் மலத்தில் வசிக்கக்கூடியவை. ஈக்களும், எறும்புகளும் இந்த நுண்ணுயிரிகளை மனிதருக்குப் பரப்புகின்றன. இவை மனிதக் கழிவில் அமரும்போது அவற்றின் மீது நுண்ணுயிரிகள் ஒட்டிக்கொள்ள அதன்பின்னர் இவை உணவுப்பொருட்களை மொய்ப்பதன் மூலம் உணவுக்குப் பரவி அதனை உட்கொள்ளும் நபருக்கு பரவுகிறது. இதனாலேயே உணவு வகைகளை ஈக்கள், எறும்புகள், பூச்சிகள் மொய்க்காமல் மூடிப் பாதுகாக்க வேண்டும். அசுத்தமான வெளியிடங்களிலும் சாலையோர கடைகளிலும், திறந்த வெளி உணவகங்களிலும் சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும்.

வயிற்றுப்போக்கை உண்டாக்கும் நுண்ணுயிரிகள் நேரடியாகவோ, சில நச்சுக்களை சுரந்தோ சிறு குடலையும் பெருங்குடலையும் தாக்குகிறது. இதனை சமன் செய்ய குடலில் அதிக அளவில் திரவம் சுரக்கிறது. இது வயிற்றுப்போக்காக குடலிலிருந்து வெளியேறுகிறது. அவ்வாறு வெளியேறும்போது குடலில் உள்ள தண்ணீர்ச்சத்து, சோடியம், பொட்டாசியம், போன்ற தாதுச்சத்துக்களும் வெளியேற்றப் படுகின்றன. இதன் விளைவாக உடலில் கடுமையான நீர் இழப்பு ஏற்படுகின்றது. இத்தகைய நிலை உருவானபின் குடல் உணவுச்சத்துக்களை சரிவர உறிஞ்சாமல் விட்டுவிடுகிறது. இதனால் பாதிக்கப்பட்டோருக்கு ஊட்டச்சத்துக் குறைகிறது. நோய் எதிர்ப்பு திறனும் குறைகிறது.

யாருக்கு இத்தகைய பாதிப்பு அதிகம் ஏற்படுமென்றால் குழந்தைகளுக்கும், முதியோருக்கும் என்று கூறலாம். ஆறு மாதக்குழந்தை முதல் இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகள் அதிக அளவில் பாதிக்கப்படுகின்றனர். பெரியவர்களோடு ஒப்பிடும்போது குழந்தைகளுக்கு சுரக்கும் அமிலம் மற்றும் நொதிகளின் அளவு சற்றுக்குறைவுதான். உட்கொள்ளப்படும் உணவு மூலம் வயிற்றுக்கு வந்து சேரும்



பெரும்பாலான கிருமிகளை வயிற்றில் சுரக்கும் அமிலம் அழித்துவிடும். இந்த நிகழ்வு குழந்தைகளுக்கு ஏற்படுவதில்லை. இதனால் குழந்தைகள் அதிகம் வயிற்றுப்போக்கு நோயால் பாதிக்கப்படுகின்றனர். இதேபோல் வயது முதிர்ந்தோர், நோய் எதிர்ப்பு திறன் குறைவானோர் எளிதில் வயிற்றுப் போக்கால் பாதிக்கப்படுகின்றனர்.

**அறிகுறிகள்** அதிக மலம் நீருடன் வெளியேறுவதால் உடல் சோர்வ, அதிக தாகம் உண்டாகும். நாக்கு வறண்டுவிடும், வாய் உலர்ந்து போகும், வாந்தி வருவது போன்ற உணர்வு உண்டாகும், தோல் வறண்டு விடும், சிறுநீரின் அளவு குறையும். தொடர் வயிற்றுப்போக்கால் நாடித்துடிப்பு பலவீனமடையும். கிறுகிறுப்பு, மயக்கம் உருவாகி ரத்த அழுத்தம் குறைய தொடங்கும்.

**சிகிச்சை** வயிற்றுப்போக்கால் பாதிக்கப்பட்டது தெரிந்தவுடன் மருத்தவ சிகிச்சை மேற்கொள்வது அவசியம் வயிற்றுப்போக்கால் பாதிக்கப்பட்ட நபருக்கு முதலில் நீர் இழப்பை சரிசெய்ய சிகிச்சை அளிக்க வேண்டும். இதற்கு பாதிக்கப்பட்டவருக்கு அதிக அளவு சுத்தமான நீரைப் பருகக் கொடுக்க வேண்டும். அல்லது உப்பு, சர்க்கரை கரைசலை பருகச்சொல்ல வேண்டும். உப்பு, சர்க்கரை கரைசலை வீட்டிலேயே தயார் செய்துகொள்ள முடியும். ஐந்து நிமிடத்துக்குக் கொதிக்க வைத்து ஆறவைத்த நீரில் ஒரு லீற்றர் எடுத்து 20 கிராம் சர்க்கரை, 5 கிராம் உப்புக் கலந்தால் உப்புச் சர்க்கரை கரைசல் தயாராகிவிடும். இதனை ஒரு மணி நேரத்திற்கு 500மி.லீ. அளவில் பாதிக்கப்பட்ட நபர் குடிக்க வேண்டும். வீட்டில் தயாரிக்க முடியாதவர்கள் கடைகளில்

(தொடர்ச்சி 19ஆம் பக்கம்...)



றொறன்றோ நகரசபை உறுப்பினர்
போல் ஐன்ஸ்லி
வட்டாரம் 24, ஸ்காபறோ - கில்வூட்
TORONTO

உதவி தயாராக உள்ளது
தொகுதியில் வாழ்வோருக்கான றொறன்றோ நகரசபை சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வுகாண்பது எமது சேவை

- வசதிக்கேற்ற விலையில் வீடுகள்
- வளர்ப்பு பிராணிகள் மற்றும் விலங்குகளுக்கான சேவை
- அடுக்கு மாடிகளுக்கான தரநிலை
- கட்டிட அனுமதிப்பத்திரம்
- குழந்தை பராமரிப்புக்கான மானியம்
- அவசரகால வதிவிட வசதிகள்
- தீயணைப்பு சேவை
- குப்பை அகற்றல்
- நூலகம்
- நகரசபைத் தேர்தல்
- நகராட்சி உரிமம் மற்றும் தரநிலைகள்
- "ஒன்ராரியோ வேலைகள்" நிறுவனத்தின் சேவைகள்
- வாகனத்தரிப்பிடம்
- சோலைகள்
- நகர்காவலர் சேவை
- பொதுச் சுகாதார சேவை
- தெருக்கள்
- ஆதன வரி
- பொதுப் போக்குவரத்து
- மீள்சுழற்சி மற்றும் உணவுக்கழிவு பசுமைத் தொட்டி
- மரங்கள்
- குடிநீர்

CONSTITUENCY OFFICE
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

TORONTO CITY HALL OFFICE
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006

councillor_ainslie@toronto.ca
Ward 24 Scarborough-Guildwood
@cllrainslie
www.paulainslie.com
@Ainslie_Ward24
Paul Ainslie (City of Toronto)

www.paulainslie.com 416-396-7222

# பெரிய இயக்குநர்களே கதையை திருடியுள்ளனர்!

## ஆர். பார்த்திபன் நேர்காணல்

### சந்திப்பு: கண்ணன்

"தமிழக அரசியல் என்பது ஆயிரம் முதலைகள் இருக்கும் பெரும் குளம். அதில், போட்டி போடுவது கடினம். நிறைய தொழில் பாதிப்புகள் ஏற்படும். அதனை, ஈடுகட்ட எனது பொருளாதாரத்தை சரிபடுத்திக் கொள்ளவேண்டும். இல்லையென்றால், அரசியலில் லஞ்சம் வாங்க ஆரம்பித்து விடுவேன். எனவே, பொருளாதார தன்னிறைவு அடைந்துவிட்ட பிறகே அரசியலுக்கு வரலாம் என்று நினைக்கிறேன்." நிதானமாக பேசுகிறார் இயக்குநரும் நடிகருமான ராதாகிருஷ்ணன் பார்த்திபன்.

ஒரு கதாபாத்திரம் மட்டுமே கொண்ட 'ஒத்த செருப்பு சைஸ் 7' என்ற படத்தை இயக்கி, நடித்து, தயாரித்து உலகிலேயே முதன் முறையாக ஒருவரே இயக்கி, நடித்து, தயாரித்த முதல் படம் என்ற சிறப்பையும் பெருமையையும் தமிழ் திரைத்துறைக்கு கொடுக்கவிருக்கிறார், பார்த்திபன். வாழ்த்துகள் தெரிவித்துவிட்டு பேசத் தொடங்கினோம்.

**நீங்களே இயக்கி, நடித்து, தயாரிக்கக் காரணம் முதலீடா அல்லது கதையின் அமைப்பா?**

பட்ஜெட் எல்லாம் காரணமில்லை. கதை அமைப்பு அப்படி. இன்று பல ஸ்டார் வேல்யூ உள்ள படங்கள் தோல்வி அடைகின்றன. ஆனால், 'ஜீவி' என்ற படத்தை எல்லோரும் பாராட்டிக் கொண்டிருக்கின்றனர். அதில் நடித்த அனைவரும் புதுமுகங்கள்தான். கதைதான் ஒரு படத்தின் ஸ்டார். கதை சிறப்பாக இருந்தால் படம் ஜெயித்துவிடும். அதே போல்தான், 'ஒத்த செருப்பு' கதையும்.

இந்தக் கதையில் ஒரு திறமையான (Talent) நடிகனால் மட்டுமே நடிக்க முடியும். அந்தத் திறமையான நடிகனை இயக்கத் திறமையான இயக்குநர் வேண்டும். இது மாதிரி ஒரு பரீட்சார்த்த முறையில் (experimental) படம் எடுக்க, சொந்த காசை போடும் ஓர் இளிச்சவாயன் தயாரிப்பாளர் வேண்டும். என்னை மாதிரி ஒரு இளிச்சவாயன் புரொடியூசர் கிடைக்க மாட்டார் என்பதால் நானே செய்கிறேன்.

**உங்கள் எல்லா படங்களிலும் ஒரு புதுமை இருக்கும். இதில் என்ன இருக்கிறது?**

படத்தில் ஒரேயொரு பாத்திரத்தில் (character) நடிப்பதே புதுமைதானே. உலகளவில், இதுபோல் மொத்தமே 12 படங்கள்தான் எடுத்துள்ளனர். ஆனால், அவை அனைத்திலும் இயக்குநர் வேறு, தயாரிப்பாளர் வேறு. முதன்முறையாக நடிப்பு, இயக்கம், தயாரிப்பு மூன்றையும் ஒருவரே செய்வது உலகிலேயே இதுதான் முதல்படம். பெரிய ரிஸ்க் (risk)உடன் எடுத்துள்ளேன். நானே மீண்டும் இதுபோல், மீண்டும் படம் எடுப்பேனா என்பதெல்லாம் தெரியாது. ஆனால், மக்கள் ரசிப்பார்களா?



என் படங்களுக்கு மட்டுமல்ல, வேறு எந்தப் படத்திற்கு டிக்கெட் வாங்கிக்கொண்டு சென்றாலும் உத்தரவாதம் (guaranteed) கொடுக்க முடியாது.

**ஒரே ஆளாக இயக்கி, நடித்து, தயாரிப்பதில் உள்ள சவால் என்ன?**

இந்தப் படத்தை மக்கள் ரசிப்பார்களா என்று கேட்டீங்களே? அதுதான் இப் படத்தின் சவால். 15 வருடத்திற்கு முன்பு யோசித்தக் கதை இது. படத்தை துவங்கி 15 மாசமாச்சு. ஒரு நாளைக்கு 15 மணிநேரத்துக்கு மேல் உழைத்துள்ளேன். பார்ப்போம்.

**கதாநாயகனாகவும் வில்லனாகவும் மாறி மாறி நடிக்கிறீர்களே?**

ஹீரோவுக்கு நிறைய பொறுப்பு இருக்கிறது. ஆனால், வில்லனுக்கு அப்படி கிடையாது. நிறைய சுதந்திரம் உள்ளது. அதேநேரம், முன்பு நம்பியாரை பார்த்தமாதிரி இப்போது வில்லனை தமிழக மக்கள் பார்ப்பதில்லை. புரிந்துகொள்கின்றனர். ரஜினியே இப்போது வில்லனாக நடிக்கிறார். தல அஜித் 'மங்காத்தா'வில் வில்லனாக நடித்தார். வரவேற்பு உள்ளது. கைத்தட்டல் கிடைக்கிறது. 'நானும் ரவுடிதான்', 'அயோக்கியா' படங்களில் வில்லனாக நடித்ததற்கு எனக்கும் நல்ல பெயர் கிடைத்தது.

**சமூக அக்கறையுள்ளவர் நீங்கள். அரசியலுக்கு எப்போது வரப்போகிறீர்கள்?**

(சிரிக்கிறார்) நான் இன்னும் என் சினிமாவில் தன்னிறைவு அடையவில்லை. நான் எடுக்கவேண்டிய கதைகளும் களங்களும் நிறைய உள்ளன. ஆனால், எல்லோரும் அரசியலுக்கு வந்தால் மட்டுமே தீர்வு கிடைக்கும். எல்லோரும் கேள்வி கேட்க ஆரம்பித்தால் பதில் சொல்ல பயப்படுவார்கள்.

இங்கே அரசியல் என்பது பணம் கொழிக்கும் விஷயம். அதனால்தான், இங்கு இவ்வளவு போட்டி. ஆனால், நான் நினைக்கும் அரசியல் இதுவல்ல. நான் நினைக்கும் அரசியல் காமராஜர் போல் தன்னலமற்ற அரசியல். காமராஜர் போல் கக்கன், சுபாஷ் சந்திரபோஸ், காந்தி ஆகியோரும் எனக்கு அரசியலில் பெரிய ஆச்சரியத்தை உண்டாக்கினார்கள். பணம் சம்பாதிக்காமல் அரசியல் நடத்தியவர்களை என் முன்னோடிகளாக நினைக்கிறேன்.

**ரஜினி, கமல் அரசியல் வருகையை எப்படி பார்க்கிறீர்கள்?**

அதனை நான் வரவேற்கிறேன். நல்ல வசதியோடு இருக்கும் அவர்கள், வீட்டிலேயே சாப்பிட்டு, நிம்மதியாக இருப்பதை விட்டுவிட்டு கால்நடையாக நடந்து சென்று மக்களிடம் ஏன் குறைகளைக் கேட்க வேண்டும்? வாடா, போடா என்ற பேச்சுக்களையும் கெட்ட வார்த்தைகளையும் ஏன் சகித்துக்கொள்ள வேண்டும்? மக்களுக்காக உழைப்பதை வரவேற்பதில் என்ன தவறு உள்ளது?

**ஆனால், கடைசியாக சினிமாவில் இருந்து அரசியலுக்கு வந்த விஜயகாந்த் வாக்கு வங்கி குறைந்துள்ளதே?**

அவரது உடல்நிலையால்தான் வாக்கு வங்கி குறைந்துள்ளது. தவறு செய்யும் அரசியல்வாதிகளுக்கு துணிச்சலோடு மிரட்டல் கொடுத்து வந்தார். அந்தத் தைரியம் மக்களுக்கு பிடித்திருந்தது.

இயற்கையாகவே மரங்கள் இல்லாததால் தான் மழை குறைந்து விட்டது. பாலை வனத்திலேயே மரங்களை நட்டு வளர்த்து கவனத்தை ஈர்க்கின்றனர். இன்றிலிருந்து கூட மரங்களை காப்பாற்றினால் எதிர்கால

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC
• கழுத்து, • முதுகு நோவு
• வாகன விபத்து • மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தம்
போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்

Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.
WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:
• STRESS • TENNIS ELBOW PROBLEM
• SKIN PROBLEM • TREAT WITH MASSAGE THERAP
• RESPIRATORY PROBLEMS • ALLERGIES
• DIGESTIVE PROBLEMS • SEXUAL PROBLEMS
• VARICOSE VEINS • SEXUAL PROBLEMS
• BACK PROBLEM / NECK PROBLEM • CHOLESTEROL • TUMOR
• FOOT PROBLEM
HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING
Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsillitis
Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss
Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids
Stomatitis, Colitis
Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER
TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# மெல்லக்...

09 ஆம் பக்கத்தொடர்ச்சி

ளால் மக்களுக்கு ஏற்படும் பிரச்சினை யாகும். இவற்றிலிருந்து விடுபட பல்வேறு வழிகள் இருந்தும் அவற்றில் மக்கள் கூடிய கவனம் செலுத்துவதில்லை. கழிவுகளால் ஏற்படும் பாதக விளைவுகளை உணரு வதில்லை, பொருத்தமான வழிமுறைகளை கையாளுவதில்லை, இலகுவாகக் கழிவுக ளால் ஏற்படும் பாதிப்புக்களிலிருந்து விடுபட முயலுவதில்லை, கழிவு மேலாண்மையில் கவனம் கொள்வதில்லை, கழிவுப் பொருள் மேலாண்மை என்பது கழிவுப் பொருள் களை சேகரித்தல், கொண்டுசெல்லல், பாதிப்பில்லாத உருவுக்கு மாற்றுதல், மீள்சுழற்சிக்கு உள்ளாக்குதல் அல்லது நீக்குதல், மற்றும் கழிவுப் பொருள்களை கண்காணித்தல் ஆகிய செயற்பாடுகளை உள்ளடக்கியதாகும்.

கழிவுப் பொருள்களை சரியான முறையில் வடிவமைக்கப்பட்ட மற்றும் நன்கு நிர்வகிக் கப்பட்ட குப்பை நிரப்பு நிலமானது கழிவுப்




பொருள்களை அகற்ற, நீக்க, சுகாதாரமான தாகவும் சிறந்த முறையாகவும், ஒப்பீட் டளவில் குறைந்த செலவுடையதாகவும் இருக்கும். ஒரு நவீன குப்பை நிரப்பு நிலவடிவமைக்கும் முறையின் சிறப்பியல்பு களி மண் அல்லது பிளாஸ்ரிக்கால் ஆன அக உறைகள் கொண்ட தொட்டிகளை திரவக் கரைசல் வெளியேறாமல் இருக்கத் தொட்டிகளுக்கு உள்ளேயே அடக்குவதற் காக அமைப்பதாகும். இவ்வகை அமைப் புக்களைப் பல இடங்களிலும் காணக் கிடைப்பதில்லை.

கழிவுப்பொருள்களை எரித்துச் சாம்பலாக்கு வது ஒரு சிறந்த முறையாகக் கருதப்படு கின்றது. இதனால் திண்மக் கழிவுப் பொருள்கள் நிறையளவில் குறைவடை கின்றன. நிலப்பற்றாக்குறையுள்ள பிரதேசங் களுக்கு இம்முறை பொருத்தப்பாடுடைய தாக உள்ளது. செடிகளின் இலை, தழை போன்ற பொருள்களை மக்குதல், மற்றும் நெரித்தல் போன்ற முறைகளைப் பயன் படுத்தி கனிமப்பொருளை மக்கி உருச் சிதைத்து விடலாம். இதன் பயனாகக் கிடைக்கும் கனிமப் பொருளை மீளச் சுழற்சி செய்து கூட்டுரமாக வேளாண் மைக்குப் பயன்படுத்தலாம். கழிவுப்பொருள் களை ஒழுங்காக நிர்வகிப்பதன் மூலம் கழிவுப்பொருள் உள்ளடக்கிய சக்தியை அதை நேராக ஓர் எரிபொருள் போல் பயன்படுத்திக் கொள்ளலாம். இவை பற்றிய பூரண அறிவு இல்லாததால் கழிவுகள் எம்மை மெல்ல மெல்ல கொல்லுகின்றது.

இலங்கையில் கழிவுப் பொருள்கள் பெரிய ஒரு பிரச்சினையாக உள்ளது. எப்படி வீசுவது, எங்கே வீசுவது, எப்போது வீசுவது என்பவற்றில் மக்களது அக்கறை குறை வாக உள்ளதால் மக்கள் மத்தியில் கழிவு முகாமைத்துவம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படல் அவசியம். இல்லையேல் கழிவுப் பொருள்களின் பிரச்சினை மேலும் வலுவடைய வாய்ப்பு உண்டு. எனவே மெல்லக் கொல்லும் கழிவுகள் விடயத்தில் எல்லா மக்களதும் கவனம் அவசியமானதாகும்.

# ஆயுள்...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

நிலைமை பிரகடனப்படுதியது. தொடர்ந்து இவை காரணமாகவே சச்சரவுகள், பிரிவுகள் ஏற்பட்டது என்றும், கணவனும் அவரது இரண்டாவது மனைவியும் உடல் இயங்க முடியாத அளவுக்கு நோய் வாய்ப்பட்டு அதன் காரணமாக அவரது சாரதி அனுமதிப் பத்திரமும் பறிமுதலா கியது என்ற பல விடயங்கள் வழக்கில் முன்வைக்கப்பட்டன.

ஆரம்ப நீதிமன்றில் முதல் மனைவிக்கே காப்புறுதிப் பணம் போய் சேர வேண்டும் என தீர்ப்பு வழங்கப்பட்டது. இத்தீர்ப்பினை ஆட்சேபித்து இரண்டாவது மனைவி மேல் நீதிமன்றில் மனுச் செய்தார். மேல் நீதி மன்றம் ஆரம்ப நீதிமன்றத்தின் தீர்ப்பினை மாற்றியமைத்தது. அதாவது கடந்த 13 வருடங்களாக அறியாத நிலையில் கள் ளம் கபடமற்ற நிலைமையில் காப்புறுதி பணம் செலுத்திக் கொண்டிருந்த முதல் மனைவிக்கு செலுத்திய பணத்தினையும் அதற்கொரு சிறு வட்டியினையும் மட்டும் செலுத்திவிட்டு மிகுதிப் பணத்தினை இரண்டாவது மனைவிக்கு வழங்க




வேண்டும் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. முதல் மனைவி அதனை எதிர்த்து இறுதிக்கட்ட முடிவு எடுக்கும் கனடாவின் உயர் நீதிமன்றத்திற்கு மனு செய்தார். வழக்குகள் முடிவு இல்லாது படிமுறை களாக சென்று கொண்டிருந்தமையினால் காப்புறுதி கம்பனியும் இறுதி முடிவு வரும்வரை காப்புறுதி பணத்தினை பிடித்து வைத்திருந்தது.

இறுதியாக வாய்மொழி உடன்படிக்கை நடந்துள்ளது என்பதனை உறுதிப்படுத்தும் முகமாக முதல் மனைவி தொடர்ந்து செலுத்திக் கொண்டிருந்த கட்டணம் ஆதாரபூர்வமாக இருந்த படியால் முதல் மனைவிக்கே காப்புறுதி பணம் போய்ச் சேர வேண்டும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆயுள் காப்புறுதி யிலும் அது வழமையினை மாற்றிய ஒரு மரபாகியது.






# வயிற்றுப்...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

கிடைக்கும் Oral rehydration solutions (ORS) பொடியை சுத்தமான வெதுவெப் பான நீரில் கரைத்துக்குடிக் கலாம். வயிற்றுப்போக்கு முற்றிய நிலை யில் பாதிக்கப்பட்ட நபரை மருத்துவ மனையில் சேர்த்துக் குளுக்கோஸ் மற்றும் சலைன் (Saline) செலுத்த வேண்டும். அத்துடன் தகுந்த 'antibiotics' மருந்துகள் செலுத்த வேண்டும்.

**உணவு** - வயிற்றுப்போக்கால் பாதிக்கப் பட்ட நபருக்கு வாந்தி இல்லை எனும் நிலையில் ஊட்டச்சத்தும், நீர்ச்சத்தும் குறைந்து விடாமல் இருக்க அரிசிக் கஞ்சி, சவ்வரிசி கஞ்சி, பொட்டுக்கடலைக் கஞ்சி, இளநீர், எலுமிச்சை சாறு, மோர், போன்றவற்றில் ஒன்றை அடிக்கடி கொஞ்சம் கொஞ்சமாக கொடுக்கலாம். இதனால் அயற்சி, தாகம் போன்றவை தணியும். அதிக காரம் உள்ள உணவு களையும் கொழுப்பு உணவுகளையும்



ஒருவார காலத்திற்குக் குறைத்து உண்ண வேண்டும். கோதுமை மாவில் செய்த பொருட்கள், எண்ணெய் பொருட்கள் மாமிச உணவு போன்றவற்றை தவிர்க்க வேண்டும்.


## வாழும் திறன்

இயற்கையுடன் இணைந்து இன்புற்று வாழ்தலுக்கான சிறப்பு வகுப்புக்கள்
பிரபல்யமான இந்திய சமய சாஸ்த்திர நிபுணர் வி. கணேஷ் அவர்களால்
Middlefield & Mcnicoll சந்திப்புக்கு அருகாமையில் நடைபெறுகின்றது.
ஆர்வமுள்ளவர்கள் பங்குபற்றலாம்.

வி. கணேஷ்: **416.816.2563** மகேன்: **416.893.1222**
ஆறுமுகம் (AGR): **416.832.9467**

# தமிழ்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

மேற்கொள்ள வேண்டிய இடம் அது. நிர்வாகத் திறனற்ற நிலையிலும் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கிடையே ஏற்பட்ட முரண்பாடுகள் மோதல்களாலும் வட மாகாண சபையின் ஐந்து வருட காலமும் பயனற்றுப் போயிற்று.



தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகி தமிழ் மக்கள் கூட்டணி என்ற புதுக் கட்சியை உருவாக்கியுள்ள விக்னேஸ்வரன் ஆமை வேகத்திலேயே கட்சிப் பணிகளை மேற்கொண்டு வருகின்றார். கட்சியின் நடவடிக்கைகள் ஆமை வேகத்திலேயே நகர்கின்றது என அவரே ஒரு பத்திரிகைக்கு அளித்த செவ்வியில் ஒப்புக் கொண்டிருக்கின்றார். தனிப்பட்ட வாழ்க்கையில் நேர்மையான மனிதராகக் கருதப் பட்டாலும், ஓர் ஆமை வேகத் தலை வரிடம் மக்கள் தங்கள் அவசர பிரச்சினைகளுக்கான தீர்வுகளை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? ஏதோவொரு வகையில், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் இணைந்து விக்னேஸ்வரன் ஒரு கூட்டணியை உருவாக்குவதே அவரது கட்சியின் வளர்ச்சிக்கும் உதவியாக இருக்கும். அத்துடன் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் முரண்படும் தமிழ் தேசியக் கட்சிகளையும் இணைத்துக் கொண்டாலேயே பலமானதொரு கூட்டணியாக அதனை உருவாக்கலாம். இந்தக் கூட்டணியில் நம்பிக்கை ஏற்படுகின்ற போது, தற்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் புளொட், ரெலோ ஆகியவையும் புதிய கூட்டணியில் இணையக் கூடிய நிலை வரலாம். அப்படி நடந்தால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரே இன்றி தமிழரசுக் கட்சி தனித்துப் போகும் நிலை ஏற்படலாம். தமிழரசுக் கட்சியை தமிழ் மக்கள் நிராகரிக்கும் நிலை ஏற்பட்டால் அடுத்த கட்டமாக சகலரும் தவறுகளை சரிசெய்து கொண்டு தங்களை மீளமைத்துக் கொள்ளும் கட்டத்திற்கு வரலாம். இவையெல்லாம் நடக்குமா?

இன்று விக்னேஸ்வரன் கஜேந்திரகுமாருடன் இணைந்துகொள்ளத் தயாராகவே இருக்கின்றார். கூட்டங்களில் பேசும் போது கஜேந்திரகுமாரை புகழ்ந்துரைக்கின்றார். தானும் கஜேந்திரகுமாரும் இணைந்தால் யாராலும் தங்களை அசைக்க முடியாது என்று கூறுகின்றார். ஆனாலும் வேறு கட்சிகளையும் புதிய கூட்டணியில் இணைத்துக் கொள்ள வேண்டும் என்பதும் விக்னேஸ்வரனின் விருப்பமாகவுள்ளது. கஜேந்திரகுமார் அதற்குத் தொடர்ந்து மறுப்புத் தெரிவித்து வருகின்றார். குறிப்பாக புதிய கூட்டணிக்கு உள் வரத் தயாராகவிருக்கும் சுரேஸ் பிரேமச்சந்திரனை அவர் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. தமது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை கொள்கைப் பற்றுள்ள தூய அரசியல் கட்சியாக காட்டிக்கொள்ளும் கஜேந்திரகுமார் தனது தூய்மையில் கலப்படம் ஏற்பட்டு விடக் கூடாது என்று கருதுகின்றார். விக்னேஸ்வரனை ஏற்றுக்கொள்வதாகக் கூறினாலும் அவர் குறித்து கஜேந்திர குமார் தற்போது விமர்சனங்களை முன் வைத்து வருகின்றார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சில உறுப்பினர்கள் விக்னேஸ்வரன் இந்தியாவின் சார்பாக செயல்படுவதாக கூறுவது காதில் விழுகின்றது.

இவ்வாறான சூழ்நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு மாற்றான அரசியல் கூட்டணி என்பது இப்போதைக்கு சாத்தியமில்லை என்றே தோன்றுகின்றது.




# பெரிய...

18ஆம் பக்கத்தொடர்ச்சி

தலைமுறையை காப்பாற்றலாம். தனி மனிதனாக செய்யமுடியாது. ஆனால், அரசுடன் தனி மனிதரும் சேரவேண்டும்.

**‘ஆயிரத்தில் ஒருவன்’ படத்தில் சோழ ராஜனாக நடித்திருப்பீர்கள்? ராஜராஜ சோழன் சர்ச்சையில் உங்கள் கருத்து?**

பா. ரஞ்சித் ஒரு கருத்தை முன்வைத்தால், எதிர் கருத்து சொல்லவேண்டும் என்று அவசியமில்லை. இங்கே விவாதம்தான் நடக்கிறது. அதில் எந்தவிதமான லாபமும் இல்லை. ஏன் ராஜராஜசோழனுக்குகூட லாபம் இருப்பதாகத் தெரியவில்லை.

**மத்தியில் ஆட்சியை பிடித்த பாஜகவால் தமிழகத்தில் வெற்றிபெற முடியாததை எப்படி பார்க்கிறீர்கள்?**

தமிழகத்தில் பாஜக எதிர்ப்பு அலை இன்னமும் உள்ளது. பாஜகவும் காலூன்ற எவ்வளவோ முயற்சிக்கிறது. யாராக இருந்தாலும் நல்லது செய்தால் போதும் மக்கள் ஏற்றுக்கொள்வர். தமிழகத்திற்கு பாஜக நல்லது செய்யட்டும். தண்ணீர் பிரச்சினையை தீர்க்கட்டும். நல்லது செய்துவிட்டு ஜெயிக்கட்டும்.

**ஆனால், புதிதாகக் கூடங்குளத்தில் அணுக்கழிவு மையம் கொண்டு வரவுள்ளனரே?**

போராடிக் கொண்டே இருக்கிறோம். அவர்கள், திரும்பத் திரும்ப வேறு வழியில் வந்துகொண்டிருக்கின்றனர். மக்கள் அனுமதிக்க மாட்டார்கள். அரசு சில காலம் அமைதி காத்துவிட்டு மீண்டும் வரும். மீண்டும் நாம் போராடுவோம். போராட்டம் தான் தமிழக மக்களின் வாழ்க்கையாகவே போய்க்கொண்டிருக்கிறது.

**இரண்டு மகள்களுக்கும் திருமணம் செய்துவிட்டீர்கள். மாமனார் அங்கீகாரம் எப்படி உள்ளது?**

என் மருமகன்கள் என்னிடம் நட்போடு பழகுகின்றனர். ஏனென்றால், என் மகள்களும் எனக்கு நண்பர்கள்தான். அதனால், என் மாப்பிள்ளைகளுக்கு நண்பராகவே இருக்கிறேன். மகள்களுக்கு திருமணம் பண்ணும்போது வருத்தம் இருந்தது. இது வாழ்க்கையின் ஒரு கட்டம் என்பதை புரிந்துகொண்டேன்.

**62 வயதிலும் இளமையாக இருக்கிறீர்களே, என்ன ரகசியம்?**

எல்லோரும் அதனையே கேட்கின்றனர். இளமையாக இருக்க எதையாவது காதலிக்க வேண்டும். காதலோடு இருந்தால் இளமையாகவே இருப்போம். எனது காதலை நான் சினிமா மீது வைத்துள்ளேன். மேலும், நான் இளமையாக இருக்கவேண்டிய கட்டாயம் உள்ளது. நானே ஹீரோவாகவும் நடிக்க இருக்கிறேன். அதனாலும்தான்.



**தமிழ் திரைத்துறையில் கதைத் திருட்டு அதிகமாகி விட்டதே?**

கதை திருட்டு நீண்ட வருமாகவே உள்ளது. மிகப்பெரிய இயக்குநர்களே திருடி எடுத்துள்ளனர். அப்போது மக்களுக்குத் தெரியாது, இப்போது தொழில்நுட்ப வளர்ச்சியால் எந்தப் படம் என்று கண்டு பிடித்துவிடுகின்றனர். நம்மாளுங்க எவ்ளோ புத்திசாலியாக மாறிவிட்டனர்.

**மரக்காணத்தில் விவசாயப் பண்ணை வைத்திருந்தீர்களே, இப்போது எப்படி இருக்கிறது?**

20 மாடு, 100 கோழி, 180 மாமரம், 250 தென்னை மரம் உள்ளது. அந்த மண்ணில் விவசாயம் பண்ண முடியாது. அதனால், இப்படி மாற்று வழியில் செய்கிறேன். படம் வேலை காரணமாக தொடர்ந்து மரக்காணத்தில் இருக்க முடியவில்லை. அடிக்கடி சென்றுவருவேன்.

**உங்கள் மகள், மகனுக்கு இயக்குநர் ஆர்வம் இருந்ததே?**

என் மகன் ‘தேவி 2’ படத்தில் ஏ.எல். விஜயிடம் ஒர்க் (work) பண்ணார். இப்போ தனியா ஸ்கிரிப்ட் செய்துகொண்டு இருக்கிறார். மகளும் மருமகனும் ஸ்கிரிப்ட்டில் கவனம் செலுத்துகின்றனர். அவர்களோடு என்னையும் சேர்த்து எங்கள் வீட்டில் நான்கு இயக்குநர்கள். தேவைப் பட்டால் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.




# இலங்கையில் வெளியிடப்பட்ட குரு அரவிந்தனின் நாவல்கள்


எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்கள் கனடா தமிழ் பத்திரிகைகளில் தொடராக எழுதிய இரண்டு புதினங்கள் சென்ற மாதம் இலங்கையில் வெளியிடப்பட்டன. குரு அரவிந்தனின் 50 ஆண்டுகால இலக்கிய சேவையைப் பாராட்டி ஞானம் கலை இலக்கியப் பண்ணையால் நடத்தப்பட்ட பாராட்டு விழாவில் 'என்ன சொல்லப் போகிறாய்?' என்ற நாவல் 16-06-2019 கொழும்பு தமிழ்சங்க மண்டபத்திலும், இதற்கு அடுத்த வாரம் 24-06-2019 தெல்லிப்பழை மகாஜனக்



கல்லூரி பாவலர் துரையப்பாப்பிள்ளை அரங்கில் 'சொல்லடி உன் மனம் கல் லோடி?' என்ற நாவலும் வெளியிடப்பட்டன.

'என்ன சொல்லப் போகிறாய்?' என்ற நாவல் மொன்றியலில் இருந்து வெளி வரும் இருசு பத்திரிகையில் தொடராக வெளிவந்தது. 'சொல்லடி உன் மனம் கல்லோடி?' என்ற நாவல் கனடா உதயன் பத்திரிகையில் தொடராக வெளிவந்தது. இந்த இரண்டு நூல்களும் மணிமேகலைப் பிரசுரத்தால் பிரசுரிக்கப்பட்டிருந்தன. 'என்ன சொல்லப் போகிறாய்?' நாவலின் முதற் பிரதியை ஞானம் பத்திரிகை பிரதம ஆசிரியர் திரு. தி. ஞானசேகரன் அவர்களும், விசேட பிரதிகளை ஞாயிறு தினக்குரல் ஆசிரியர் திரு. பாரதி இராஜநாயகம், பேராசிரியர் சோ. சந்திர சேகரம் ஆகியோரும் நாவலாசிரியர் குரு அரவிந்தனிடம் இருந்து பெற்றுக் கொண் டனர். இந்த விழாவில் ஞானம் கலை இலக்கியப் பண்ணையின் சார்பில் எழுத் தாளர் குரு அரவிந்தன் அவர்கள் 'கதா வித்தகர்' என்ற விருதும் வழங்கிக் கௌர விக்கப்பட்டார். திருமதி பத்மா சோம காந்தன், கே. எஸ். சிவகுமாரன், தகவம் செயலாளர் வசந்தி தயாபரன், ஞானம் பாலச்சந்திரன் போன்ற பல இலக்கிய ஆர்வலர்களும் நூல் வெளியீட்டு விழாவில் கலந்து சிறப்பித்திருந்தனர்.

மகாஜனக் கல்லூரியில் வெளியிடப்பட்ட 'சொல்லடி உன் மனம் கல்லோடி?' என்ற நாவலின் முதற்பிரதியைப் பெற்றோர்: மகாஜனக்கல்லூரி அதிபர் ம. மணி சேகரன் அவர்களும் விசேடபிரதியைப் பொது வைத்திய நிபுணத்துவ ஆலோசகர் வைத்திய கலாநிதி த. பேரானந்தராஜா அவர்களும் நாவலாசிரியர் குரு அரவிந்தனிடம் இருந்து பெற்றுக் கொண்டனர். இந்த நிகழ்வில் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களும் கலந்து சிறப்பித்தார். மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 'நீர்மூழ்கி நீரில் மூழ்கி' என்ற நாவலை




மகாஜனமாதாவிற்குச் சமர்ப்பணம் செய் திருந்த குரு அரவிந்தன் தனது இந்த நாவலையும் நிறுவியவர் நினைவு தினத்தை முன்னிட்டு நினைவுப் பேருரை ஒன்றை நிகழ்த்தி, மகாஜனமாதாவிற்குச் சமர்ப்பணம் செய்திருந்தார்.

பிரபல எழுத்தாளரான குரு அரவிந்தனின் 'சொல்லடி உன் மனம் கல்லோடி?' என்ற நாவலின் அட்டைப்பட நாயகியாக கனடாவில் பிறந்து வளர்ந்த, புதிய தலைமுறையைச் சேர்ந்த இளம் நாட்டிய தாரகையும், சிறந்த பாடகியுமான செல்வி ஐஸ்வரியா சந்துரு அவர்களின் படம் இடம் பெற்றிருந்ததைப் பலரும் பாராட்டியிருந்தனர்.



# பார்த்ததில் பிடித்த இடங்கள்



விதுசிகா அருள்தாசன்
அகவை -14

## சி.என் கோபுரம் - CN TOWER (Canadian National Tower)



ஒன்ராறியோவின் ரொறொன்ரோ நகரின் மத்தியில் சி.என் கோபுரம் அமைந்துள்ளது. சி.என் கோபுரம் 553.3 மீற்றர் உயரத்தை (1,815 அடி) கொண்டுள்ளது. இது 1976ஆம் ஆண்டு கட்டப்பட்டது. சி.என் கோபுரம் என்பது கனடிய தேசியத்தை குறிக்கிறது. 2007ஆம் ஆண்டில் Burj Khalifa -Dubai - 828 metres (2,717 ft) உயரமும் 210 மாடிகளையும் கொண்டது. இது கட்டப்படும்வரை சி.என் கோபுரம் 32 ஆண்டுகளாக மிக உயரமான கோபுரமாக இருந்தது 1995 ஆம் ஆண்டில், சி.என் கோபுரம் ஏழு உலக அதிசயங்களில் ஒன்றாக அறிவிக்கப்பட்டது.

## ஸ்கைலோன் கோபுரம் - SKYLON TOWER

ஒன்ராறியோவின் நயாகரா நீர்வீழ்ச்சிக்கு அருகாமையில் ஸ்கைலோன் கோபுரம் அமைந்துள்ளது. இது 3 நீர்வீழ்ச்சிகளின் பார்வையையும் ஈர்க்கும் ஒரு கோபுரமாக



அமைந்துள்ளது. இந்தக் கோபுரத்தின் மேற்புறத்தில் ஒரு சிற்றுண்டிச் சாலையும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த கோபுரம் 1965ஆம் ஆண்டு திறக்கப்பட்டது. ஸ்கைலோன் கோபுரம் 160 மீட்டர் (520 அடி) உயரமானது. நயாகரா நீர் வீழ்ச்சியைப் பார்வையிடவும் சுவையான உணவு வகைகளை உண்டு மகிழவும் கண்களுக்குக் குளிர்ச்சியான காட்சிகளைக் கண்டுகளிக்கவும் நல்லதோர் இடமாக ஸ்கைலோன் காணப்படுகிறது

## றோயல் ஒன்றாறியோ அருங்காட்சியகம் - ROM - Royal Ontario Museum

றோயல் ஒன்றாறியோ அருங்காட்சியகம் ரொறொன்ரோவில் உலக கலாச்சாரம், கலை மற்றும் இயற்கை வரலாறு நிறைந்த இடமாகும். றோயல் ஒன்றாறியோ அருங்காட்சியகம் வட அமெரிக்காவின் மிகப்பெரிய அருங்காட்சியகங்களில் ஒன்றாக அறியப்படுகிறது. கனடாவில் அதிக பார்வையாளர்களால் பார்வையிடப்பட்ட ஒன்றாக றோயல் ஒன்றாறியோ அருங்காட்சியகம் அறியப்படுகிறது, ஏனெனில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு மில்லியனுக்கும் அதிகமான பார்வையாளர்களின் கவனத்தை றோயல்



ஒன்ராறியோ அருங்காட்சியகம் ஈர்க்கின்றது. இது 1914 ஆம் ஆண்டு திறக்கப்பட்டது. இதில் 6 மில்லியனுக்கும் அதிகமான பொருட்கள் மற்றும் 40 காட்சியகங்கள் உள்ளன. இதில் புதை பொருட்களின் தொகுப்பும் உள்ளது. ரொறொரோவில் பார்க்க வேண்டிய இடங்களில் றோயல் ஒன்றாறியோ அருங்காட்சியகம் முக்கியமான ஒன்றாகும்.


## ரிப்லிஸ் நீர்வாழினக் காட்சியகம் - RIPLEY'S AQUARIUM



ரிப்லிஸ் நீர்வாழினக் காட்சியகம் ரொறொன்ரோவின் பொது நீர்வாழ் பிராணிகளையும் தாவரங்களையும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள இடமாகும். இது சி.என் கோபுரத்திற்கு அருகில் அமைந்துள்ளது. இந்தக் காட்சியகம் 5.7 மில்லியன் லீற்றர் கடல் மற்றும் நன்னீர் வாழ்விடங்களைக் கொண்டுள்ளது. உலகம் முழுவதும் இருந்து 450க்கும் மேற்பட்ட வகையான 16,000க்கும் மேற்பட்ட கவர்ச்சியான கடல் மற்றும் நன்னீர்வாழ் பிராணிகள் இங்கு உள்ளன. ஒன்ராறியோவின் நயாகரா நீர்வீழ்ச்சிக்கு அருகே 2004ஆம் ஆண்டில் இந்தக் கட்டிடத்தைக் கட்டத் திட்டமிட்டிருந்தது. ஆனால் இது ரொறொன்ரோ நகரத்திற்கு மாற்றப்பட்டது. 130 மில்லியன் டொலர் செலவில் 2011ஆம் ஆண்டில் இந்த நீர்வாழினக் காட்சியகம் ஆரம்பிக்கப்பட்டு 2013ஆம் ஆண்டில் பொதுமக்களின் பார்வைக்காகத் திறக்கப்பட்டது.

## கனடாவின் வொண்டர்லாண்ட் - CANADA'S WONDERLAND

கனடாவின் வொண்டர்லாண்ட் 330 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்த பூங்காவாகும். இது ஒன்ராறியோவின் Vaughan நகரின் மத்தியில் அமைந்துள்ளது. இது வட அமெரிக்காவில் அதிகம் பார்வையாளர்களால் பார்வையிடப்பட்ட பருவகாலப் பொழுதுபோக்குப் பூங்காவாகும். கனடாவின் வொண்டர்லாண்டில் 17 றோலர் கோஸ்டர்கள் உள்ளன. மேலும் 8 ஏக்கர் நீர்ப் பூங்காவும் உள்ளது. நீர் பூங்கா Splash Works என்று அழைக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஹாலோவீன் திருவிழா நேரத்தில், கனடாவின் வொண்டர்லாண்ட் ஒரு ஹாலோவீன் தீவாகக் காட்சியளிக்கும். வொண்டர்லாண்டில் ஒரு குளிர்காலத் திருவிழாவை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. ரோலர் கோஸ்டர்



களை விரும்புபவர்களுக்கு வருகை தரும் ஓர் அற்புதமான இடமாகக் கனடாவின் வொண்டர்லாண்ட் காணப்படுகின்றது.


## ரொறொன்ரோ மிருகக்காட்சிசாலை - TORONTO ZOO

அந்த மிருகக்காட்சிசாலை ஒன்ராறியோவின் ரொறொன்ரோவில் அமைந்துள்ளது. இது 710 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இந்த மிருகக்காட்சிசாலை இந்தோ-மலாயா (Indo-Malaya), ஆபிரிக்கா (Africa), அமெரிக்கா (Americas), டன்ட்ரா ட்ரெக் (Tundra Trek),



அவுஸ்ராலேசியா (Australasia), யூரேசியா (Eurasia) மற்றும் கனேடிய டொமைன் (Canadian Domain) என 7 வெவ்வேறு விலங்கியல் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மிருகக்காட்சிசாலையில் சில விலங்குகள் வெளியில் உள்ளன, மற்றயவை கூண்டுகளுக்குள்ளேயே உள்ளன. குறித்த மிருகக்காட்சிசாலை 1974இல் திறக்கப்பட்டது. ரொறொன்ரோ மிருகக்காட்சிசாலை விலங்குப் பிரியர்கள் வருகைதரும் ஒரு வேடிக்கை வினோதம் நிறைந்த இடமாகக் காணப்படுகின்றது.

## கிளிஃப்ரொன் மலை - CLIFTON HILL



நயாகரா நீர்வீழ்ச்சிக்கு அருகிலுள்ள இடங்களில் கிளிஃப்ரொன் மலையும் ஒன்றாகும். பரிசுப் பொருட்கள் விற்கும் கடைகள், மெழுகுச் சிலை அருங்காட்சியகங்கள், வீடியோ விளையாட்டிடம், உணவகங்கள், அமானுஷ்ய வீடுகள்,

(தொடர்ச்சி 27ஆம் பக்கம்...)



# Proud to be serving you through these two Funeral Homes!

**GTA EAST**

OGDEN
FUNERAL HOMES

4164 Sheppard Ave E,
Scarborough, ON M1S 1T3.
www.ogdenfuneralhome.com

**GTA WEST**

LOTUS
Funeral and Cremation Centre Inc.

121 City View Dr,
Etobicoke, ON M9W 5A8.
www.lotusfuneralandcremation.com

:: Family owned and operated for over 70 years
:: East Toronto location just off Hwy 401, between Kennedy Road and Midland Ave
:: Affordable funeral plans to meet your budget

:: On-Site Crematorium
:: West Toronto location just off Hwy 401,410, 427 & 407 North of Belfield Rd and East of Hwy 27
:: Beautiful Facility With Up To 500 Seating

State of the art technology
Financing plans available for both preplanned funerals and at-need funerals
Diverse staff to care for your needs, honour your traditions and speak your language
Travel Repatriation Insurance available (**$495.00 only**) for your lifetime coverage



## Patricia Peter BBM

*Licenced Funeral Preplanning Director*
*Licenced Insurance & Investment Advisor*

Direct: **416-834 5753**
Email: advisorpat10@gmail.com

*"Serving With Dignity, Compassion and Excellence"*

# கடல்நீர் உப்புக் கரிப்பது ஏன்?



சுந்தரம் இந்திராஜா
indrarajah@gmail.com

பூமி முதன் முதலில் பாறைக் குழம்புக் கோளமாக எரிமலைகளுடன் சேர்ந்துதான் இருந்தது. அதன்பின்னர் படிப்படியாக அது குளிர்ந்தது. அப்படி குளிர்ந்தபோது பல வேறு அடுக்குப் பாறைகளுடன் புவி ஓடு உருவானது, பாறைக் குழம்பில் இருந்து பாறைத் தட்டுகளும் உருவாயின. அப்படி புவி ஓடுகளும், பாறைத் தட்டுகளும் உருவான போது, நீர் தனியே பிரிந்து பூமிக்கு மேல் படர்ந்ததால்தான் கடல் உருவானது என்பது விஞ்ஞானிகளின் கணிப்பு.

கடல்நீர் உப்புக் கரிப்பது ஏன்? உண்மையில் ஆற்றுநீரிலும் உப்பு இருக்கிறது. கல்சியம், மக்னீசியம், பொட்டாசியம் மற்றும் பை-கார்பனேட் எனப்படும் உப்புக்கள் அல்லது கடின நீர் (Hard water) என்று சொல்லுவோம். உப்புக் கரிப்பது தெரிவதில்லை. கடலில் உள்ள உப்பு, நாம் அன்றாடம் சமையலுக்கு பயன்படுத்தப்படும் சோடியம் குளோரைடு. அடிப்படையில் ஆற்றுநீரில் உள்ள உப்பும், கடல் நீரில் உள்ள உப்பும் வெவ்வேறானவை. ஆனால், இவற்றில் உப்புக் கரிப்பது கடல் நீரில் உள்ள உப்பு மட்டுமே. அது எப்படி, எங்கிருந்து வந்தது என்பதில் அறிவியலும் பொதிந்து கிடக்கிறது.

நீரில் கலந்துள்ள உப்புகள் அனைத்தும் ஆறுகள் மூலம் வந்து கடலில் சேர்ந்தவையே. ஆறுகள் நிலப்பரப்பின் வழியே ஓடி வரும்போது பாறைகளை அரிக்கின்றன. நிலத்தை அரிக்கின்றன. அப்போது ஆற்று நீருடன் பாறைகள், நிலம் ஆகியவற்றிலிருந்து சிறிதளவு உப்புக் கலக்கிறது. பல கோடி ஆண்டுகளில் இவ்விதமாக ஆறுகளால் அடித்துச் செல்லப்பட்ட உப்பு கடல்களில் போய்ச் சேர்ந்துள்ளது.




சூரிய வெப்பம் காரணமாக கடல்களில் உள்ள நீர் ஆவியாகி மேகங்களாக உருவெடுக்கின்றன. கடல் நீர் ஆவியாகும் போது உப்பு கடலில் தங்கிவிடுகிறது. மழை நீர் உப்பு கரிப்பது இல்லை. ஆனாலும் சில லட்சம் ஆண்டுகளுக்குப் பிறகு கடல் நீரானது இப்போது உள்ளதை விட மேலும் அதிக அளவில் உப்புக் கரிக்கும் என்று சொல்ல முடியாது. ஆண்டுதோறும் நதிகள் மூலம் சுமார் 400 கோடி தொன் உப்பு கடலில் வந்து சேருவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அதே நேரத்தில் கடல் நீரிலிருந்து சுமார் 400 கோடி தொன் உப்பு தனியே பிரிந்து கடலுக்கு அடியில் போய் வண்டல் போலத் தங்கிவிடுவதாக நிபுணர்கள் மதிப்பிட்டுள்ளனர். சூடான கோப்பியில் நீங்கள் இரண்டு ஸ்பூன் சீனியை போட்டால் கரைந்து விடும். ஆனால் 6 ஸ்பூன் சீனியை போட்டால் கோப்பி சற்று ஆறியவுடன் கூடுதல் சீனி கரையாமல் அடியில் தங்கும். அதுபோலத்தான் கடல்களின் அடியில் உப்புப் படிகிறது.

பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய தட்டும் மத்திய ஆசிய தட்டும் ஒன்றை நோக்கி மற்றொன்று நகரும்போது கடலின் அடிப் பகுதி உயர்ந்து இமயமலை தோன்றியது என்று அறிகிறோம். கடலின் அடியில் வண்டல் உப்பு பாறை வடிவில் உயர்ந்தது. இமயமலைப் பகுதியில் இவ்வித பாறை உப்பு கிடைக்கிறது. அமெரிக்காவில் மிச்சிகன் மாகாணத்திலும் இவ்விதம் பாறை உப்பு கிடைக்கிறது. வயதான கடல் உப்புத்தான் இது. இமாலய உப்பில் பெரும்பாலும் இரும்பு ஒக்ஸைடு (துரு) கலந்துள்ளமையால் இளஞ்சிவப்பு நிறத்தை அளிக்கிறது.

நிலத்திலுள்ள மண் வழியாகவும், பாறைகள் வழியாகவும் மழைநீர் கசிந்து செல்கையில் சில உப்புகளையும் அவற்றின் பாகமான இரசாயனங்கள் உட்பட சிறிதளவு தாதுப் பொருள்களையும் கரைத்துச் செல்கிறது. அந்த நீர், ஓடைகள், ஆறுகள் வழியாக கடலில் கலக்கையில் இந்த உப்புகளையும் எடுத்துச் செல்கிறது. ஆழ்கடல் தரையிலுள்ள வெடிப்புகள் வழியாக தண்ணீர் புவி ஓட்டிற்குள் செல்கிறது. அங்கு பயங்கரமாக சூடாக்கப்பட்டு, தாதுப் பொருள்களையும் தன்னோடு எடுத்துக்கொண்டு, வெந்நீர் ஊற்றுகள் வடிவில் மீண்டும் வெளியே வந்து கடலோடு கலக்கிறது. காற்றின் மூலமாக நிலத்திலுள்ள துகள்களை கடலில் கொண்டுபோய் சேர்க்கிறது.

கடல் நீரில் ஏறத்தாழ 35 பங்கு உப்பு என்ற வீதத்தில் இருக்கிறது. அப்படியென்றால், உப்புகளும் மற்ற தாதுப் பொருள்களும் சேருகின்ற வேகத்திலேயே நீங்கியும் விடுகின்றன என்பது தெளிவாகிறது. இது மற்றொரு கேள்வியை எழுப்புகிறது. இந்த உப்புகள் எங்கே போகின்றன? பலவகை உப்புகள் கடல்வாழ் உயிரிகளால் உறிஞ்சப்படுகின்றன. உதாரணமாக, பவளப் பாறைகள், மெல்லுடலிகள், ஓட்டுடலிகள் ஆகியவை உப்பிலுள்ள கல்சியத்தை உட்கொள்கின்றன் இதை உபயோகித்து தங்கள் ஓடுகளையும் எலும்புக்கூடுகளையும் அவை உருவாக்குகின்றன. நுண் பாசிகளான டயாட்டம்கள் (diatoms algae) சிலிக்காவை உறிஞ்சிக் கொள்கின்றன. பக்றீரியாவும் மற்ற உயிரிகளும் கடலில் கரைந்துள்ள கரிமப் பொருள்களை உட்கொள்கின்றன.


கடல் நீரின் உப்புத்தன்மை இடத்துக்கு இடம், பருவத்துக்கு பருவம் வித்தியாசப்படும். மற்ற பெருங்கடல்களோடு இணைக்கப்பட்டிருக்கும் கடல்களிலேயே மிக அதிகமாய் உப்புக் கரிக்கும். ஏனெனில் அங்கு பெருமளவு நீர் ஆவியாகிறது. அதிகளவான மழைநீரை அல்லது பெரிய ஆறுகளிலிருந்து அதிகளவான நன்னீரைப் பெறும் இடங்களில் கடலின் உப்புத் தன்மை சராசரியைவிட குறைவாக இருக்கும். அவ்வாறே, துருவப் பிரதேசங்களில் பனிக்கட்டி உருகும் இடங்களிலும் கடல் நீர் அவ்வளவாக உப்புக் கரிக்காது. ஏனெனில், அந்தப் பனிக்கட்டிகள் உறைந்துபோன நன்னீர் அல்லவா? மொத்தத்தில் பார்த்தால் கடல் நீரின் உப்புத்தன்மை பெருமளவு நிலையாகவே உள்ளது.

## கடல் உப்புக்கும் மற்றும் மேசை உப்புக்கும் வித்தியாசம் என்ன?




வழக்கம்போல் கால மாற்றத்தில் நாம் நம்முடைய பாரம்பரிய 'கல் உப்பு' எனும் கடல் உப்பை மறந்து மேசையுப்புக்கு மாறி பல வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால் கடல் உப்புத்தான் இன்று வரை வைத்தியர்கள் முதல் விஞ்ஞானிகள் வரை பரிந்துரை செய்யும் ஓர் அற்புதமான உப்பு. கடல் உப்புத்தான் பின் அது சுத்திகரிப்பு (processing) செய்யப்பட்டு வெள்ளையாக மாற்றப்படுகிறது, பின் இரசாயன கலவைகளைப் பயன்படுத்தி அவை ஒன்றுடன் ஒன்று ஒட்டாத தன்மை பெறப்படுகிறது. இறுதியாக செயற்கை அயடின் (iodine) கலக்கப்பட்டு செயற்கையான ஓர் இரசாயன கலவையாகவே வெளிவருகிறது. மேசையுப்பை முடிந்த வரை தவிர்ப்பது நல்லது. இரத்த கொதிப்பு (blood pressure), பக்கவாதம் (stroke), வாதம், முடக்குவாதம் (paralysis), மாரடைப்பு (heart attack), மூளை சாவு போன்ற பல நோய் உருவாக காரணமாகி விடும். அது மெதுவாக கொல்லும் விஷமாக (slow poison) மாறி விடும். உப்பில்லாத பண்டமாக நிறைய சமையல்கள் இருக்கிறது. சமையல் ஆரம்பத்தில் கடல் உப்பு சேர்ப்பதை விட கறியை அடுப்பிலிருந்து இறக்குவதற்க்கு சற்று முன்னர் பாதி அளவு கடல் உப்பை சேர்த்து கலக்கி அதே சுவையைப் பெறலாம். கடல் உப்பை குறைத்து குறைத்து சேர்த்து சமையல் செய்யக் கற்று கொண்டு ஆரோக்கியமாக வாழுங்கள். மறக்காமல் கடல் உப்பைப் பயன்படுத்துங்கள்.

HOME PAINTING
• Popcorn Ceiling Renewal
• Home Painting • Moulding
• Hardwood Flooring
• Laminate & Tiling
உங்கள் நிர்மாண வேலைகள் எதுவாயினும் குறித்த நேரத்தில் செய்து கொள்ள அழையுங்கள்
FREE ESTIMATE
தொடர்புகளுக்கு:
416.471.3146



# பார்வைக்...


16ஆம் பக்கத்தொடர்ச்சி

குவிவில்லை கொண்ட மூக்குக் கண்ணாடிகள் மூலமோ தொடுவில்லைகள் (contact lenses) மூலமோ சரியாக்கலாம்

முதியோர்களுக்கு கண்களில் ஏற்படும் பிரச்சினைகள் பலவாகும். அவை கண்புரை (Cataracts), வயதுக்கான பார்வை மங்குதல் (Age related macular degeneration -ARMD), கண் அழுத்தம் (Glaucoma) என்பனவாகும்.

கண்புரை (Cataracts): விழி வில்லையில் ஒரு பூ படர்தல் போன்று மெல்லிய சவ்வு தோன்றுவதால் வெளிச்சத்தைத் தடுத்து விடுகிறது. இதனால் பார்வை மங்கி தெளிவின்மையை தோற்றுவிக்கலாம். இந்தச் சந்தர்ப்பத்தில் சத்திர சிகிச்சையும் கண்ணாடிப் பாவனையும் தேவைப்படுகிறது.

வயதுக்கான பார்வை மங்குதல் - ARMD: எனப்படும் கண் நோயானது விழித்திரையில் உள்ள மத்திய பகுதியான மக்குலா (Macula) என்பதில் ஏற்படும் தேய்மானம் காரணமாக ஏற்படுவது. இது பார்வைக் குறைவை ஏற்படுத்தும். இரத்தக் கலங்கள் தளர்வடைந்து விழித்திரைகளுக்கு தேவையான சத்துக்களையும் பிராணா வாயுவையும் பெற்றுக்கொள்வதில் தடை ஏற்பட்டு மத்திய பார்வை குறைந்து



போகலாம். இந்த சந்தர்ப்பத்திலும் கண்ணாடி தேவைப்படும்.
குளுக்கோமா (Glaucoma): எனப்படும் கண் இறுக்க நோயானது கண் அழுத்தம் ஏற்பட்டு உள்ளே அதற்குரிய திரவ உற்பத்தியை தடை செய்கிறது. எமது கண்ணீர் வருவதிலும் இது பிரச்சனையை உண்டாக்கும். பார்வை நரம்பு பாதிப்புறும், விழித்திரை திசுக்கள் பாதிப்புறும். முற்றாகப் பார்வையே போய்விடும்.

ஒரு தலைப்பார்வை (Astigmatism): இக்குறைபாடு விழி வெண்படலத்தில் (Cornea) சரியாக ஒளி சேர்வதில்லை. விழித்திரைக்கு ஒளி செல்வதற்கிடையில் இரண்டு இடங்களில் ஒளி பிரிகின்றது. இதனால் பார்வை மங்கும், சிறு நிழல் வடிவம் ஏற்படும்.


பிறழ்ச்சி நோய் High Order defect (Aberrations): விழி வெண்படலத்தில் (Cornea) உள்ள ஒழுங்கீனத்தால் விழித்திரைக்கு ஒளி செல்வதில் பிரச்சனையை உண்டாகும். இதனால் தெளிவான படம் ஏற்படுவதில். இரவில் இப்பிரச்சினை அதிகரிக்கும். சிலருக்கு சில விம்பங்கள் தெரியும். ஊடொளி (Laser) மூலமாகவும் இக் குறைபாட்டை நிவர்த்தி செய்யலாம்.

உலகில் இன்று அரைவாசிப் பேர் வரை கண் பார்வை பிரச்சினையுடன் வாழ்கின்றனர். பலருக்கு இதுபற்றி தெரிந்திருக்கவில்லை. பலர் தெரிந்தும் மாற்ற முயற்சிக்கவில்லை. 30 விதமான சிறுசிறு பகுதிகளை கொண்ட எமது கண்ணானது மிகவும் நுட்பமான அமைப்புள்ளது என்பதால் பலர் கண்ணாடியை அணிய பயப்படுகின்றனர். நாகரிகம் எனக் கருதுவோரும், கஷ்டம் எனக் கருதுவோரும் ஏன் இந்த தொல்லை என்போருமாக வாழ்ந்து வருகின்றனர்.

சராசரி 24.2 மி. மீற்றர் அளவுள்ள இக்கண் முதலில் 3 வயதளவில் 22.5 - 23 மி. மீற்றராகவும் 12 வயதானதும் முழு அளவிலும் மாறிவிடுகிறது. பின்பு வாழ்நாள் முழுவதும் அதேயளவுதான். எனினும் சிறுவர்களுக்கு சோர்வான கண் (Lazy Eye) ஏற்படுகிறது. Amblyopia பிரச்சினைகளுடன் வாழ்வர். ஒரு பக்கக் கண் மற்றைய கண்ணுடன் சேர்ந்து செயல்பட மாட்டாது. இதனால்தான் இதனை சோர்வு (lazy) என்பர். ஒரு கண் ஒருவிதமாகப் பார்வையிட மறு கண் வேறுவிதமாகச் செயல்படும். இதனை வாக்குக் கண் என்பர். சராசரி 6 வயதில் இது தெரிந்துவிடும். இதனை இலகுவில் அடையாளம் காணலாம்.

பொதுவாகவுள்ள ஒளிகதிர் கண் வில்லையினூடாக செல்லும்போது ஏற்படும் சிதறலிலுள்ள குறைபாட்டை (Refractive errors) நிச்சயமாகச் சரி செய்யப்படலாம். ஊடொளி (Laser), சத்திரசிகிச்சை முறைகள் இருந்தாலும் பாதுகாப்பானது கண்ணாடிகளேயாகும். இது மிகவும் சுலபமானது. செலவு குறைந்தது. குழந்தையில் கண்களை அவதானித்தால் முற்றாகக் குணப்படுத்தலாம். இன்று இவ்வாறான சிதறல் வடிவப் (Refractive) பாதிப்பில் 42% மானோர் உள்ளனர்.

ஒவ்வொரு காலத்திலும் புதிய புதிய தொழில்நுட்பம் பார்வைக் கண்ணாடிகளுக்குள் புகுத்தப்படுகின்றனர். தொடுவில்லைகள் (Contact Lenses). Laser முறைகளினால் சாதாரண பார்வைக் கண்ணாடிகளின் பாவனை குறையலாம். லேசர் முறையை சுருக்கமாக 'Lasik'




என்பர் (Laser – Assisted in Situ Keratomileusis). தவிர உள் விழி வில்லைகள் (Intraocular Lens) முறையும் உள்ளது. தற்போதுள்ள கண் பாதுகாப்பு முறைகளின் நவீனத்துவம் குறிப்பிடத்தக்க அளவில் பார்வைக்கண்ணாடிகளின் தேவையை குறைத்துள்ளன.

எனினும் பார்வைக் கண்ணாடி உற்பத்தியாளர்களும் கண்ணாடிகளில் புதுப்புது முறைகளைக் கையாளத் தொடங்கியுள்ளனர். இதில் முக்கியமானது முப்பாரிமாண அமைப்பு (3D Printing) முறையாகும். இதனை (3D technology) என்பர். இதில் பல புதிய செயல்முறைகள் உள்ளன. கண்களை பாவித்து பல்வேறு வியாபார நோக்கமுள்ள நிறுவனங்கள் புதிது புதிதாக மக்களைக் கவர்கின்றன. வெறும் நாகரிகத்திற்காகவும் கேளிக்கைக்காகவும் சந்தையில் வருகின்ற கண்ணாடிகளை அணிந்து கண்களை பழுதாக்குபவர்களும் உளர்.

எதிர்கால பார்வைக் கண்ணாடிகளில் ஒளிப்படங்களைப் பார்க்கலாம், பாட்டுக் கேட்கலாம். கார்கள் பறக்கப் போகின்றன. மின்சார கார்கள் தெருவில் உள்ளன. இச்சூழ்நிலையில் பார்வைக் கண்ணாடிகளுக்கு மட்டும் என்ன குறைவா? துல்லியக்கமாகவும் தானாகவும் இவை செயற்படப் போகின்றன. கண்முன்னே ஒரு கணினி போலச் செயற்பட உள்ளன.

இவை தவிர் முகத்தில் உள்ள இரத்த ஓட்டங்களையே கண்ணாடிகள் காட்டி விடலாம். இவையெல்லாம் மருந்தேற்றப் பட்ட கண்ணாடிகள்தான். கூகிள் நிறுவனம் புதிய புதிய கண்டுபிடிப்புக்களை வெளியிட்டுக் கொண்டே இருக்கிறது.

எப்படிப் பார்த்தாலும் சரியான பரிசோதனை செய்யவும், தன்னியக்கமாக செயற்படவும், உடையாமல் இருப்பதற்கும் தொலைந்தால் கண்டுபிடிப்பதற்கும் இரவில் பார்ப்பதற்கும் இந்த நவீன கண்ணாடிக் கண்டுபிடிப்புகள் உதவப் போகின்றன.

விதைத்துவிட்டாலே அது செடியாகி வளர்ந்து
பூத்து கனி கொடுத்து விடாது;
அதற்கான பராமரிப்பு வேலைகளை
தினமும் செய்யவேண்டும்.
அதுபோலத்தான் நமது இலட்சியங்களும்;
அன்றாடம் செய்யவேண்டிய முயற்சிகளை
செய்தால் தான் வெற்றியடைய முடியும்.

# தேடலும் புரிதலும்

எனது பத்து வயதில்
ஆத்தா - Grand mother -
சாகும்போது
புதினம் பார்த்து நின்று அழுதேன்

பதினான்கு வயதில் பத்தொன்பது
வயதான
எனதருமை
இளையஐயா சாகும்போது
வானத்தைப் பார்த்து நின்று அழுதேன்

ஒரே வகுப்பில் படித்தவன்
ஊர்ச்சண்டையில்
இருபது வயதில் இறந்தபோது
ஏனென்று என்னுள் விளக்கம் தேடினேன்

நாற்பது வயதில் உயிர் நண்பன்
போர் விமானம் வீசியெறிந்த
குண்டடிபட்டு இறந்தபோது
குமுறிக் கண்ணீர் வழிய அழுதேன்

உள்நாட்டுப் போரிலே
சுனாமி ஆழிப்பேரலையிலே
குவியலாக உறவுகள் மாண்டபோது
ஞானிபோல் சிந்தித்தேன்;


விஞ்ஞானத்தையும்
விளையும் உணவையும் முந்திக்கொண்டு
உலகச்சனப்பெருக்கம் உயர்வடைகின்றது
கடல் மாசடைந்து காடு வெட்டப்பட்டுப்
பூமி வெப்பம் அதிகரிக்கின்றது

மருத்துவ வளர்ச்சித் திறமையால்
முதியோர் வயதும் நீட்சி பெறுகின்றது


சின்ன மீன்களைப் பெரிய மீன்கள்
துரத்திப் பிடித்துச் சாப்பிடுகின்றன



மரணம் என்பதின் யதார்த்தம்
அறுபது வயதைக் கடக்கும்போதுதான்
என் மூளை நரம்புக் கூட்டத்தைத்
தெளிவடைய வைக்கின்றது



முத்துராஜா


ரொறன்ரோ தமிழ்ச்சங்கம்
ஆடி மாத இலக்கியக் கலந்துரையாடல்
அறிவியல் தமிழ் (தொடர் - 4)

சிறப்புப் பேச்சாளர்கள் உரை:
"பாரதியின் அறிவியல் பார்வை" - பேராசிரியர் க.பசுபதி
"இரட்டைக் காப்பியங்களில் அறிவியல் கூறுகள்" - திரு கனி விமலநாதன் B.Sc
"சித்தர்பாடல்களில் அறிவியல்" - கலாநிதி பால.சிவகடாட்சம்
"கண்ணதாசன் கவிதைகளில் அறிவியல்" - பேராசிரியர் உதயகரன் துரைராஜா
ஐயந்தெளிதல் அரங்கு
நாள்: 27-07-2019
நேரம்: மாலை 3:00 முதல் 7:00 வரை
இடம்: ரொறன்ரோ தமிழ்ச்சங்க மண்டபம்
Unit 7, 5633, Finch Avenue East
Scarborough, M1B 5K9
(Dr. Lambotharan's Clinic - Basement)
தொடர்புகளுக்கு: அகிள் - 416-822-6316
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
அனுமதி இலவசம்!

# நினைவில் நிற்பவை-21



- துறையூரான் -

காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரியில் எனது பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பை முடித்துக் கொண்டு விடுமுறைக்குத் தாயகம் சென்று திரும்பிவந்து பட்டப் படிப்பைத் தொடர்வதற்கான முயற்சியில் ஈடுபட்டேன். எனது பெறுபேறு 2A, 2B, 2C என இருந்ததால் வேலூர் வைத்தியக் கல்லூரிக்கு விண்ணப்பிக்கலாமென எனது விரிவுரையாளர் கூறினார். ஆனால் எனது குடும்ப நிலைமை இதற்கு இடம் தருமா என ஆழமாகச் சிந்தித்தேன். ஆறு பேருடன் கூடிய குடும்பத்தின் மூத்த பிள்ளையாதலினால் தகப்பனாரைக் கூடிய பணக் கஷ்டத்துக்கு ஆளாக்க விரும்பாமல் சென்னையிலுள்ள கல்லூரிகளுக்கு விண்ணப்பித்தேன். கிறிஸ்தவக் கல்லூரியில் உயிரியியல் பிரிவில் இடம் கிடைத்தது. இன்னுமொரு தகவலையும் இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும். தமிழ் நாட்டில் பிறந்து வளர்ந்த மாணவர்களிடையே பரீட்சையில் தமிழ்ப் பாடத்துக்கும் உளவியல் பாடத்துக்கும் பச்சையப்பன் கல்லூரியில் பரிசுகள் பெற்றேன். பிரபல எழுத்தாளரும் பின்னாளில் சென்னைப் பல்கலைக்கழக ஆய்வுத்துறையை பொறுப்பாளராகவும் இருந்த பேராசிரியர் ந.சஞ்சீவி அவர்களே எனது தமிழ் விரிவுரையாளராக இருந்தவர். அவர் என்னைச் சந்தித்தபோது சிலோன் மாணவர்களுக்குத் தமிழ் அதிகம் வராமல் கஷ்டப்பட்டதைக் கண்டிருக்கிறேன். ஆனால் நீயோ ஒரு புறநடையாகப் பரிசில் வென்றிருப்பது பாராட்டுக்குரியது என்றார். இதற்கு எனக்குப் பரியோவான் கல்லூரியில் தமிழ் கற்பித்த சுப்பிரமணியம் ஆசிரியருக்கும் கீழ் வகுப்புக்களில் தமிழ் கற்பித்த பல ஆசிரியருக்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை கிறிஸ்தவக் கல்லூரி தமிழ் நாட்டிலேயே ஒரு சிறப்பான கல்லூரி எனப் பெயர் பெற்றது. இன்னும் அதன் பெயரைக் காப்பாற்றி வருகின்றது. இதில் கல்வி கற்றவர்களில் பெரும்பாலானோர் தத்தமது நாடுகளில் உயர் பதவிகளில் பணியாற்றி வந்தனர், வருகின்றனர். தற்போது பெப்சி நிறுவனத்தின் தலைவராக இருக்கும் பெண்மணி சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியின் பழைய மாணவர். மற்றும் முன்னாள் இந்திய ஜனாதிபதி இராதாகிருஷ்ணன், பாதுகாப்பு மந்திரி கிருஷ்ண மேனன் போன்ற பலரும் பழைய மாணவர்களே.

இனி கிறிஸ்தவக் கல்லூரியின் வரலாறு பற்றிப் பார்ப்போம். இக்கல்லூரி 1835ஆம் ஆண்டில் ஓர் ஆண்கள் பள்ளியாக ஸ்கொற்லாந்து பாதிரிமாரால் சென்னையிலுள்ள எழும்பூரில் ஆரம்பிக்கப்பட்டது. இதனை நடத்துவதற்காக வண.ஜோன் அண்டெர்சன் என்பவர் ஸ்கொற்லாந்துத் தேவாலய சபையினரால் இந்தியாவுக்கு



அனுப்பி வைக்கப்பட்டார். 56 மாணவர்களைக் கொண்ட இப்பள்ளி செயின்ற் அன்றூஸ் பாடசாலை என்ற பெயருடன் ஜோர்ஜ் ரவுன் என்ற இடத்துக்கு மாற்றப்பட்டது. பின்னர் கலாநிதி வில்லியம் மில்லர் என்பவர் 275 ஏக்கர் காணியில் இப்பள்ளியைப் பல கட்டிடங்களோடு பெரிதாக்கினார். இதன் துரித வளர்ச்சி காரணமாக வண.வில்லியம் ஸ்கினெர் என்ற அதிபர் (1909-1921) தாம்பரம் செயற்றிடத்தை 1919இல் ஆரம்பித்து வைத்தார். தாம்பரத்திலுள்ள சேலையூர் காட்டின் 390 ஏக்கர் காணியை அப்போது நகரத் திட்டமிடல் செயலாளராக இருந்த வண.கோடன் மத்தியூ என்பவர் அரசாங்கத்தோடு பேசி இக்கல்லூரிக்கு வாங்கிக் கொடுத்தார். அப்போது கொடைக்கானலில் வாழ்ந்த சுவிற்சர்லாந்து கட்டிடக் கலைஞர் கட்டிடங்களை வடிவமைத்தார்.

பேராசிரியர் எட்வேட் பாண்சும் அவரது மனைவியும் இங்கு பல அரிய மரங்களை நாட்டி காணியை நன்கு வடிவமைத்தனர்.

சென்னை நகரின் மத்தியில் 100 வருடங்களாக நடந்த கல்லூரி 1937 இல் தாம்பரத்துக்கு இடம் மாறியது. ஜனவரி 30, 1939இல் அப்போது சென்னை ஆளுநராக இருந்த ஜோன் எர்ஸ்கின் பிரபு இக்கல்லூரியைத் திறந்து வைத்தார். மாணவர் விடுதிகளாக சேலையூர், ஹூபர், சென். தோமஸ் என்ற மூன்று விடுதிகளும் கட்டப்பட்டிருந்தன. 1939இல் சில துறைகளுக்கு பெண்களும் சேர்க்கப் பட்டனர். 1950இல் கிண்டி எனும் இடத்தில் பெண்கள் விடுதி ஒன்று கட்டப்பட்டது. பின்னர் 1968இல் மாட்டின் மண்டபம் என்ற பெண்கள் விடுதி தாம்பரத்தில் கல்லூரி வளாகத்தில் கட்டப்பட்டது. பின்னர் 2008இல் மார்கிறெற் மண்டபமும், 2016இல் பாண்ஸ் மண்டபமும் பெண்கள் விடுதியாகக் கட்டப்பட்டது.

கலாநிதி ஏ.ஜே.பொயிட் இக்கல்லூரியின் அதிபராக 18 ஆண்டுகள் (1938-1956) பணியாற்றினார். இவர் மாணவர்கள் மீது கூடிய அக்கறை காட்டினார். பெரும்பாலானோரின் பெயரையும் ஞாபகத்தில் வைத்திருந்தார். இவரின் பின் பேராசிரியர் மக்பெயில் அதிபரானார். இவர் காலத்தில் நான் இங்கு கல்வி கற்றேன். இவரைப் பற்றி பின்னர் விரிவாக எழுதுவேன். இக்கல்லூரியின் முதலாவது இந்திய அதிபர் கலாநிதி சந்திரன் தேவநேசன். இவர் வளர்ந்து சிறிலங்காவில் மணமுடித்தது லெஸ்லி குணவர்த்தன (அரசியல் பிரமுகர்)வின் சகோதரியை. எனவே இலங்கை மாணவர்கள் மீது இவருக்குக் கூடிய பரிவு இருந்ததில் ஆச்சரியமில்லை. இவர் எனக்கு அறநெறிக் கல்வியைப் படிப்பித்தவர் என்பதில் பெருமையும் சந்தோஷமும் உண்டு. இவரைப் பற்றியும் பின்னால் எழுதுவேன். இவர் ஒரு காந்தியவாதி. சுற்று வட்டாரத்திலுள்ள கிராமத்தவருக்கு ஆசிரியர்களையும் மாணவர்களையும் கொண்டு பல சேவைகளை நடத்தி வந்தவர். இவர் 1962-1972வரை இங்கு அதிபராகக் கடமையாற்றினார்.

இக்கல்லூரி ஒரு தனிப் பல்கலைக்கழமாக இயங்குவதற்கான அனுமதி 1978இல் இந்திய அரசு வழங்கியது. அதைப்பெற்ற முதல் கல்லூரி சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரி என்பது பெருமைக்குரிய விடயம். 1981இல் தன்னாட்சிப் பல்கலைக்கழகத்திலிருந்து முதல் தொகுதிப் பட்டதாரிகள் வெளி வந்தனர்.


இக்கல்லூரியில் பல்வேறு துறைகளில் பட்டப்படிப்புக்களும், மேற்படிப்புக்களும் கற்பிக்கப்படுகின்றன. வழக்கமான கலைத் துறை, அறிவியல், வர்த்தகம் போன்றவற்றுடன் தொல்லியல், சங்கீதவியல், வர்த்தகத் துறையில் மீன் வளர்த்தல், சமூகப் பணி, கணினித்துறைப் பிரயோகம் போன்ற நவீன துறைகளும் கற்பிக்கப்படுகின்றன. பல துறைகளில் M.phil, Ph.D போன்ற மேற்படிப்புக்களில் பட்டங்கள் வழங்கப்படுகின்றன. இங்கு 38 துறைகள் உள்ளன. இவை இரவு பகலாக இயங்குகின்றன. இங்கு 8500 மாணவர்களும் 294 விரிவுரையாளர்களும் பணியாற்றுகின்றனர். விரிவுரையாளர்களுள் 50 சதவீதமானோருக்கு மேல் கலாநிதிப் பட்டம் பெற்றவர்கள், தாவர உயிரியல் துறை, தாவர தொழில்நுட்பத்துறையில் பூக்கள் பற்றிய ஆய்வுத்துறை போன்ற புதிய துறைகளில் ஆய்வுகள் செய்து பல புதிய பூக்குந் தாவரங்கள், புதிய அல்கா இனங்கள், புதிய சுவட்டுத் தாவரமென வியக்தகு கண்டுபிடிப்புக்களைச் செய்து இப் பல்கலைக்கழகத்துக்குப் பலர் உலகப் புகழும் பெயரும் பெற்றுக் கொடுத்துள்ளனர்.

ஆசியாவிலேயே அதிகம் புகழ்பெற்ற 10 பல்கலைக்கழங்களுள் ஒன்றாக இது திகழ்கிறது. நான் 1961இல் பட்டதாரியாக வெளியேறிய பின் பல துறைகளிலும் முன்னேற்றப் பாதையில் செல்லும் இக் கல்விக் கூடத்தின் பழைய மாணவன் என்பதில் நான் பெருமையடைகிறேன்.

இவ்வாறு உயிரியல் தொழில்நுட்பத் துறையும் மறைந்த உயிரினங்களை அடையாளம் அறியும் செயற்றிட்டமொன்றைப் பல்வேறு அமைப்புக்களுடன் சேர்ந்து ஆரம்பித்துள்ளது. இதற்கு கலாநிதி நரசிம்மன் பொறுப்பாக உள்ளார். மேலும் இங்கு 16 துறைகளுக்கு அரசு மானியம் வழங்கி ஆய்வுகளை மேற்கொள்ள ஊக்கமளிக்கிறது. 14 துறைகள் தாமாகப் பணம் பல்வேறு வழிகளிலும் பெற்று இயங்கி வருகின்றன.

**கலைவிழா** - 1980 முதல் இக்கல்லூரி Deep Woods எனும் பல்கல்லூரிகளின் சங்கமமாக ஒரு கலாசார விழாவை நடத்தி வருகிறது. இது பெரும்பாலும் ஆண்டு தோறும் பெப்ரவரி மாதத்தில் நடைபெறும். இந்த மூன்று நாள் விழாவில் இந்தியாவிலுள்ள பல்வேறு பல்கலைக்கழக மாணவ, மாணவியர் கலந்து கொள்கின்றனர். இதில் பார்வையாளர்களாக 30,000 பேர் இணைந்து கொள்கின்றர். இரண்டாம் நாள் விழாவில் பல்வேறு இனங்களைச் சேர்ந்த பல்வேறு மொழிகளை பேசும் இளஞ் சந்ததியினரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். அனுராதா சிறிராம், மால்குடி சுபா, சிறினிவாசன், உன்னிகிருஷ்ணன், நரேஷ் ஐயர், அனிருத் ரவிச்சந்தர், சிட் சிறிராம், ஹிப்ஹொப் தமிழா, சக்திசிறி கோபாலன் போன்ற பிரபலங்களும் கலந்து சிறப்பித்துள்ளனர். மூன்றாம் நாள் ஆட்டக் கச்சேரி (Rock Consent) நடைபெறும். இதில் இந்தியாவின் பிரபல குழுக்களான பரிக்கிரமா, ஒரேன்ஜ் ஸ்ரிஸ், மோக்ஷா, கில்லர் தக்காளிகள், தெம் குளோன்ஸ்

(தொடர்ச்சி 38ஆம் பக்கம்...)

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416.754.7338 / 416.724.7480
3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# அறிவியல் என்றால் என்ன?

## அறிவியல் கதிர்

- பேராசிரியர் கே.ராஜு -

இந்தக் கேள்வியை அறிவியல் கதிர் பகுதியில் பல முறை கேட்டு பதில் அளித்திருக்கிறோம். ஆனாலும் என்ன? இன்னொரு புதிய கோணத்தில் அளிக்கப்பட்ட பதிலைத் தெரிந்து கொள்வோமே?

சிலர் இயற்கையைப் படிப்பதுதான் அறிவியல் என்பார்கள். வேறு சிலருக்கு அறிவியல் என்பது இயற்கையில் உள்ள உயிரினங்கள் மற்றும் உயிரற்ற பொருட்கள் பற்றிய ஆய்வாகப்படும். சூரியன், சந்திரன், நட்சத்திரக் கூட்டங்கள் நகர்வதை ஆழ்ந்து கவனித்துவிட்டு மனிதர்களின் வருங் காலத்தைக் கணிக்க முடியும் என நம்பிய அக்கால மனிதர்கள் ஜோதிடக் கலையை உருவாக்கிவிட்டு அதையும் அறிவியல் என்றனர். ஆனால் இந்தக் கூற்றுகள் எல்லாம் அறிவியலை சரியாக வரையறுத்து விட்டதாகக் கூறமுடியாது. அப்படியென்றால் சரியான வரையறை எது? ஒருவர் உடல் சூடாவதை காய்ச்சல் என்கிறோம். வீட்டில் உள்ளவர்களோ வைத்தியரோ அவரைத் தொட்டுப் பார்த்துவிட்டு சுரம் எவ்வளவு என்பதைக் கணிப்பார்கள். தொட்டுப் பார்ப்பவரின் கை சூடாக இருக்கிறதா குளிர்ச்சியாக இருக்கிறதா என்பதைப் பொறுத்து நோயாளியின் உடல் வெப்பநிலை உண்மையில் உள்ளதைவிடக் குறைவாகவோ அதிகமாகவோ தெரியும். வெப்பமானி கண்டுபிடிக்கப்பட்ட பிறகு ஒருவரது உடல் நிலையைத் துல்லியமாகக் கண்டுபிடித்துக் கூறமுடிகிறது. ஒருவரது உடல்நிலையை யார் அளவிடுகிறார் என்பதைப் பொறுத்து அது மாறாது. வெப்பமானி உள்ளதை உள்ளபடி காட்டிவிடுவதால் அது ஓர் அறிவியல் நடவடிக்கை ஆகிவிடுகிறது.

பிரபலமான ஆர்க்கிமிடீஸ் கோட்பாடு சரியாக அளவிடுவதை அடிப்படையாகக் கொண்டது. பொருளை நீருக்குள் அமிழ்த்தும்போது இடப்பெயர்ச்சியாகும் நீரின் கனஅளவை வைத்து ஆர்க்கிமிடீஸ் தங்கம் மற்றும் தாமிரத்தின் அடர்த்தியை நிர்ணயம் செய்தார். இதிலிருந்து அரசரது கிரீடம் சுத்தமான தங்கத்தால் செய்யப்பட்டிருந்ததா அல்லது அதில் தாமிரம் கலப்படம் செய்யப்பட்டிருந்ததா என்பதை அவரால் கண்டுபிடிக்க முடிந்தது. எனவே, அறிவியல் என்பதை சரியாக அளவிடுதல் (quantification) என வரையறை செய்வது சரியாக இருக்கும். எந்தக் குணாதிசத்தையும் எந்தப் பொருளின் இருப்பையும் தனிப்பட்ட விருப்பங்களையும் எண்ணியல் அடிப்படையில் (numerical terms) சரியாக அளவிட்டுக் கூறும்போது அது அறிவியல் ஆகிறது. சரியாக அளவிடுதலுக்கு உதவும் எந்த அணுகுறையும் அறிவியல் சார்ந்ததுதான்.

கடந்த காலத்தில் ஒரு டாக்டர் பல ஆண்டுகள் அனுபவத்தில் கற்றுக்கொண்ட திறமையை வைத்து ஒரு நோயாளிக்கு அறுவை சிகிச்சை செய்வார். இன்று லேசர் சிகிச்சை பல எண்ணியல் கட்டுப்பாடுகளின் கீழ் செய்யப்படுகிறது. எனவே லேசர் அறுவை சிகிச்சை அறிவியல்பூர்வமானதாகக் கருதப்படுகிறது.

முப்பது, நாற்பது ஆண்டுகளுக்கு முன் அரசியல் நோக்கர்கள் தேர்தல் முடிவுகளை உள்ளுணர்வின் அடிப்படையில் முன்கூட்டியே கணித்துச் சொல்வார்கள். புள்ளியியல் முறையில் பல்வேறு விதமான மாதிரி சர்வேக்கள் எடுத்து தேர்தல் முடிவுகளைக் கணிப்பது என்ற நடைமுறை வந்தபிறகு ஒரு சிலரின் ஊகமாக இருப்பது மாறி தேர்தல் முடிவைத் துல்லியமாகக் கணிப்பது சாத்தியமாகியிருக்கிறது. அதில் விருப்பு வெறுப்புகளைப் புகுத்தி கணிப்பில் தில்லுமுல்லுகள் செய்வது முற்றிலும் வேறு.

எந்தவொரு நிகழ்வையும் தன்னுணர்வாக அறிந்து அல்லது ஏதோ சில கணக்குகளைப் போட்டு ஒரு ஜோதிடர் முன்கூட்டியே கூறுவதாக வைத்துக் கொள்வோம். அது சமயத்தில் பலிக்கவும் செய்யலாம். ஆனால் அவர் கூறியது நடைபெறாவிட்டால் முடிவைத் தவறாக்கிய காரணி எது என அளவிட்டுக் கூற எந்த வழியும் கிடையாது. மனித வாழ்க்கையின் மீது எந்தவொரு குறிப்பிட்ட கிரகத்தின் சஞ்சாரம் ஏற்படுத்தும் பாதிப்பையும் அளவிட்டுக் கூற முடியாத வரையில் ஜோதிடத்தை விஞ்ஞானமாக ஏற்க முடியாது.




அறிவியல்பூர்வமாக எண்ணியல் அடிப்படையிலான முடிவுகள் அறிவிக்கப்படும்போது அவை நிரூபிக்கப்படுவது முக்கியம். இதற்கு வானவியலில் சரியான உதாரணத்தைக் காண்பிக்க முடியும். நியூட்டனால் கிரகங்களின் இயக்கத்தைத் துல்லியமாகக் கணிக்க முடிந்தது. புதன் கிரகம் மட்டும் அவரது கணிப்பிலிருந்து சிறிதளவு மாறுபட்டது. அந்த கிரகம் செல்லும் வேகத்தின் சார்பியல் விளைவின் காரணமாகவே அந்த மாறுபாடு என்ற விளக்கம் பின்னர் கிடைத்தது. நியூட்டனுடைய அளவீடுகளும் கணக்கீடுகளும் சார்பியல் விளைவினால் பாதிக்கப்படாத வேகங்களுக்கே பொருந்தும் என்பதுதான் இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டிய உண்மை. ஒளி வளைவது போன்ற கற்பனைக்கெட்டாத நிகழ்வுகளை முன்கூட்டியே கோட்பாட்டு அடிப்படையில் கூறமுடிந்ததால் ஐன்ஸ்டீனுடைய சார்பியல் தத்துவம் உண்மையிலேயே மகத்தானதுதான். ஆனால் சொல்பவர் எவ்வளவு பெரிய விஞ்ஞானியாக இருந்தாலும் அவரது தத்துவம் எவ்வளவு மகத்தானதாக இருந்தாலும் அது நிரூபிக்கப்பட வேண்டும் என்ற தயவுதாண்யமற்ற தீர்ப்பை வெளியிடுவதுதான் அறிவியல். ஆம். ஒளி வளையக்கூடியதுதான் என பின்னர் நிரூபிக்கப்பட்டது.

எலெக்ட்ரானுக்கு நேர் எதிரான மின்னேற்றம் கொண்ட பாசிட்ரான் என்ற துகள் இருக்க வேண்டும் என்ற கருதுகோள் முதலில் வெளியிடப்பட்டது. பின்னர் அதன் இருப்பு உறுதி செய்யப்பட்டது. 1964ஆம் ஆண்டில் அடிப்படைத் துகள்களுக்கும் விசைகளுக்கெல்லாம் அடிப்படையாக இன்னொரு துகள் இருந்தாக வேண்டும் என்றார் பீட்டர் ஹிக்ஸ் என்ற விஞ்ஞானி. ஹிக்ஸ் போஸான் எனப் பெயரிடப்பட்ட அத்துகளைத் தேடும் படலம் தொடங்கியது.

பல ஆண்டுகள் உழைப்பிற்குப் பின் 2012ஆம் ஆண்டில் அப்படி ஒரு துகள் இருப்பது உண்மைதான் என விஞ்ஞானிகள் நிரூபித்துவிட்டனர். நுண்ணிய துகள்கள் மட்டத்திலும் துல்லியமாக அளவிடக் கூடிய முடிவுகளே அறிவியல் அடிப்படையில் அமைந்தவையாக ஏற்றுக் கொள்ளப்படும்.

(உதவிய கட்டுரை : ஆகஸ்ட் மாத சயன்ஸ் ரிப்போர்ட்டரில் டாக்டர் பிரமோத் பத்தக் எழுதிய கட்டுரை)




## பார்த்ததில்...

22ஆம் பக்கத்தொடர்ச்சி

தங்குமிட விடுதிகள் மற்றும் கவர்ச்சியான பொருட்கள் நிரம்பியுள்ள இடமாக இது காணப்படுகின்றது. நீர்வீழ்ச்சியைப் பார்க்க வரும் பலர் கிளிஃப்ரொன் மலையிலும் நேரத்தை செலவிடுகின்றனர். கிளிஃப்ரொன் மலை நீங்கள் கட்டாயம் பார்க்க வேண்டிய இடமாகும்.

### ஒன்ராறியோ அறிவியல் மையம் - ONTARIO SCIENCE CENTRE

ஒன்ராறியோ அறிவியல் மையம் என்பது ரொறொன்ரோவில் உள்ள ஓர் அறிவியல் அருங்காட்சியகமாகும். இந்த அறிவியல் மையம் 1969ஆம் ஆண்டு திறக்கப்பட்டது, இது Scarborough என்ற இடத்தில் அமைந்துள்ளது. அறிவியல் மையத்தில் பலவிதமான கண்காட்சி மையங்கள் உள்ளன. புவியியல், இயற்கை விஞ்ஞானம், வானியல், அறிவியல், இசை மற்றும் தொழில்நுட்பத்தைக் கற்க, மனித உடற்கூற்றியல், தகவல் தொடர்பு மற்றும்



அறிவியலின் இதர கலைப்பொருட்கள் போன்ற பல விடயங்களை இங்கே அறிந்து கொள்ளலாம். மாணவர்களும் அறிவியல் ஆர்வலர்களும் பார்வையிட இந்த அறிவியல் மையம் ஒரு சிறந்த இடமாகக் காணப்படுகின்றது.

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➢ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➢ FUNCTIONS, ADV. FUNCTIONS
➢ CALCULUS & VECTORS, DATA MGT
➢ SCIENCE, MATH, ENGLISH
GR 9-12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com
உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு
✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB &AP PROGRAMME
✓ MCAT Classes
✓ EQAO GR 3 & 6

## BASEMENT FOR RENT

**BIRCHMOUNT & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.261.3232**

**MORNINGSIDE & OLD FINCH**
2 bedroom bsmt for rent. Sep. entrance, laundry, utilities. Female preferred. TTC at door step. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.471.6815**

**MIDDLEFIELD & DENISON**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking. Single or couple preferred. Close to all facilities. Avail. immediately.
**905.471.5077 / 647.456.6416**

**BRIMLEY & EGLINTON**
2 bedroom bsmt for rent. Couple or female students preferred. Close to go station. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.716.1540**

**BRIMLEY & LAWRENCE AVE. EAST**
3 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, internet. Rent + utilities Close to all facilities. Avail. August 01, 2019.
தொடர்புகளுக்கு: **647.302.4273**

**BRIMLEY & DENISON**
1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable, internet, utilities. Close to all facilities. Avail. immediately.
**647.829.8384 / 647.272.7163**

**FINCH & TAPSCOTT**
2+1 Bedroom walkout bsmt for rent. Couple or family preferred. Close to mall, bus stop. Avail. August 01, 2019.
**647.760.3620 / 647.829.7974**

**STEELES & 9TH LINE**
2 Bedroom bsmt for rent. Sep.entrance. Close to walmart & School. No smoking. Avail. immediately.
**416.817.6910 /905.209.7998**

**MCCOWAN & LAWRENCE**
2 bedroom bsmt for rent. Sep.entrance. Parking, laundry. Rent+utilities. Close to hospital, mall, ect... Avail. immediately.
**416.613.1973 / 647.717.1699**

**MARKHAM & STEELES**
2 Bedroom walkout bsmt for rent. Laundry. Close to School & all facilities. Avail. August 01, 2019.
தொடர்புகளுக்கு: **416.660.4874**

**BRIMLEY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Bachelors preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.264.8177**

**MORNINGSIDE & NIGHTSTAR**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry, utilities. Single preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.686.8590**

மேலும் பக்கங்கள் 29, 30, 31, 32, 33

## BASEMENT FOR RENT

**14TH AVENUE & 9TH LINE**
2 bedroom bsmt for rent. Close to School & walmart. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **905.294.2876**

## ROOM FOR RENT

**PHARMACY & LAWRENCE**
1 Room for rent. kitchen, Parking, laundry. Close to Bus Stop, etc. First & last month rent preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.660.8367**

**9TH LINE & 14TH AVENUE**
1 Room for rent. Parking, laundry. Close to YRT & all facilities. Avail. immediately.
**416.648.1987 / 416.669.3549**

**ORTON PARK & LAWRENCE**
1 Bedroom room for rent. Parking, laundry. Males preferred. No smoking & No drinking. Avail. immediately.
**647.707.0457 / 647.857.9536**

**NEILSON & SHEPPARD**
1 Room for rent in 3 bedroom basement. Working women only. Close to all facilities. Avail. immediately.
**416.283.5214 / 437.982.3330**

**SALEM & TAUNTON**
5 Rooms for rent. Parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.997.7942**

**9TH LINE & 14TH AVE (MARKHAM)**
1 Room for rent in main floor. Parking, laundry. Female விரும்பத்தக்கது. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.965.3383**

**NEILSON & MCLEVIN**
2 Bedrooms for rent. Parking, laundry. Hindu female or couple preferred. Close to all facilities. Avail. immediately.
**647.534.5617 / 647.468.8403**

**MCCOWAN & FINCH**
1Bedroom for rent. Parking, laundry. Seniors or students most welcome. Close to all facilities. Avail. August 01, 2019.
தொடர்புகளுக்கு: **647.342.7460**

**MIDLAND & EGLINTON**
1 bedroom for rent in bsmt. Sep. entrance, parking. No smoking, no pets. Avail. September 01, 2019.
தொடர்புகளுக்கு: **647.721.5418**

**HWY 401 EAST & PORT UNION**
4 அறைகள் கொண்ட வீட்டில் 1 Bedroom for rent in upper level. Laundry. Single or couple Preferred. Avail. immediately.
**416.752.4444 / 416.857.5252**

### வீடு வாடகைக்குபெற்றிட/கொடுத்திட

வாடகைக்கு வீடுகள், Condo., Bsmts போன்றவற்றை Scarborough, Markham, Mississauga, Brampton, Ajax பகுதிகளில் பெற்றிட அழையுங்கள்:
**647.402.2937**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
1 Room for rent. Laundry. Close to all facilities. Single female preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.909.9728**

**KINGSTON & ELLESMERE**
Bedroom room for rent on main floor (Bran new house). Utilities. Single ore couple Preferred. Avail. immediately.
**416.826.8811 / 647.833.3406**

**VICTORIA PARK & LAWRENCE**
3 அறைகள் கொண்ட கீழ்தளத்தில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. சகல வசதிகளும் அருகில் உள்ளன.
தொடர்புகளுக்கு: **647.708.3444**

**WARDEN & LAWRENCE EAST**
5 அறைகள் கொண்ட வீட்டிலும், 2 அறை கொண்ட LUXUARY தொடர் மாடியிலும் அறைகள் வாடகைக்கு உண்டு.
**416.752.4444 / 416.857.5252**

## HOUSE FOR RENT

**MARKHAM & LAWRENCE**
3 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.821.4425**

**PICKERING**
3 Bedrooms, 2½ washroom. Close to all facilities. Available Immediately.
**Call : 416.836.5482**

**BRIMORTON & BELLAMY**
3 Bedrooms with 1 washroom bungalow house for rent. 1 Parking, laundry. Close to public school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.509.7247**

**MIDLAND & EGLINTON**
3 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**647.866.3920 / 647.529.2940**

**SALEM & TAUNTON**
4+1 Bedrooms house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.997.7942**

**NEILSON & HWY 401**
3 Bedrooms with one washroom bangalow house for rent. Main level only. Close to all facilities. Avail. Sep. 01, 2019.
தொடர்புகளுக்கு: **416.931.6755**

## BASEMENT FOR RENT

**MCNICOLL & MIDDLEFIELD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, shopping. Single or family preferred. No pets. Avail. immediately.
**647.299.6530/647.609.5031**

## BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**
3 Bedroom brand new bsmt for rent. Sep.entrance, parking, laundry. No smoke or no pets. Close to all facilities. Avail. immediately.
**905.554.9091 / 416.668.1234**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & 14TH AVE.**
2 bedrooms bsmt apartment with Sep. entrance for rent. Rent $1300. Avail. from August 01, 2019. utilities hydro+water, washer, dryer, fridge, stove, dishwasher & one parking.
Call Sarves: **416.726.8403**

## BASEMENT FOR RENT

**DIXIE & FINCH**
2 Bedrooms walkout bsmt for rent. Parking, laundry, internet. Close to pickering mall. Avail. immediately.
**647.880.4522 / 647.746.5717**

## BASEMENT FOR RENT

**MARKHAM & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable, utilities. Couple or 2 students preferred. Close to centennial college. No pet or no smoke. Avail. immediately.
**416.299.7876 / 416.726.6076**

## BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, Parking, laundry. Close to all facilities. Avail. September 01, 2019.
**647.884.1125 / 416.587.2704**

## BASEMENT FOR RENT

**MARKHAM & PAINTED POST**
3 bedrooms, 2 full washrooms & fully renovated bsmt for rent. Sep. entrance, Sep. washing michine, 1 parking. Rent $1600 + Utilities 50%. No smoking, no alcohol or no pets. Avail. August 15, 2019.
தொடர்புகளுக்கு: **647.855.2148**

## வாடகைக்கு

**4 BR, 3 BR, 2 BR, 1 BR**
**House, Condo, Basement**
**வாடகைக்கு உள்ளது**
**அழையுங்கள்.**
**647.861.8240**

## CONDO FOR RENT

**MARKHAM & ELLESMERE**
1 Bedroom condo. for rent
Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647. 404 .2586**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & MCNICOLL**
2 bedrooms bsmt for rent.
Sep. entrance, Parking, laundry, internet. Couple or single preferred.
Close to bus & School .
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.708.2025**

## BASEMENT FOR RENT

**MIDDLEFIELD & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, washroom.
Close to TTC, school, mall, bank.
No pets. First & Last month rent.
Avail. immediately.
**905.201.8434 / 647.964.8434**
Please call after 3:00pm

## ROOM FOR RENT

**MCCOWAN & 14TH AVENUE**
3 Rooms for rent in main floor.
Parking, laundry, internet.
Close to bus stop & all facilities.
Avail. August 01, 2019.
தொடர்புகளுக்கு: **647.887.5606**

## ROOM WANTED

Single male is looking a room in a an Condo or Apartment.
தனி நபருக்கு அறை தேவை.
**Please contact me at:**
**647.895.4323**
**by text or or call**

## ROOM FOR RENT

**MARSHALL ST & KING ST**
2 Rooms available 4 mins away from Wilfred Laurier university & bus services available for University of Waterloo. Only girls wanted and utilities included.
For more information please call:
**416-414-0439 or 416 -817-6514**

**CONDO FOR SALE**
**FINCH & NEILSON (TORONTO)**
2 Bedrooms & 2 washrooms

**HOUSE FOR SALE**
(Assignment)
**PICKERING NORTH**
3 Bedrooms & 3 washrooms walkout town house for rent.

**HOUSE FOR RENT**
**SCARBOROUGH / BRAMPTON & INNISFIL**

**Call Sakikumar: 416.709.5000**

## ROOM FOR RENT

**SIMCOE & BRITANNIA RD**
1 Bedroom for rent. Laundry, Cable, internet, utilities.
Students only. Close U.F.T.
Avail. August 01, 2019
**437.928.7816 / 647.871.5922**

## HOUSE FOR RENT

**TAUNTON & BROCK**
4 Bedrooms house for rent.
Parking, laundry. Rent + utilities.
Close to all facilities.
Avail. immediately.
**416.298.2990 / 416.939.5790**

## HOUSE FOR SALE

**MARKHAM & STEELES**
4 bedroom brand new house for sale
**We have more houses for sale & rent.**
Kannan Kankesu: **416.834.4200**

## HOUSE FOR SALE

**TORONTO**
**MIDLAND & LAWRENCE**
2 Bedroom condo apartment with one parking for sale $299,000.00

**AJAX**
**SALEM & BAYLY**
12 year old, 2 storey, 3 Bedroom bricktown house with finished basement & attached garage for sale $499, 900.00

**416.917.0557**
**Rajah Masillamany**
**(HomeLife / Future Realty Inc.)**

## CAR FOR SALE

**2008 NISSAN VERSA**
Excellent condition
No accident. Price $2300
**2007 HONDA CIVIC**
Excellent condition .
தொடர்புகளுக்கு: **647.906.5839**

**உடனடி வாடகைக்கு, விற்பனைக்கு**

வீடுகள், கொண்டோக்கள்
விற்க, வாங்க,
வாடகைக்கு விட,
வாடகைக்கு பெற்றுக்கொள்ள
அழையுங்கள்.
**Jey 416-816-9011**

மேலும் பக்கங்கள் 28, 30, 31, 32, 33

## ஸ்ரீசாயி திருமண சேவை

உங்கள் பிள்ளைகளுக்கு பொருத்தமான வாழ்க்கை துணையை தேடிக்கொள்ள எங்கள் சேவையை நாடுங்கள். பல துறைகளில் தகுதி பெற்ற மணமகன், மணமகள் உள்ளனர்.
**416.890.6497**
**srisai2912@hotmail.com**

## OFFICE SPACE FOR RENT

**MIDDLEFIELD & FINCH**
Avail. immediately.
தொடர்புகளுக்கு:
**647.296.7932**

## மணமகன் தேவை

இலங்கையில் வாழும் 1978இல் பிறந்த யாழ். இந்து வேளாளர் குலத்தைச் சேர்ந்த 4இல் செவ்வாய் உள்ள படித்த மணமகளுக்கு மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு: **416.455.6017**

## இலவச திருமணசேவை

இலவச திருமண சேவைக்கு
தொடர்பு கொள்ளவும்
**905.607.3896**

## மணமகன் தேவை

கொழும்பில் வாழும் இந்து மதத்தைச் சேர்ந்த 25 வயதுடைய தொழில் புரியும் மணமகளுக்கு கனடாவில் தொழில் புரியும் 32 வயதுக்குட்பட்ட மணமகனை பெற்றோர் தேடுகின்றனர்.
தொடர்புகளுக்கு: **647.200.3211**

## மணமகன் தேவை

இலங்கையில் வாழும் 39 வயதுடைய தாரமிழந்த, இரண்டு பெண் பிள்ளைகளுடன் கூடிய எனது சகோதரிக்கு தகுந்த மணமகனை கனடாவில் தேடுகிறோம்.
விவாகரத்தானவர்களும்/ தாரமிழந்தவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
**905.724.2629 / 647.858.5233**

## ROOM FOR RENT

**MARKHAM & 14TH AVE (BEHIND COSTCO)**
4 அறைகள் கொண்ட வீட்டில் 2 அறைகள் வாடகைக்கு உண்டு.
Parking available. Students or ladies preferred.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.721.5192**

## HOUSE FOR RENT

**9TH LINE & HWY 7**
4 Bedroom, 3 washroom & double garage semi detached house for rent. Close to all stouffville hospital & schools.
Avail. August 01, 2019.
தொடர்புகளுக்கு: **416.871.0450**

## RENTAL SPACE WANTED FOR STUDENTS

I am working with a group of students who are looking to rent rooms , house or basement apartments in Scarborough and surrounding area.
உங்களது rooms , house or basement இனை சட்டரீதியாக University / College Students இற்கு உடனடியாக வாடகைக்கு கொடுத்திட
***HARI SANTHIRARAJAH - 647.262.8490***
HomeLife Future Realty Inc. Brokerage Inc.

## வாகன போக்குவரத்து

**Western** பல்கலைக்கழகம், விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி சுற்றாடல், மற்றும் குறுகிய தூரம்.

தொடர்புகளுக்கு: **416.880.5952**

## தீராத மூட்டுவலியா?

தீராத மூட்டுவலி, முழங்கால் வலி, எலும்பு தேய்மானம் போன்ற பிரச்சனையில் இருந்து விடுபட தொடர்பு கொள்ளவும்.

சேர்ந்து பயன் பெறுவோம்.

SAAMY: **647.708.3444**

## மொழிபெயர்ப்பாளர் தேவை

ஆங்கில மொழியில் (கட்டுரைகள்) இருந்து தமிழ் மொழிக்கு மொழிபெயர்ப்பு செய்வதற்கு அனுபவமுள்ள ஒருவர் தேவை. Experience with christian charitics is preferred Will be paid by piece rate. தொடர்புகளுக்கு: **416.441.2416**

sel_gs@yahoo.ca

## WANTED

I am looking for a place to live (Condo, basement or apartment) not more than $900per month. I am willing to pay first & last month. I am a christian. No drink, no smoke & no pets. I would want a separate kitchen & washroom. (not sharing with anybody)

**Daniel 437.929.1520 / 416.760.2113**

## அனைத்து நாட்டு சுற்றுலா சேவை

விமான நிலையம், கனடா, அமெரிக்கா, மற்றும் அனைத்து நாடுகளிலும் உள்ள கோவில்கள், தேவாலயங்கள், சுற்றுலா இடங்களுக்கு எப்போது வேண்டு மானாலும் அழைத்துச் செல்லப்படும்.

**416.644.7273 / 416.857.5252**

100 Canadian Road, Unit #3316
Toronto, ON M1R 4Z5

## JUNK REMOVAL

பழைய இரும்பு பொருட்கள், **Electronics** பொருட்கள் வீசுவதற்காக வைத்திருந்தால் இலவசமாக எடுக்கப்படும்.

**MOVING / DELIVERY AVAILABLE.**

தொடர்புகளுக்கு:

பிறேம் - **647.835.5244**

## HELP WANTED

**MIDDLEFIELD & FINCH**

பகுதியில் உணவகம் ஒன்றிற்கு Cashier & Kitchen helper தேவை.

நேரில் வந்து Apply செய்யவும்.

தொடர்புகளுக்கு:

**416.318.9866**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**Pord Hope** ஐ அண்மித்த பகுதியில் அமைந்துள்ள

**RHINO'S ROADHOUSE**

Resturant க்கு **Cook** தேவை.

**289.244.8555 / 647.725.5127**

5078 , Rice Lake Dr, Bewdley - ON

## MOVING & DELIVERY

புதிய, பாவித்த Fridge, Stove விற்பனைக்கு உண்டு.

பழைய இரும்பு பொருட்கள், Electonic பொருட்கள் இலவசமாக எடுக்கப்படும்.

Junk Removal

Call Rajan: **647.524.1320**

## TAILORING

**SCARBOROUGH**இல்

Saree Blouses $29க்கு தைத்துக் கொடுக்கப்படும்.

**V G Tailors:**

**647.621.3694**

## KITCHEN HELPER WANTED

**WOW WING HOUSE**
**( PICKERING)**

Kitchen Helper Wanted.
No experience needed

பெண்களும் விரும்பத்தக்கது

**437.215.3227 / 647.294.3555**

## பராமரிப்பாளர் தேவை

**SCARBOROUGH**வில் வாழும் Wheelchair இல் இருக்கும் வயதான பெண்மணி ஒருவரை வீட்டில் தங்கி இருந்து பராமரிக்க பெண் உதவியாளர் தேவை. PSW தகுதி அவசியமில்லை.

தொடர்புகளுக்கு: **437.223.7767**

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி உணாவில் A9 வீதியிலிருந்து 250 மீ. தூரத்தில் 3 பரப்பு செவ்வகக்காணி விற்பனைக்கு உண்டு. வீடுகட்ட உகந்தது. கிணறு உண்டு.

தொடர்புகளுக்கு: **077.558.9955**

## குழந்தை பராமரிப்பாளர் தேவை

**BOVAIRD DR. E. & HEART LAKE RD**

**(BRAMPTON)**

வீட்டில் இருந்து குழந்தைகளை பராமரிப்பதற்கும், சமைப்பதற்கும் ஒருவர் தேவை.

**416.402.4126 / 647.631.5942**

## RENT / LEASE

***ROOM RENT, BASEMENT RENT, HOUSE RENT.***

*Visit to :*

**www.vlambaram.com**

Classified section Page 28 and up

## AZ DRIVERS WANTED

Amero Logistics Inc. is currently hiring experienced AZ drivers for Toronto to Montreal run. Also AZ city drivers for local work in GTA.

Need 1-year experience and clean CVOR and abstract. Weekly Pay .

For more info call : **647.274.0300**

## கொழும்பில் வீடு வாடகைக்கு உண்டு

கொழும்பில் மூன்று மாடிகளைக் கொண்ட சொகுசான வீடு வெளிநாட்டில் இருந்து வரும் சுற்றுலா பயணிகளிற்கு மட்டும் அனைத்து வசதிகளையும் கொண்ட (ஏசி, சமையலறை, சொகுசான குளியலறை மற்றும் படுக்கையறை) அழகிய வீடு வாடகைக்கு விடப்படும். இங்கு உங்களின் பாதுகாப்பிற்கு ஏற்ற வகையில் CCTV Camera 24 hours அமைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாது அருகாமையில் கடை வசதி மற்றும் போக்குவரத்து வசதிகளும் அமையப்பெற்ற அழகிய இடம்.

வாடகைக் கட்டணங்கள் : நாள் வாடகை அல்லது மாதாந்த வாடகைகளில் விடப்படும்

**Contact Maha:- 0041.77.960.6650**

## PAINTING WORK

- **Home painting**
- **Vanity/ Kitchen Countertops**
- **Laminate**



**Call: Krish - 647.642.7646**

## COOK / WAITERS/BARTENDERS WANTED

***DANFORTH & WOODBINE / YONGE & ST CLAIR***

இல் உள்ள உணவகத்திற்கு கனேடிய அல்லது தாய்லாந்து உணவு தயாரிக்கக் கூடிய **COOK & WAITERS / BARTENDERS** தேவை.

WEEK DAY FULL TIME & WEEDKEND PART TIME (Weekend brunch cook) .

Call : **416.999.7015** / Email: **rasiah@live.ca**

## ARE YOU LOOKING FOR WORK ?

- Machine Operator/Brake press, Spray Gun Painter
- Accountant AP/AR , Office Admin , Bookkeeper ,
- General Laborers / window assemblers/Food,
- Forklift Operator, Lab Technician , Architectural Draftsman • Driver (G, AZ, DZ),
- Mechanic, , Electrician
- Sewing machine (male/female), Construction
- All in Mississauga, Toronto, Vaughan, Brampton, Markham Area

**416.514.0733-Manjit Or Email manjitglobalteam@gmail.com**

## CARS, VANS & TRUCKS WANTED

**Any make, Any condition.**

**Pay top dollars.**

**Contact: 416.835.3475**

## வேலைக்கு ஆட்கள் தேவை

***CROWN PARADISE***

அனுபவமுள்ள COOK தேவை. பெண்கள் விரும்பத்தக்கது. Cashier தேவை.

**647.309.4755 / 647.547.3234**

## CONDO FOR RENT

**9TH LINE & HWY 7**

2 Bedroom condo. rent in ground floor. 2 washroom, underground parking, gym, party room, 24 hours CCTV camera & walkout backyard. Rent $2000+Utilities. Close to All facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.523.6390 / 647.686.6390**

## FLOOR FOR RENT - SCARBOROUGH

**Kennedy & Finch (Main Floor)**

- 3 Rooms, 1 Wash room, Kitchen, Living room, Balcony
- Laundry, Parking, Internet
- Near highway 401, 404, 407, TTC, Mall, Schools
- Avail. Immediately (Couple or Family preferred

**Contact- 416.568.0686 / 647.710.5115**

## BUS SERVICE

**RAINBOW CHARTER SERVICE INC.**

**(SCARBOROUGH)**

உங்கள் பயண தேவைகள் எதுவானாலும் அழையுங்கள்.

Please call or text me : **416.451.0055**

**info@rainbowcharterservice.ca**

## தென் இந்திய சுற்றுப்பயணம்

தென் இந்தியா, கேரளா ஆகிய இடங்களில் சுற்றுலா செல்ல விரும்புபவர்களுக்கு சகல வசதிகளுடன் தங்குமிடம் ஒழுங்கு செய்து தரப்படும்.

கேரளாவில் மூலிகை சிகிச்சை பெற விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

**Sulochana : 647.219.6553**

## புடவைக்கடை பொருட்கள் விற்பனைக்கு

Fitting room, Shelves, Racks, Showcase மற்றும் புடவைக்கடைக்கு தேவையான அனைத்து உடுப்புக்களும் உடனடி விற்பனைக்கு உண்டு.

**Contact : 416.315.9348**

## INTERNET & HOME PHONE

**CABLE internet or PHONE LINE internet**

**• Internet • Home phone • TV • IPTV**

**Internet Starts from $25**

**Free home phone for life time** ( with onetime paymeny ony)

**Call: Mani - 416.508.5878**

## MEDICAL OFFICE SPACE FOR LEASE

**KENNEDY & EGLINTON** (Scarborough)

- Approx. 1000 sq. ft of medical office space.
- Lease per month : $ 2,500 plus HST and hydro .
- 2 Months free rent. • Free parking. • Pharmacy on site.
- 5 Minutes walk to Kennedy subway station.

For more details please contact :

***laleta @ 416. 399 .8417 or email: girlie_021@hotmail.com***

## CHEF & WAITER/WAITRESS WANTED

WE ARE HIRING: **WAITER/WAITRESS**

Experienced Waiter/ Waitress Required For Busy Service

**PART TIME/FULL TIME**

Excellent Customer Service Skills: Must Be m, Hardworking, Reliable With Hospitality Experience.

**CHEF WANTED**

EXPERIENCE LINE CHEF, KITCHEN HELPER NEED IT.

RESTURANT ADDRESS IS:

**(AFFY'S PREMIUM GRILL) 55 LEBOVIC AVENUE C101 SCARBOROUGH, ON M1L0H2**

CONTACT:

**647-290-6992**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**Cook, Prep & Dishwasher** needed for breakfast restaurants in **Richmond Hill & Mississauga.**

CALL NOW.

Mississauga call :

**647-588-4382**

Richmond Hill call :

**647-335-8888**

# FOR RENT - CONDO/HOUSE / BASEMENT
# WATSON PROPERTY MANAGEMENT - 416-284-9999

***Scarborough* – McCowan / Lawrence – Detached-Bsmt**
(2Brm, 1Bath) 2 Brm Basement with Separate Entrance. 5 Mins Walk To Ttc Bus Takes To Warden Or Kennedy Subway. Rent Includes All Utilities! Close To Scarborough General Hospital & Town Centre. **[Asking $1650/m]**

***Scarborough* – Markham / Sheppard- Condo Apt- 2 Storey**
(3Brm, 2Bath) Spacious & Bright. Huge Living, Dining & Master Bedroom. Close To School, Library, Park, Buses & Hwy 401. **[Asking $2500/m]**

***Scarborough* – Kennedy / Sheppard – Condo Apt**
(1+1 Brm, 1 Bath) One-year New Luxury Condo, 24 Hr Concierge. All Window Coverings. Rent Includes All Utilities! **[Asking $2050]**

***Scarborough* – Kingston / Lawrence- Detached Bungalow**
(3Brm, 1Bath) Steps To Ttc, Close To All Amenities, Parks & Schools, Banks, Plaza. Minutes To Hwy 401. **[Asking $2200/m]**

*** Scarborough* - Ellesmere Rd / Morrish– Detached -Bsmt**
(1Brm, 1Bath) Room for Rent. Suitable For Students Or Professionals. 5 Mins Walk To U Of T Scarborough, Centennial College, Panam Centre, Ttc, Hwy 401. **[Asking $600/m]**

***Mississauga* –Burnhamthorp / Confederation Pkw-Condo Apt**
(1Brm, 1Bath) Fully Furnished. Walk To Mississauga Library, Sheridan College, Square One Mall, Living Arts Centre, Transit & More. **[Asking$2400/m]**

***Clarington – Mcroberts Crescent***
(4Brm, 3Bath) Beautiful House On Quiet Family Neighborhood, Double Car Garage With Access To Main Floor. 6 Parking Spaces. Direct Access To Backyard. **[Asking $2400]**

*** Etobicoke* – Highway 427 / Holiday Drive – Condo Townhouse**
(3Brm, 3Bath) Very Convenient Location. End Unit Luxurious Townhouse. Close To Hwys (427, 401, 403). **[Asking $2750/m]**

## வீட்டு முதலீட்டாளர்களுக்கான கருத்தரங்கு

- வாடகைக்கு விட சரியான வீட்டை எப்படி தெரிந்தெடுப்பது.
- அந்த வீட்டுக்கான கடனை எப்படிப்பெறுவது.
- சரியான வாடகையாளர்களை எப்படி கண்டுபிடிப்பது.
- அந்த வீட்டை சரியாக எப்படி நிர்வகித்து கூடிய லாபம் பெறுவது.

இதற்கான கருத்தரங்கில் கலந்துகொள்ள விரும்புவர்கள்

**தொடர்பு கொள்ளவும்: கரு கந்தையா: 416-284-5555**
watsonpm1989@gmail.com

## SEMINAR FOR INVESTORS

- How to select the right property to buy as an investment?
- How to qualify for mortgage for those properties?
- How to find the right tenant?
- How to manage the property to get high net income?

If you are interested contact us for more details! Limited Seats!

**Contact: Karu Kandiah: 416-616-7278**
watsonpm1989@gmail.com

# MANAGING RESIDENTIAL PROPERTIES
watsonpm1989@gmail.com

# We make it easy for you to be a Landlord!

***OUR SERVICES INCLUDE:***
- *Marketing, listing and showing properties*
- *Answering lease enquiries*
- *Tenant screening, pre-qualifying, negotiating lease and finding the right tenant*
- *Property inspections before and after renting*
- *Handle tenant enquiries*
- *rent collection and deposit to Landlord*
- *Eviction of bad tenants*
- *Scheduling Maintenance and repairs of property*
- *Year end accounting*
- *Renewal of lease*
- *Market value update*

***You can relax while we take care of your investment property!***

**WATSON**
PROPERTY
MANAGEMENT LTD

**Direct: 416-284-9999**
WatsonPM1989@gmail.com
111 Grangeway Ave. Suit #301
(RBC Building) Toronto, ON M1H 3E9

# COOK WANTED

## KNIGHTS CORNER PUB & GRILL

**KINGSTON & WHITE ROAD (Pickering)**

Experienced cook wanted. Full time or Part time.

**Please call : 647.706.9251**

# PTR DOORS & WINDOWS

OVER 14 YEARS EXPERIENCE

RESIDENTIAL & COMMERCIAL




- Custom Doors & Windows
- Front & Patio Door
- Replacement (Doors & Windows)
- California Shutters & Blinds
- Separate Entrance Door for Basement
- Replace Caulking
- Painting
- Pot Lights Installation

FREE ESTIMATE! Call Today

24 hours Emergency Service

We Fix Broken Glass Windows & Doors

RAVI : 416-825-9482 KANNA : 647-297-7815

email : ptrrenovation@gmail.com

# BLACK JULY '83



in search of our roots

JULY 21-27

scarborough civic centre

DISPOSSESSED BUT DEFIANT

An International Photo Exhibition of Indigenous Struggles Around the World

July 21-27

IN SEARCH OF OUR ROOTS

Youth Workshop (Free)

Sunday, July 21 2019

9am-3pm

HOSTED BY CJPME

# MATH & PHYSICS TUTORING

By a well-qualified and experienced teacher

For all grades from Grade 4 to 1st year of university

*Special classes*

- Advanced function
- Calculus & vectors
- Data management

*All Classes available in Scarborough & Stouffville*



Mr.S.F.Xavier (Teacher)

**Contact: 647.340.9490 / 416.732.2228**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

# DRIVERS FOR RIDE SHARING COMPANY

கனடிய Ride sharing company **"LYVAH"** சாரதிகளுக்கான விண்ணப்பங்களை கோருகின்றனர். தகுதியானவர்கள் பதிவு செய்யலாம். www.Lyvah.ca என்ற இணையத்தளத்திற்கு சென்று "Join Us" என்ற Link ஐ Click செய்து உங்களின் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: **info@lyvah.ca**

என்ற மின்னஞ்சல் முகவரியை பயன்படுத்தலாம்




- பயணம் வரும்போதே பயணத்துக்கான கொடுப்பனவு மற்றும் பயணம் முடிவடையும் இடம் போன்ற விபரங்களையும் பார்க்க முடியும்.
- பயணத்தை தெரிவு செய்யும் பூரண சுதந்திரம்.
- Rating செய்யப்பட மாட்டீர்கள்.
- 30% – 40% அதிகரித்த வருமானம்.
- இரவு நேர சாரதிக்கு மேலதிக ஊதியம் வழங்கப்படும்.

# சொர்க்கம் திருமணசேவை



- கனடாவில் வாழும் 34 வயதுடைய Engineerஆகப் பணிபுரியும் மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றோம்.
- கனடாவில் வாழும் 34 வயதுடைய RC மதத்தை சேர்ந்த பட்டதாரி மணமகளுக்கு இலங்கை அல்லது இந்தியாவில் இருந்து பட்டதாரி மணமகனை தேடுகின்றோம்.
- கனடாவில் வாழும் 31 வயதுடைய Lawyerஆகப் பணிபுரியும் மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றோம்.
- 31 வயதுடைய மணமகனுக்கு யாழ்ப்பாணத்தில் வாழும் தகுந்த மணமகளை தேடுகின்றோம்.
- 45 வயதுடைய Londonஇல் வாழும் விவாகரத்து பெற்ற மணமகளுக்கு தகுந்த மணமகனை Londonஇல் தேடுகின்றோம். வதிவிட உரிமை இல்லாதவர்களும் விரும்பத்தக்கது.



**இலங்கை மற்றும் இந்தியாவில் இருந்தும் நல்ல வரன்கள் எடுத்து தரப்படும்**

**416.666.1855 / 437.772.8129**

**www.sorkhammatrimonial.com**

# இந்தியாவின் உலகக்கோப்பை கனவு கலைந்தது!

## விளையாட்டுத் தகவல்கள் 397



- எஸ். கனேஷ் -

உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா தோல்வி அடைந்ததற்கான காரணங்கள் பற்றிய விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இந்தியா அரை இறுதியில் நியூசிலாந்திடம் தோற்றதால் போட்டியில் இருந்து வெளியேற்றப்பட்டது. 12ஆவது உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தில் கடந்த மே மாதம் 30ஆம் திகதி தொடங்கியது. இந்தப் போட்டியில் பங்கேற்ற விராட் கோலி தலைமையிலான இந்திய அணி லீக் ஆட்டங்களில் சிறப்பாக விளையாடி அரை இறுதிக்கு முன்னேறியது.

தென் ஆபிரிக்கா (6 விக்கெட்), அவுஸ்திரேலியா (36 ஓட்டங்கள்), பாகிஸ்தான் (89 ரன்), ஆப்கானிஸ்தான் (11ஓட்டங்கள்), வெஸ்ட் இண்டீஸ் (125 ஓட்டங்கள்), வங்காளதேசம் (28 ஓட்டங்கள்), இலங்கை (7 விக்கெட்) ஆகிய 7 அணிகளை வீழ்த்தி இருந்தது. இங்கிலாந்திடம் மட்டும் தோற்றது.
புள்ளிகள் பட்டியலில் முதல் இடத்தை பிடித்த இந்திய அணி அரை இறுதி ஆட்டத்தில் 4ஆவது இடத்தை பிடித்த நியூசிலாந்தை எதிர் கொண்டது. மன்செஸ்ரறில் நடந்த இந்த ஆட்டத்தில் முதலில் விளையாடிய நியூசிலாந்து அணி 46.1 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 211 ஓட்டங்கள் எடுத்து இருந்தபோது மழையால் ஆட்டம் பாதிக்கப்பட்டது. அந்த ஆட்டம் மீண்டும் தொடர்ந்தது. நியூசிலாந்து அணி 50 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 239 ஓட்டங்கள் எடுத்தது. இதனால் இந்தியாவுக்கு 240 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

நியூசிலாந்து வீரர்களின் அனல்பறக்கும் பந்துவீச்சால் இந்திய அணியின் விக்கெட்டுகள் அடுத்தடுத்து சரிந்தன. 92 ஓட்டங்களில் 6 விக்கெட்டை இழந்தது. விக்கெட் சரிவால் இந்திய அணி மோசமான தோல்வியைத் தழுவும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதனால் 7ஆவது விக்கெட்டான டோனி-ஜடேஜா ஜோடி அணியை சரிவில் இருந்து மீட்டது.

நேரம் செல்லச் செல்ல ஜடேஜா ஆட்டம் அதிரடியாக இருந்தது. இதனால் ரசிகர்கள் மத்தியில் உற்சாகம் ஏற்பட்டது. டோனி வழக்கம்போல் விக்கெட் சரிவை தடுக்கும் விதமாக பொறுமையாக ஆடினார். இந்த ஜோடியின் ஆட்டத்தை பார்க்கும்போது வெற்றி கிடைத்துவிடும் என்ற ஆவல் ரசிகர்கள் மத்தியில் ஏற்பட்டது. ஆனால் 48ஆவது ஓவரில் ஜடேஜா ஆட்டம் இழந்தார். இது மிகுந்த ஏமாற்றத்தை அளித்தது. அவர் 59 பந்தில் 4 பவுண்டரி, 4 சிக்சருடன் 77 ஓட்டங்கள் எடுத்தார். அவர் ஆட்டம் இழந்தபோது 13 பந்தில் 32 ஓட்டங்கள் தேவைப்பட்டன.
கடைசி 2 ஓவரில் 31 ஓட்டங்கள் தேவைப்பட்டன. முதல் பந்தில் டோனி சிக்சர் அடித்தார். இதனால் மிகுந்த நம்பிக்கை ஏற்பட்டது. ஆனால் 3ஆவது பந்தில் அவர் ஆட்டமிழந்தது திருப்பு முனையாகும். மார்டின் குப்தில் மிகவும் அருமையாக 'ரன் அவுட்' செய்தார். டோனியின் அவுட்டுடன் இந்தியாவின் வாய்ப்பு முடிந்தது. அவர் 72 பந்தில் 50 ரன் (1 பவுண்டரி, 1 சிக்சர்) அடித்தார்.

இந்திய அணி 49.3 ஓவரில் 221 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது. இதனால் 18 ஓட்டங்களால் தோற்றுப் போட்டியில் இருந்து வெளியேறியது.

இந்திய அணி மிகவும் முக்கியமான அரை இறுதியில் தோல்வியை தழுவியதற்கான காரணங்கள் வருமாறு:-
அணியின் முதல்தர வரிசை துடுப்பாட்டக்காரர்கள் மோசமாக ஆடியது முக்கிய காரணம் ஆகும். மேகம் மற்றும் ஈரப்பதம் காரணமாக ஆடுகளம் பந்து வீச்சுக்கு ஏற்ற வகையில் இருந்ததால் ரோகித்சர்மா, அணித்தலைவர் விராட்கோலி மற்றும் ராகுல் (தலா 1 ஓட்டம்) சொதப்பினர். 24 ஓட்டங்களில் 4 விக்கெட் விழுந்தது.

அனுபவம் வாய்ந்த டோனியை முன்னதாகக் களம் இறக்காததும் 7ஆவது வீரராக ஆட வைத்ததும் தோல்விக்கு காரணம் ஆகும்.

அதிரடி துடுப்பாட்டக்காரர்களான ரிஷப் பந்த், ஹர்திக் பாண்டியா, ஆகியோர் சுழற்பந்து வீரர் சான்ட்னர் பந்துவீச்சில் திணறினர். இருவரையும் தூக்கி ஆட வைத்தது. அவர் தனது திறமையான பந்து வீச்சால் வீழ்த்தினார்.

டோனி-ஜடேஜா ஜோடி 7ஆவது விக்கெட்டுடன் 116 ஓட்டங்கள் எடுத்தது. ஆனால் அவர்களை முன்னதாக அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தி இருக்க வேண்டும். இதனால் கடைசி 3 ஓவரில் 37 ரஓட்டங்கள என்ற கடினமான நிலை ஏற்பட்டு நெருக்கடி உருவானது.

நியூசிலாந்து அணியின் அபாரமான பீல்டிங்கும் இந்தியாவின் தோல்விக்கு காரணமாக இருந்தது. தினேஷ் கார்த்திக்

கட்ச் பிடிக்கப்பட்ட விதம், டோனி ரன் அவுட் ஆட்டத்தை மாற்றியது.

ரோகித்சர்மா இந்தத் தொடரில் 4 முறை கேட்ச் விட்ட பிறகு 3 சதம், ஒரு அரைசதம் அடித்தார். நியூசிலாந்து விக்கெட் காப்பாளர் லாதம் முதல் வாய்ப்பிலேயே அவரை கட்ச் பிடித்து வெளியேற்றினர்.

ஆட்டம் முழுமையாக நடந்து இருந்தால் இந்தியாவுக்கு சாதகமான நிலை ஏற்பட்டு இருக்கும். இந்தியா அபாரமாக பந்துவீசி நியூசிலாந்தைக் கட்டுப்படுத்தி இருந்தது. மழையால் ஆட்டம் பாதிக்கப்பட்டு மறுநாள் நடத்தப்பட்டு இந்தியாவுக்கு பாதகமான நிலையை உருவாக்கிவிட்டது.மழை காரணமாக ஆடுகளத்தின் தன்மை மாறியது. இந்திய அணியின் முன்னணி துடுப்பாட்டக்காரர்கள் இதில் சொதப்பிவிட்டனர்.

### நியூசிலாந்துடனான போட்டியில் டோனியின் புதிய உலக சாதனை



இந்த போட்டியில் களமிறங்கியதன் மூலம் இந்திய அணியின் அனுபவ வீரரான டோனி புதிய உலக சாதனையைப் படைத்துள்ளார். இப்போட்டி டோனிக்கு 350ஆவது போட்டியாகும். இதன்மூலம் 350 ஒருநாள் போட்டிகளில் விளையாடிய 10ஆவது வீரர் எனும் பெருமையைப் பெற்றார். மேலும் இந்திய அணியில் சச்சினுக்கு பிறகு 350 ஒருநாள் போட்டிகளில் விளையாடியவர் எனும் சிறப்பைப் பெற்றார். குறிப்பாக, ஒரு விக்கெட் காப்பாளராக 350 ஒருநாள் போட்டிகளில் விளையாடிய முதல் கிரிக்கெட் வீரர் எனும் புதிய உலக சாதனையை படைத்துள்ளார்.

டோனிக்கு முன்னதாக இலங்கை அணியின் சங்கக்கரா, 360 ஒருநாள் போட்டிகளில் பங்குப் பெற்றாலும் 44 போட்டிகளில் விக்கெட் காப்பாளராக பங்குப்பெறவில்லை.

இதுமட்டுமின்றி 350 ஒருநாள் போட்டிகளில் 200 போட்டிகளில் தலைவனாக செயல்பட்ட முதல் இந்திய வீரர் எனும் பெருமையையும் டோனி படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரே உலகக்கோப்பையில் அதிக விக்கெட்: மெக்ராத் சாதனையை முறியடித்தார் ஸ்டார்க். ஒரே உலகக்கோப்பையில் அதிக விக்கெட்டுக்கள் கைப்பற்றிய வீரர் என்ற சாதனையை மெக்ராத்தின் சாதனையை மிட்செல் ஸ்டார்க் முறியடித்தார்.

இங்கிலாந்துக்கு எதிரான அரையிறுதி ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவின் வேகப் பந்து வீச்சாளரான மிட்செல் ஸ்டார்க் பேர்ஸ்டோவ் விக்கெட்டை வீழ்த்தினார். பேர்ஸ்டோவ் விக்கெட் இந்த உலகக் கோப்பையில் ஸ்டார்க்கின் 27ஆவது விக்கெட்டாகும். இதன்மூலம் ஒரே உலகக் கோப்பையில் அதிக விக்கெட்டுக்கள் கைப்பற்றிய வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார். இதற்கு முன் மெக்ராத் 2007இல் வெஸ்ட் இண்டீஸில் நடைபெற்ற உலகக் கோப்பை தொடரில் 26 விக்கெட்டுக்கள் வீழ்த்தியிருந்தார். தற்போது 12 வருட மெக்ராத் சாதனையை ஸ்டார்க் முறியடித்துள்ளார்.

### உலகக்கோப்பையை வென்றது இங்கிலாந்து அணி


உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இங்கிலாந்து-நியூசிலாந்து அணிகள் மோதிக்கொண்டன. இரு அணிகளுமே இதுவரை உலகக் கோப்பையை தமதாக்கிக்கொள்ளாத நிலையில் போட்டி மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் நியூசிலாந்து அணி முதலில் துடுப்பாட்டத்தை ஆரம்பித்தது. இதில் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கற் இழப்புக்கு 241 ஓட்டங்களை எடுத்திருந்தது. பின்னர் இங்கிலாந்து அணி களம் இறங்கியது. வரலாறு காணாத முறையில் உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் ஓட்டங்களை சமன் செய்தது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் சூப்பர் ஓவர்கள் வழங்கப்பட்டன. இந்த சூப்பர் ஓவரிலும் இரு அணிகளும் தலா 2 விக்கெற்றுக்களை எடுத்து சமன் செய்தன. இதனால் 16 ஓட்டங்கள் எடுத்தால் உலகக் கோப்பையை வெல்லலாம் என்ற இலக்கு வழங்கப்பட்டது. இவ் ஆட்டத்திலும் இரு அணிகளும் ஓட்டங்களை சமன் செய்தன. இதையடுத்து போட்டியிலும், சூப்பர் ஓவரிலும் சேர்த்து அதிக பவுண்டரிகளை அடித்த அணி என்ற அடிப்படையில் இங்கிலாந்து அணி வெற்றியாளராக அறிவிக்கப்பட்டது.




உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டி வரலாற்றில் முதன்முறையாக இங்கிலாந்து அணி கோப்பையை வென்றுள்ளது.

# பயணங்கள் முடிவதில்லை-பாகம் 05



வீணை மைந்தன்

"எப்போ ஊருக்குப் போறீங்க ஐயா?"
"மார்ச் 27"
"அதற்கு முன் கொழும்பு வருவீங்க தானே!
"ஆமா சனிக்கிழமையே வந்து விடுவேன்"
"அப்ப கட்டாயம் என்னை வந்து சந்தியுங்க!"
அன்புக்கட்டளையிட்டார், புதிய தமிழன்பர் கவிஞர் ஜின்னா செரிபுத்தீன்.
நல்லூர் கம்பன் விழா கவியரங்குக்குத் தலைமைக் கவிஞராக அணி செய்தவர் ஓவியர் ஆசை இராசையாவினால் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட தமிழ்ப் பெரியார் இவர். தான் எழுதிய "எல்லாள காவியம்" நூலை எனக்கு அன்பளிப்புச் செய்தார்.
"தமிழோடிசை பாடல் மறந்தறியேன்" என்று அப்பர் சுவாமிகள் பாடியது போல் அறிமுகமாகும் தமிழன்பர்களை தமிழினிடத்துக் காதல் கொண்டு வாழ்பவோரை மறவாத நெஞ்சம் எனக்கு, கொழும்பு சென்றதும் கவிஞர் ஜின்னா ஐயாவுக்கு போன் செய்தேன்.
"வந்திட்டீங்களா! நாளை ஞாயிறு கொழும்பு தமிழ் சங்கத்தில் எனக்கொரு கூட்டம் இருக்கு. காலை 10:00 மணிக்கு என்னை வந்து சந்திக்க முடியுமா"
"நிச்சயம் வருகிறேன்"
சொன்னபடி அடுத்த நாள் காலை சரியாகப் பத்து மணிக்கு உருத்ரா மாவத்தையில் உள்ள கொழும்பு தமிழ் சங்கச் கட்டிடத்துக்குள் நுழைந்தேன்.
பலர் அங்கு கூடிக் கூடிப் பேசிக் கொண்டிருந்தனர். நீண்ட நாட்களுக்குப் பின் சந்தித்திருப்பார்கள் போலும், அவர்களில் ஒருவர் என்னைப் பார்த்துக் கேட்டார், ஐயா! யாரைப் பார்க்க வந்திருக்கிங்க?
"கவிஞர் ஜின்னா செரிபுத்தீன்"
"அவர்தான் இன்றைய கூட்டத்திற்குத் தலைவர். இப்போ வந்திடுவார்" என்றார்.
சற்று நேரத்தில் கவிஞர் வந்தார்.
என்னைக் கண்டதும் "ஐயா வாங்க வாங்க இன்றைய கூட்டத்தில் நீங்க சிறப்பு பார்வையாளர். உள்ளே வாங்க. உங்களை அறிமுகம் செய்து வைக்கிறேன்" என்றார்.

கொழும்பு தமிழ் சங்கத்தின் பின்புற ஹோலில் நூற்றுக்கு மேற்பட்ட எழுத்தாளர்களும் கவிஞர்களும் பத்திரிகை ஆசிரியர்களும் குழுமியிருந்தனர்.

திருமதி பத்மா சோமாஸ்கந்தன் உட்பட சில பெண்மணிகளும் அங்கு வந்திருந்தனர். 'ஞானம்' பத்திரிகை ஆசிரியர் திரு. ஞானம் அவர்கள் அங்கு நடைபெறவிருக்கும் நிகழ்வு பற்றி சிறிய அறிமுகவுரையை நிகழ்த்தினார்.



"அகில இலங்கை தமிழ் எழுத்தாளர் பேரவை" எனும் புதிய எழுத்தாளர்களுக்கான பேரவை ஒன்றை நிறுவுவதற்கான அங்குரார்ப்பணக் கூட்டம் அது. பல சுவாரஷ்யமான கலந்துரையாடல்கள் இடம் பெற்றன. முழு உரையாடல்களையும் விலா வாரியாக விளக்குவது அல்ல என் நோக்கம். எங்கெங்கு தமிழ் எழுத்தாளர்கள் கூடுகிறார்களோ நிச்சயம் அங்கு காரசாரமான விவாதங்கள் இடம்பெறுவது இயல்பாகும்.

சுமார் 30 ஆண்டுகாலப் போர்ச் சூழலுக்குப்பின் இலங்கை எழுத்தாளர்கள் மத்தியில் ஆரோக்கியமான அமைப்பு மீண்டும் உருவாக வேணும். அல்லது புனரமைப்புச் செய்யப்பட வேண்டும். அதன்மூலம் படைப்பாளிகள், படைப்பிலக்கியம் அறிமுகமாதல் தமிழ் எழுத்துக்கள் சிங்கள மொழியில் மொழிபெயர்ப்பு ஆக்கமாக வெளிவரச் செய்தல். அதன்மூலம் தமிழினத்தின் உரிமைகள், கலை இலக்கியம் சமூக விழுமியங்களின் அவசியம் உணரப் படுதல், நலிந்த எழுத்தாளர்களுக்கு நன்மை செய்தல் இவ்வாறான பல நற்காரியங்களை உயிர்ப்புடன் செய்ய ஆவன செய்தல் எனப் பல விடயங்கள் அலசப்பட்டன.
தமிழறிந்த சிங்கள மொழி எழுத்தாளர்களும் அங்கு வந்திருந்தனர்.

என்னை அங்கு அறிமுகம் செய்து வைத்த தலைவர் கவிஞர் ஜின்னா செரிபுத்தீன் அவர்கள் மூன்று நிமிடம் பேசும்படி அன்புக் கட்டளையிட்டார். "என் பெயர் கே.ரி.சண்முகராஜா. வீணை மைந்தன் எனும் புனைப்பெயரில் எழுதுபவன். கடந்த 32 ஆண்டுகளாகக் கனடா தேசத்தில் வாழ்ந்து வருகிறேன். கனடிய தமிழ்க் குடிமகன். இங்கு திடீர் விருந்தாளியாக அழைக்கப்பட்டேன். இங்கு நீங்கள் இலங்கை தமிழ் எழுத்தாளர்களுக்கு எதிர்காலத்தில் வழங்கவிருக்கும் விருந்து ஆரோக்கியமாகவும், சுவையாகவுமிருக்க கனடாவில் இயங்கி வரும் 'கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்' எனும் அமைப்பினூடாக, அவ்வமைப்பை நிறுவியவர்களில் ஒருவன் என்ற வகையில் உங்களுக்கு நல்லாதரவு வழங்க முன் வருவோம் என சில கருத்துக்களை முன் வைத்து எனதுரையை நிறைவு செய்தேன். அனைவரும் மிக முகமலர்ந்து நன்றியுடன் கரவொலி செய்தனர்.

கடந்த ஆண்டு மலேஷிய நாட்டில் கோலாலம்பூர் நகரில் இயங்கி வரும் மலேஷிய தமிழ் எழுத்தாளர் சங்கம் எதிர்பாராத விதமாக என்னை அழைத்துக் கௌரவம் செய்தனர்.

இவ்வாண்டு புதிய உதயமான அகில இலங்கை தமிழ் எழுத்தாளர் பேரவை அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்து கொண்டு அறிமுகமானதும் தமிழ் பணிக்குக் கிடைத்த பெருமையாக மகிழ்வுறுகிறேன். எதையும் எதிர்பார்த்து இயங்குபவன் அல்ல நான். ஆனால் தமிழ் கூறும் நல்லுலகில் வாழ்பவர்களின் நட்பும் அறிமுகமும் நான் தேடாமலே தேடிவருவது கண்டு பேருவகை கொள்கிறேன்.



இம்முறை தமிழகத்தில் 'நமது நம்பிக்கை' இதழின் ஆசிரியர் திரு. மரபின் மைந்தன் முத்தையா கவிப்பேரரசு கண்ணதாசன் அவர்களின் மைந்தர்களில் ஒருவரான திரு.காந்தி கண்ணதாசன், பேரன் திரு முரளி கண்ணதாசன், யாழ். பேராசிரியர் திரு சிவலிங்கராஜா பெருங்கவிஞர். சோ.பா எனப் பலருடனும் தமிழன்பு கொண்டு உரையாடி மகிழ்வுற்றதை எனது தமிழ் நெஞ்சம் என்றென்றும் மறக்காது.

அடுத்த ஆண்டும் பயணங்கள் தொடரும். வழமை போல் 'மறக்க தெரியாத மனசு' தொடரும். இதழ்களில் நினைவுகளைப் பகிர்ந்து கொள்ளும்.






## தீரன் சின்னமலை நினைவு தினம்

கொங்குநாட்டு சீமையில் கொடிகட்டிப் பறந்திட்ட
கோட்டையில் அரசனாம் கொள்கையின் தீர்த்தகிரி!
பொங்கிடும் கடலென போர்களத்தில் சுழன்றிட
புறமுதுகை காட்டியே புரண்டது வெள்ளைநரி!
தங்கிட வந்தவன் தாய்நாட்டை தனதாக்க
தரங்கெட்ட வெள்ளையனுக்கு தடவினான் முகக்கரி!
சிங்கத்தின் குகைக்குள்ளே செருக்கோடு சென்றிடும்
சிறுமதி வெள்ளையர்க்கு சிதைந்தது முகவரி!

இந்திய விடுதலை எண்ணத்தில் கொண்டிட
இரவுபகல் பாராது எழுச்சியினை வென்றது!
சிந்திய குருதியும் சிதைந்திட்ட உயிர்களும்
சிறைக்கதவு முழுமையாய் சரித்திரம் சொல்லுது!
வந்திட்ட சுதந்திரம் வரம்பெற்று வரவில்லை
வடித்திட்ட கண்ணீரால் வலியினைக் கொண்டது!
சிந்தனை செய்திடு சிறந்திடும் தாய்நாடு
சிறாரின் மனதிலும் சிறப்புற பதிவிடு!

ஓடாநிலை தீர்த்தகிரி ஓடவைக்க வெள்ளையரை
உரிமையோடு குரலினை உரக்கவே எழுப்பினான்!
வாடாத தமிழகத்தின் வரிவசூல் செல்வதை
வீரமிகு சின்னமலை வெகுண்டு எதிர்த்திட்டான்!
நாடாளும் வெள்ளையர் நாள்தோறும் தீரனிடம்
நைந்திட போரினிலே நடுங்கியே தோல்வியுற்றான்!
கூடாத எண்ணத்தால் கொலைவெறி வெள்ளையன்
சங்ககிரி கோட்டையில் சத்தியத்தை தூக்கிலிட்டான்!



- யூலை 31 -

- ராஜம் சேது -

# கேட்கும் கலை

## *The Art of Listening*

"கேட்டல் ஒரு கலையாகும்" என பிரேம் ராவத் கூறுகிறார். "உங்களால் கேட்க முடியாவிட்டால் உங்கள் வாழ்வில் பல விடயங்கள் நடைபெறப் போவதில்லை".

அமைதியின் தூதுவர் என அழைக்கப் படும் திரு. பிரேம் ராவத் உலகெங்கும் சென்று மனிதரின் உள்ளே அவர்களின் பிறப்புரிமையாக உள்ள அமைதியைக் கண்டுபிடித்து உணர்ந்து ஆனந்திப் பதற்கான உண்மையான சாத்தியம் பற்றி உரையாற்றி வருகிறார். இச்செய்தியானது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தொரு செய்தியாகும். ஆனால் எப்படிக் கேட்பது என்று அறிந்திருப்பவர்களுக்கே அது தாக்கத்தை ஏற்படுத்தும்.

பலர் கேட்கும் திறனை இழந்து விட்டனர். ஏனெனில் அவர்கள் ஏற்கனவே அறிந்து வைத்திருக்கும் எண்ணக் கருத்துக்களால் நிரம்பி இருக்கின்றனர் என அவர் சுட்டிக்காட்டுகிறர்.

அமைதியென்றால் என்ன என எமக்குத் தெரியும் என்பதுதான் அவற்றில் ஒரு எண்ணக்கருத்து என அவர் கூறுகிறார். அவர் எதைப்பற்றி உரையாற்றப் போகிறார்? அமைதி பற்றியா என மக்கள் கேட்கின்றனர். "எனக்கு அமைதிபற்றி ஏற்கனவே தெரியும்" என்கிறார்கள்.
உண்மையிலேயே மக்கள் அதைத்தான் தன்னிடம் இருந்து எதிர்பார்கின்றனர் என திரு. ராவத் கூறுகிறார். மக்களிடம் ஏதோ ஒன்றிற்கான நயத்தல் - உயிர்வாழ்தல் என்னும் அந்த எளிமையான விடயத்திற் கான நயத்தல் இல்லாவிட்டால் அமைதி யைப் பற்றிப் பேசுவது பிரயோசனமற்றது ஒன்றாகுகும். உயிருடன் இருப்பதென்பதன் கருத்து என்னவென அவர் கேட்கிறார். அதன் கருத்து என்னவென்று அதிகமான மக்களுக்குத் தெரியாது. அவர்கள் வாழ் கிறர்கள். அவர்கள் இங்கே இருக் கின்றனர். ஆனால் அவர்களுக்கு உயிர் வாழ்வென்றால் என்ன என்று தெரியாது. நாம் எல்லோரும் விளையாடும் முடிவில்லா விளையாட்டில் அவர்கள் சிக்கியுள்ளார்கள். நான் இதிலிருந்து என்னை தவிர்க்கவில்லை. நான் எதைக் கூறுகிறேனோ அதை நானும்தான் கேட்க வேண்டும். இந்த உலகில் இதுதான் நடை பெறுகிறது. காலையில் நாம் விழித்தெழு வதை நாம் காண்கிறோம். இரவு முழுவதும் நாம் நித்திரை செய்யா விட்டாலும் கூட அலாரம் அடிக்கும்போது விழித்தெழ வேண்டும். இது நாம் வேலைக்குப் போவதற்கான நேரம். இது எமது கடமை.

அதை விவாதிப்பதற்காக நான் இங்கு வரவில்லை. அங்கே அழகான ஏதோ வொன்று - இந்த உயிர் வாழ்வு என்று அழைக்கப்படும் நிலையில் திடீரென நடைபெறுகின்றது என்று சுட்டிக்காட்டத் தான் வந்துள்ளேன். அத்துடன் அற்புத மான அளவு குறுகியதும் கூட. கனவுகள் நீண்டவை. உயிர்வாழ்வு மின்னல் போல் மறைந்துவிடும். அத்துடன் அது மீண்டும் வரப்போவதில்லை. ஆகவே இந்த வாழ்வை அமைத்துக்கொள்வதில்தான் எமது நாட்டம் இருக்கவேண்டும் என பிரேம் ராவத் கூறுகிறார். "முதலில் நீங்கள் யார் என்பதை - இந்தச் சுவாசத்தின் பெறுமதியை - இந்தக் கணத்தின் பெறுமதியை - இந்த உயிர்வாழ்வின் பெறுமதியை உணர்ந்து கொள்ளுங்கள்.

பரிசுத்தமானதொன்று உள்ளதென்றால் அது உயிருடன் இருப்பதுதான். புனித மானதொன்று உள்ளதென்றால் அது உயிருடன் இருப்பதுதான். தெய்வீகமான தொன்று உள்ளதென்றால் அது உயிருடன் இருப்பதுதான். ஆழமான உணர்வைத் தரக்கூடியதொன்று உள்ளது என்றால் அது உயிருடன் இருப்பதுதான். மதிப்புள்ளதொன்று உள்ளதென்றால் அது உயிருடன் இருப்பதுதான். உயிருடன் இருப்பது, உயிர் வாழ்வது, இந்த உயிர் வாழ்வை உணர்வது. ஏனெனில் இதுதான் ஒரு மனிதனை ஆனந்தத்தால் நிரப்புகிறது.

**Words of Peace**

பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்து கொள்ள:
1.877.707 3221 Toll free
416 431 5000 தமிழ்
www.wopg.org www.tprf.org

உயிருடன் இருப்பதன் விலைமதிப்பற்ற பெறுமதியை மக்கள் உண்மையாகவே புரிந்துகொண்டால் அவரால் ஆனந்தத் தைப் பற்றியோ அல்லது அமைதியைப் பற்றியோ அல்லது நிறைவைப் பற்றியோ கதைக்கவேண்டி ஏற்படாது என திரு. பிரேம் ராவத் கூறுகிறார். அது மடைத்தன மானதொன்றாக இருக்கும். அது எப்படி யெனில் நாய் ஒன்றிற்கு அது எவ்விதம் ஒரு நாயாக இருக்கவேண்டும் என கற்பிப்பதைப் போன்றதாகும். "நீ ஒரு நாய். கோழிக்குஞ்சிற்கு நீ கோழிக்குஞ்சு என கற்பிப்பது போல. அதன் முன்னால் ஒரு முகம் பார்க்கும் கண்ணாடியை பிடித்துப் பார். நீ ஒரு கோழிக் குஞ்சு எனக் கூறுவது.

"நீங்கள் யார் என்று உங்களுக்குத் தெரி யுமா? உங்களுக்குத் தேவையான தெல்லாம் உங்களிடம் உள்ளதா? சில சமயங்களில் மக்கள் என்னிடம் வந்து "நான் தேடிக்கொண்டிருக்கிறேன் எனக் கூறுவதுண்டு. எதைத் தேடுகிறீர்கள் என்று நான் கேட்பதுண்டு. "ஆம் அமைதியை, ஆனந்தத்தை மகிழ்ச்சியைத் தேடுகிறேன். அது அர்த்தமற்றது. ஏனெனில் அவை ஏற்கனவே உங்கள் உள்ளேயே உள்ளது. தேடுவதல்ல அதைக் கண்டுகொள்வதற் கான வழி. அடிப்படையில் சகலருமே ஆனந்தமாக இருக்கத்தான் விரும்பு கின்றனர். நாம் எல்லோரும் அமைதியில் வாழ விரும்புகிறோம். அதை எவரும் கூற வேண்டியதில்லை. கேட்கும் கலையைப் பற்றியதெல்லாம் அந்த அமைதியைத் தேடுவது, பற்றியதுதான் என திரு. ராவத் கூறுகிறார்.

கேளுங்கள் என அவர் ஊக்கப்படுத்து கிறார். "நான் கூறுவதை அல்ல உங்கள் உள்ளம் கூறுவதைக் கேளுங்கள். உங்களையே நீங்கள் கேட்காது விட்டால் எவ்விதம் வேறு எவராவது கூறுவதைக் கேட்கப்போகிறீர்கள்?' நிறைவடையுங்கள் எனக் கூறும் அந்தத் தாகம் கூறுவதைக் கேளுங்கள் அமைதியாக இருங்கள், அமைதியாக இருங்கள் அந்தத் தேவைக்கு மதிப்பளியுங்கள்.

உங்களிடம் ஆயிரக்கணக்கான பிரச்சினை இருக்கலாம். தடுமாற்றம் தவிர அங்கு வேறு எதுவுமே இல்லை. நாளைக்கு எனக்கு எல்லாம் சரியாகிவிடுமா? அடுத்த கணம் எனக்கு எல்லாம் சரியாகி விடுமா? "அந்த ஆர்ப்பாட்டமிடும் புயலின் மத்தியில் உள்ளே இருந்துவரும் அந்த மென்மையான குரல் "உனக்குத் தேவை யானதெல்லாம் நிறைவடைதுதான் என கூறுகிறது. உங்களுக்குத் தேவையான தெல்லாம் அமைதியில் இருப்பதுதான். உங்களுக்குத் தேவையானதெல் லாம் ஆனந்தமாக இருப்பதுதான். அது அற்புதமேயல்லாமல் வேறென்ன.

## எடுங்கள் அல்லது விடுங்கள் - Take it or Leave it.

# ஆராய வேண்டியவை

மனிதன் (மாணிக்கவாசகர்) தெய்வத்திடம் கூறியது திருவாசகம் தெய்வம் (கண்ணன்) மனிதனுக்கு (அர்ச்சுனன்) கூறியது கீதை மனிதன் (திருவள்ளுவர்) மனிதர்களுக்குக் கூறியது திருக்குறள் என்றொரு மூதுரையும் தமிழில் உள்ளது.

தம்முள் என்றும் உள்ள இறைசக்தியை உணர தாகம் கொண்டவர்களுக்கு, இறை வன், குருவாக வந்து ஞானஉபதேசம் கொடுத்தார். பெற்றவர்கள் தினமும் சாதகம்செய்து, தன்னைத்தான் அறியும் ஆற்றல் பெற்றனர்.

தாம் அனுபவிக்கும் ஆனந்தத்தை வெளிப்படுத்த ஆடினர், பாடினர்.
வெளிப்பாடுகள் இன்றைய நூல்கள் குருவிடம் பெற்ற உபதேசம் வார்த்தை யால் விவரிக்க முடியாது, உணரத்தான் முடியும். இறைவனை உணர்ந்துதான் அறியலாம். கல்வியின் நோக்கமே, தன் னைத்தான் அறிந்து தன்னுள் ஏற்கனவே உள்ள தெய்வீகத்தை உணர்வதே.
மனிதன் மெய்ஞானி ஆகிறான். மாற் றங்கள் நடைபெறுவது இயற்கை. சாத்தியம்.
மயிர்க்கொட்டி வண்ணாத்திப்பூச்சியாக மாறுகிறது.
நிலக்கரி வைரக்கல் ஆகிறது.
சராசரி மனிதன் மெய்ஞானி ஆகிறான்.
எவ்வாறு? அகப்பரிநாம மாற்றம்.
பண்டிதர் மயில்வாகனம், சுவாமி விபுலானந்தர் ஆனார்.
திருவாதவூரர், மாணிக்கவாசக சுவாமிகள் ஆனார்.



ஞானிகளின் வாழ்கை வரலாற்றில் உபதேசம் பெற்றார் என்றுமட்டும் இருக்கும்.
ஆராய வேண்டியவை:
அவன்அருளாலே பெறவேண்டிய இந்த மெய்ஞானம், அந்தகாலத்தில் மட்டுமா அல்லது இன்றும் கிடைக்குமா? சாத்தியமா?
மெய்ஞானமாகி மிளிர்கின்ற மெய்சுடரை ஒரு விநாடியாவது நாம் உணரமுடியுமா?
நாமும் பொருளுணர்து சொல்லுவார் செல்வர் ஆகலாமா?




# முழங்கால் மூட்டு அறுவைச் சிகிச்சை

## Knee Replacement Surgery - Part-1

நமது உடலை முழுவதுமாக தாங்கி நிற்கச் செய்வது நம் கால் மூட்டு எலும்புகள் தான். உடல் மூட்டுகளிடையே உறுதியான பெரிய சிக்கலான மூட்டெலும்பு முழங்கால் மூட்டெலும்பு ஆகும். நடக்க, உட்கார, திரும்ப, குத்துக்காலிட, மாடிப்படி ஏறி இறங்க, அல்லது பொதுவாக ஏற்படக்கூடிய எந்த ஒரு சின்னச் சின்ன அசைவுகளிலும் நமக்கு ஊன்றுகோலாக இருப்பது முழங்கால் மூட்டுகள் தான். இந்த மூட்டு ஆரோகியமாக இருக்கும்போது அதைப் பற்றியும், அதன் உபயோகங்களைப் பற்றியும் யாரும் நினைத்துக் கூடப் பார்ப்பது கிடையாது. ஆனால் முழங்கால் மூட்டி வலி அல்லது மூட்டு இறுகியது போன்ற உணர்வு போன்ற பிரச்சனை வந்தால் மேலே நாம் குறிப்பிட்ட அசைவுகளில் சிரமம் ஏற்படும் போது மட்டுமே இந்த முழங்கால் மூட்டின் அவசியம் தெரிய ஆரம்பிக்கும்.

நவீன மருத்துவத் தொழில் நுட்பம் வலியை வெகுவாகக் குறைத்து கால்களுக்குப் பலத்தை தந்து வாழ்க்கையின் தரத்தை உயர்த்தும் செயற்கை முழங்கால் மூட்டைக் கொடுத்துள்ளது. உலகம் முழுவதும் இந்த செயற்கை முழங்கால் மூட்டு சிகிச்சை வெற்றிகரமாக செய்யப்படுகிறது. மூட்டின் செயல்பாடுகள், எவ்வாறு மூட்டழற்சியினால் வலி உண்டாகின்றன என்பதையும், மற்றும் எவ்வாறு செயற்கை முழங்கால் மூட்டறுவை சிகிச்சை (Artificial knee replacement) செய்யப்படுகிறது போன்ற தகவல்களை இதில் பார்க்கப்போகின்றோம். அதோடு நீங்கள் முழங்கால் மூட்டழற்சியால் பாதிக்கப்பட்டவராயின் செயற்கை முழங்கால் மூட்டறுவை சிகிச்சைக்கு நீங்கள் தயாராவதற்கு உதவியாக இருக்கும்.

முழங்கால் மூட்டின் பயன்பாடுகள் என்ன?
சீரானமூட்டு என்பது ஓர் அருமையான இயற்கை நமக்கு அழித்துள்ள அற்புதமான இயந்திரம் என்றே கூறலாம். தொடை எலும்பின் (Thigh bone - Femur) கீழ்ப்பகுதியின் நுனி கால் முன்னெலும்பின் (Shin bone - tibia) மேல்நுனி மற்றும் முழங்கால் சிப்பி எலும்புகள் ஆகியவற்றைக் கொண்டு இது வடிவமைக்கப்பட்டுள்ளது. ஓர் ஆரோக்கியமான முழங்கால் மூட்டில் மெத்தை போன்ற செயல்பாடுகள் இருக்கும். இந்த இரு எலும்புகளுக்கு இடையில் இரு குருத்தெலும்பு உண்டு. (Two C-shaped pieces of cartilage called the medial and lateral menisci act as shock absorbers between the femur and tibia) இந்த மெத்தை போன்ற எலும்புகள் மூட்டின் அசைவுகளை மென்மையானதாக செயல்படச் செய்யும். இவை மூட்டுறை, முழங்கால் நன்றாக இயங்குவதற்குத் தேவையான திரவம் ஆகியவற்றை உற்பத்தி செய்யக்கூடியவை. நாம் வாழும் காலம்வரைக்கும் இயங்கும் வகையில் முழங்கால் இயற்கையால் உருவாக்கப்பட்டிருந்தாலும், சில நேரங்களில் நாம் அதிக அழுத்தத்தை முழங்காலிற்கு ஏற்படுத்தி நமது முழங்கால் இயக்கத்தை பாதிக்கச் செய்கிறோம்.




### முழங்கால் மூட்டு வலி என்றால் என்ன? ஏன் ஏற்படுகின்றது?


மூட்டு வலி என்பது வயதாகிவிட்டால் மட்டும் ஏற்படுவது இல்லை. அது மூட்டுகள் அழற்சியுற்று நோய் வந்திருக்கின்றது என்பதை நமக்கு உணர்த்தும் ஓர் அறிகுறியாகும். சில நோயாளிகளுக்கு அவர்களது இருபது அல்லது முப்பது வயதுகளில் கூட இந்த அறிகுறிகள் தோன்றக்கூடும். மூட்டழற்சி யில் பல வகைகள் இருக்கின்றன. இருந்தாலும், அவற்றில் பொதுவாக இருக்கக்கூடிய பிரச்சனை எலும்பு மூட்ட ழற்சியே ஆகும். இது இப்போது உலகத்தில் இருக்கும் பல்லாயிரக்கணக் கான மக்களைப் பாதித்து வருகிறது. மூட்டழற்சி என்பது குருத்தெலும்பு அடுக்குகளில் நிரந்தர பாதிப்பை உண்டுபண்ணுகிறது. ஏனெனில் இந்தக் குருத்தெலும்புகள் பாதிக்கப்பட்டால் சரி செய்ய இயலாது. தானாகவே சரியாகவும் வாய்ப்பில்லை. அதில் கீறல் விழ ஆரம்பித்து கிழிந்து போய் அப்படியே மூடிவிடும். அழுத்தத்தைத் தாங்கும் மெத்தை போன்ற அமைப்பு மறைந்துவிடுவதால் தொடை எலும்பும் கால் முன்னெலும்பும் நேரடியாக உரசிக் கொள்ளத் தொடங்குகின்றன. நாள்பட்ட நோயாளிகளின் எலும்புகள் உராய்வினால் தேய்ந்து போய் இறுக்கத்தைக் கொடுக்கிறது.

ஆரம்ப நிலைகளில் எலும்பு மூட்டழற்சியாக இருப்பின் மூட்டுக்கள் வீங்கி, வலிக்க ஆரம்பிக்கும். பின்பு வலி படிப்படியாக அதிகரிப்பது உணரப்படும். அதே நேரத்தில் ஒரு காலை விட மற்றொரு கால் சற்று குறுகியதாக மாறிவிடும். தாமாகவே தங்களது அசைவுகளைக் குறைக்கத் தொடங்குவர். இதனால் இயல்பான வாழ்க்கை நிலை மாற்றம் அடையலாம். உடல் பருமனாக இருப்போரின் முழங்கால் அதிக பாரத்தைத் தாங்க வேண்டியிருப்பதால் மூட்டுக்கள் மேலும் மேலும் சிதைவடைய வாய்ப்புண்டு.

எந்தவிதமான மூட்டழற்சியாக இருந்தாலும் சரி, முன்புபோல் அசைக்கவோ, நடக்கவோ முடியாத நிலையில் சில அசைவுகளை நாமே மாற்றிக் கொள்ளவில்லையென்றால் முற்றாக அசைக்க முடியாதநிலை ஏற்படலாம். மூட்டழற்சி ஏற்பட்ட நோயாளிகள் அதிக வயதானோர் போலே தன்னை நினைப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும். மனம் தளர்ந்து விடக் கூடாது, நம்பிக்கையுடன் இருக்க வேண்டும். மாற்று முறைகள் இருக்கின்றன.

### முழு செயற்கை மூட்டறுவைக்குத் தயாராகுவது எப்படி?

எப்போது உங்களுக்கு முழு செயற்கை மூட்டறுவை சிகிச்சை தேவை என்பதை உங்களது மருத்துவருடன் ஆலோசித்து முடிவெடுக்க வேண்டும். சில நேரங்களில் (அழற்சிக்குரிய) மருந்து, மாத்திரைகள் அல்லது ஒரு சிறு அறுவை சிகிச்சை செய்தால் மட்டும் போதும் என்று உங்கள் மருத்துவர் நினைத்து சிகிச்சை கொடுக்கலாம். இருப்பினும் அது பயன் கொடுக்காதபோது வலி அதிகமாகிக் கொண்டே இருக்கும். காலை ஊன்றாமல் வைத்திருந்தால்கூட வலி இருந்து கொண்டே இருக்கும். இதன் காரணமாக இரவில் தூக்கம் கெடும். முழு செயற்கை மூட்டறுவை சிகிச்சை தேவை என்பதை நீங்களே இப்போது புரிந்து கொள்ள முடியும். மாத்திரைகள் எடுத்துக் கொண்ட பிறகும் வலி தொடர்ந்து இருக்கும்போது நீங்கள் மூட்டு அறுவைசிகிச்சைக்கு தயாராவதைத்தவிர வேற வழியில்லை




என்றே கூறலாம்.
நாம் இதுவரை இந்தப் பகுதியில் மூட்டின் பயன்கள், மற்றும் செயல்பாடுகள் பற்றி பார்த்தோம். அடுத்த பகுதியில் இதன் தொடர்ச்சியைப் பார்க்கலாம்.

தகவல்: டாக்டர் ராதாகிருஷ்ணன் பால்ராஜ், MBBS , MS (Ortho)
A to Z Health e- magazine

'கடினமாக உழையுங்கள்'
இந்த இரண்டு சொற்களையும் பின்பற்றுபவர்கள்..
வெற்றியின் ரகசியத்தை முழுமையாக அறிந்து கொண்டவர்கள்..!


யோகா சோதிடம்

● கிரகப்பொருத்தம் பார்த்தல் ● சுபமுகூர்த்தம் கணித்தல்
● பலன் பார்த்தல் ● சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361


# தேரோட்டம் தேசு மிக்கது

நயினையம் பதிக்கு வாருங்கள் நாகம்மாள்
திருத்தேர் பவனி பாருங்கள்
இகபர சுகங்களை அருளிடுவாள்
இன்னருள் மழையில் நனைத்திடுவாள்



விநாயகர் முருகன் திருத்தேர்
பின்வர தொடரும் காட்சி
கல் மனதையும் கரைத்து விடும்
உள்ளம் உவகையால் ஒளிரும்

வேப்பமர நிழலில் கூடும் பக்தர்கள்
விரும்பும் வரங்களை வேண்டி நிற்பர்
பட்டம் பதவி பெற்றோரும்
இட்டமுடன் இணைந்து ஏத்துவராம்

கடல் மேல் படிந்துவரும் காற்று
உடல் சுகத்தை உண்டு பண்ணும்
களைத்து சோர்வுறும் அடியவர்க்கு
அமுதசுரபி அமுது ஆற்றும் பசியை

கடுகு சிறிதெனினும் காரம் பெரிதாம்
தீவு சிறிதெனினும் கீர்த்தி பெரிதாம்
நித்திய யாத்திரைத் தலமாம் நயினை
புத்தர்,யேசு, நபிகள் அம்பிகையால் புனிதமடைக.

15.07.2019 திங்கள் கிழமை திருத்தேரில் பவனி வரும் காட்சி அற்புதக்காட்சி, கண்கொள்ளா காட்சி, களிபேருவகை கொள்ளும் காட்சி.



- நா.க சிவராமலிங்கம் -

# யாரிந்தக் கரும்புலிகள்

அன்னையின் பிள்ளைகளாய் ஆற்றலுள்ள மாணவராய்
இன்னலின்றிக் கற்றுதேர்ந்த ஏந்தல்கள் - தன்மானம்
காப்பதற்காய் நன்னோக்காய்க் காவற் பணிக்காய்
கூப்பிடாமற் சென்றனரே காடு.

நல்லதோர் போர்வீரன் நாடுடை மக்களுக்காய்
வல்ல தலைவன் வழிகாட்ட - செல்லிடம்
எங்குமே சென்றுதன் ஏறுநடை போட்டாரே
வங்ககட லெங்குமே தான்.



போரினது உச்சம் பொலிந்தோங்க போர்முறை
மாறுபட உற்சாக மாகவே - ஏறுநடை
போட்டனர் எங்களது போர்வீர ர் போர்க்களத்தில்
ஈட்டினர் வெற்றிபல ஏற்பு.

வேர்கள் வெளியில் தெரியாத மாவீர ர்
ஊர்பேர் தெரியாத உத்தமர்கள் - காரிருளில்
குண்டுகட்டிச் சென்றே குதூகலமாய் மாண்டதந்த
வண்டமிழ்ச் செல்வரது வாழ்வு.

மில்லரென்னும் வீரன் முதலாம் கரும்புலி
வல்ல தலைவரின் வாழ்த்துடனே - நெல்லியடிப்
பாசறையைத் தாக்கினான் பற்றுடனே யூலையந்தில்
ஆசையுடன் சென்றான் சிவனடி.

வெற்றிகண்டான் மாவீரன் வேங்கைகள் ஆர்ப்பரித்தார்
கொற்றவன் கோமகனார் கண்டறிந்தார் - வெற்றியினை
அஞ்சினரே சிங்களத்தார் ஐயந்தான் மேலோங்க
விஞ்சும் புலிகளின் வேட்பு.

தரையிலே மட்டுமா? தாவிக் கடலில்
விரைந்து செயற்பட்ட வீரர் - விரைந்தழித்தார்
சிங்களத்துச் சீர்படையை சிம்மனச் சொப்பனந்தான்
பங்கம் கரும்புலியால் தான்.

முருகேசு மயில்வாகனன்

# நினைவில்...

26ஆம் பக்கத்தொடர்ச்சி

போன்றவை கலந்து சிறப்பித்துள்ளன.

**கல்லூரி வளாகம்** - 365 ஏக்கரைக் கொண்ட இவ்வளாகத்தில் பல்வகைப் பூ மரங்களும் விலங்குகளும் வாழ்க்கின்றன. குறிப்பாக மான்களும் அரிய மரங்களும் இங்கு காணப்படுகின்றன. இத்துடன் இங்கு ஒரு வாவியுமுள்ளது. இவ்வளாகத் திலுள்ள மரங்களையும் உயிரினங்க ளையும் பாதுகாக்க ஒரு பாதுகாவலர் நியமிக்கப்பட்டுள்ளார். இதன்முதல் பாது காவலர் பேராசிரியர் எட்வேட் பான்ஸ், தாவரவியல் துறைப் பேராசிரியர்களே இதற்கு நியமிக்கப்படுகின்றனர். நான் படித்த காலத்தில் தாவரவியல் பேராசிரியர் கலாநிதி வெங்கடசுப்பன் பாதுகாவலராக இருந்தார். இவர் தனது பைசிக்கிளில் இந்த வளாகத்தைச் சுற்றிக் காலையிலும் மாலையிலும் விரிவுரைகள் இல்லாத வேளை ஓடித் திரிவதை நான் நாளாந்தம் காணக்கூடியதாக இருந்தது. தற்போதைய பாதுகாப்பாளராக கலாநிதி செல்வா கிங் றிச்சாட் பணியாற்றுகிறார். இவ்வளாகம் ஆசியாவிலேயே இரண்டாவது பெரிய புதர் காடாகும். தாவரவியல், விலங்கியல் துறை மாணவர் தமது செய்முறைக் கல்விக்கு இதனைப் பயன்படுத்துகின்றனர். நான் படித்தபோது கலாநிதி கிறிஸ்பின் தேவதாஸ் என்ற எனது விரிவுரையாளர் ஒவ்வொரு சனிக்கிழமை காலை 9 மணி



முதல் 11 மணிவரை எம்மில் சிலரை இவ்வளாகத்தின் பகுதிகளிலுள்ள தாவர இனங்களை அடையாளம் அறியும் பணியில் ஈடுபடுத்தி வந்தார். எமது தாவரங்களின் சேர்க்கைக்கும் இது பயன்பட்டது.

இக்கல்லூரி பற்றிய மேலதிக விபரங்களை அடுத்த கட்டுரையில் பார்ப்போம். (தகவல்-விக்கிபீடியா) தொடரும்.

- உண்மை புறப்பட ஆரம்பிக்கும் முன் பொய் பாதி உலகத்தை வலம் வந்துவிடும்.
- உண்மை தனியாகச் செல்லும். பொய்க்குத்தான் துணை வேண்டும்.
- உலகம் ஒரு நாடக மேடை. ஒவ்வொருவரும் தம் பங்கை நடிக்கின்றர்.
- நியாயத்தின் பொருட்டு வெளிப்படையாக ஒருவருடன் விவாதிப்பது சிறப்பாகும்.



# EDUCATION

## Review Questions 19-14

**ADVANCED FUNCTIONS 12**

(i) If $\sin\frac{x}{2} = \frac{3}{5}$, $0 \le x \le \frac{\pi}{2}$, Evaluate,

(a) $\cos x$ (b) $\tan x$ (c) $\sin\left(\frac{x}{4}\right)$

(ii) If $\tan x = 1$ and $\sin y = \frac{24}{25}$ with $x$ and $y$ interval $\left(0, \frac{\pi}{2}\right)$, evaluate

(a) Csc $(x+y)$ (b) sec $(x-y)$

**CALCULUS & VECTORS 12**

Determine the dimensions of a largest rectangle that can be inscribed in a parabola $f_{(x)} = -4x^2 + 12x$

**ORGANIC CHEMISTRY 12 1**

Give reaction pathway to produce the following compounds from 1-propanol.

(i)Propene (ii) Propanal (iii) proponoic acid (iv)2- proponol (v) 2- bromopropane (vi) Propanone

**DATA MANAGEMNENT 12**

(i) Simplify

$$(2x+3y)^5 + (2x-3y)^5$$

(ii) Find the $6^{th}$ term $(3x^2 + y)^9$

(iii) Kevin gives his birthday party for seven of his twelve friends.

a) In how many ways can he choose his seven friends

b) In how many ways he can choose if two of his friends will not attend together

**BIOLOGY 11**

What are the four types of chromosomal damages and explain which type of chromosomal damage might affect more than one chromosome.


**PHYSICS 11& 12**

(i) An object is thrown vertically upward from a height of 10m above the ground. At the same instant, another object is released along a friction less ramp. The two objects reach the ground at the same time, and both have a final speed of 25 m/s. What is the angle of the ramp.

## Answer Key : 19-13

**PHYSICS 12**

A car travelling up at a steady speed of 50km/h an inclined road as shown below.




(i) Work done against gravitational force

$= mgh = 1400 \times 9.8 \times (0.2/7) \times 4000$ N

(ii) Work done against friction

$= 530$ N/m $\times$ 4000m $= 2.12 \times 10^6$ N

Total work done = (i) + (ii)

Time taken to reach 4km, in seconds

$$t = \frac{4km}{50km/h} \times \frac{3600s}{h}$$

$$power = \frac{work}{time}$$

$$power = \frac{3.688 \times 10^6}{288} = 1.23 \times 10^4\ w$$

Answer key
19-14 next issue
☎ 647 341 3975
Dr. K.A. Srikrishnaraj

KEEN TUTORING CENTRE

# கர்மா

- ஞானா உருத்திரன் -
gnana_uruthirenren@hotmail.com
www.gnanauruthiren.com/tamil
facebook-uruthirengnana

பெரும்பாலான கலாசாரங்களில் கர்மா என்பதைப் பற்றி பேசுவது உண்டு. மனிதருடைய உள்மன உணர்வில் தமது வாழ்க்கைக்கு காரணம் இருக்கின்றது. நான் இந்தக் குடும்பத்தில் பிறந்ததற்கு ஒரு காரணம் இருக்க வேண்டும் என்ற எண்ணம் பலபேரின் மனதில் தோன்றினாலும் பல தடவை நாம் அதனைவிட்டு வாழ்க்கையின் தேவைகளை பார்ப்பதில் செலவிடுவதுண்டு. இப்படியான எண்ணங்கள் கேள்விக்குறிகள் பெரும்பாலும் அவர்களுக்கு மனப்போராட்டமான சந்தர்ப்பத்தில் ஏற்படுகிறது. இது எனது கர்மா அதனால் நான் இப்படி கஷ்டப்படுகிறேன் என்று சிலபேர் வாய்விட்டு சொல்லுவதும் உண்டு. கர்மா எப்போதும் எதிர்மறையான கஷ்டமான நிலையை குறிப்பது போல்தான் பலபேர் நினைப்பதுண்டு.

கர்மா எதிர்மறையானதாக மட்டுமன்றி நேர்மறையானதாகவும் இருக்கலாம். எல்லா அனுபவங்களும் மூளை, உடல் முழுவதும் உள்ள கலங்களிலும் பதிக்கப்படுகின்றன. இவற்றை ஆழ்மன உடல் என்று சொல்லுவதுண்டு.

இது உணர்வுத் தளத்திற்கு அப்பாற்பட்ட உணர்வாகக் கருதப்படுகிறது. இந்த நினைவுப் பதிவுகள் எமது பிராண சக்தியை (life force) முழுமையாக பயன்படுத்துவதற்கு அதாவது உலகத்தில் எமக்கு விருப்பமான வாழ்க்கையை அமைப்பதற்கு இது தடையாக இருப்பது உண்டு. வாழ்க்கையில் நேரம் ஒரு வகையில் மனிதரின் உருவாக்கம். அதன் கருத்து என்ன என்றால் நாம் இன்று நாளை என்று சொல்வது எமது மணிக்கூட்டு நேரம் ஆகும். இது சூரியனின் மறைவும் தோன்றலும் கொண்டு உருவாக்கப்பட்டது. ஆனால் சூரியனும் பூமியும் சுற்றுவதால் எமக்கு மறைவது போல் தெரிகிறது. ஆனால் நாம் எந்த நேரமும் எல்லா சக்திகளோடும் தொடர்பாக இருக்கிறோம். அதாவது இறந்தகாலம் எதிர்காலம் எமது மனதில் இருக்கிறதே தவிர உண்மையில் இல்லை. அதனால்தான் எமது பழைய பிறப்பு சக்திகள் இப்பொழுதும் இயங்குகிறது. அதனோடு நாம் இங்கு பிறப்பதற்கு முன்பு எமது பெற்றோரைத் தெரிவு செய்கிறோம். எமது கர்மாவிற்கு ஏற்பத்தான் நாம் அவர்களைத் தெரிவு செய்து எமது கர்மா சக்தியை முழுமையாக வெளிவிடுகிறோம். ஆனால் இவற்றை எமது ஆத்மாவின் நிலையில் எடுத்துக்கொள்வது ஆகும்.

பெற்றோரிடம் இருந்து எடுப்பது பரம்பரை கர்மா என்பர். இது பெற்றவர்களிடம் இருந்து சில அனுபவங்களை எடுப்பதன் மூலம் நாம் வாழ்க்கை அனுபவங்களை உருவாக்குகிறோம். அதன்பிறகு அதனை அனுபவிப்பதன் மூலம் அதனை நாம் இழக்கிறோம். நாம் கர்மா சக்திகளை அனுபவங்கள் மூலம் விலக்கலாம் அல்லது ஹீலிங் என்ற முறை மூலம் விலக்கலாம். இந்த கர்மா சக்தி ஒரு நினைவுப் பதிப்பு (memory system). இதை நீங்கள் கட்டாயம் அனுபவித்துத்தான் ஆக வேண்டும் என்று இல்லை. நாம் நினைப்பது போல கடவுளின் சக்தி ஒரு மனிதனைப் போல மேலுலகத்தில் இருந்து நீ பிழைவிட்டு விட்டாய் போய் தண்டனை பெறு என்று அனுப்பவில்லை. இந்த சக்திகள் உங்கள் ஆத்மாவையும் பாதிக்காது. ஆனால் அதனுடைய முழுமையான சக்தியை வெளிக்கொண்டு இந்த பூமியில் வாழ்வதற்கு தடையாக இருக்கும். அதனால்தான் எமது கர்மா எமக்கு எதிராக இயங்குவதாக சொல்லுகிறோம். அவை வாழ்க்கை அனுபவங்களாக வெளிவருவதாக சொல்லிக்கொள்கிறோம். கர்மா எமது



நேர்மறையான அல்லது எதிர்மறையான நினைவுப்பதிவாக இருக்கலாம். இது முகில் சூரியனில் இருப்பது போல் இயங்குகிறது.

இந்தப் பதிவுகள் உண்மையில் உண்மையான நிகழ்வாக கூட இருக்கத் தேவையில்லை. இது பல பரம்பரையாக ஒரு குடும்பத்தில் இருந்ததாக இருக்கலாம். உங்களுக்கு அது சம்பந்தம் இல்லாமல் இருக்கலாம். நீங்கள் ஒரு குடும்பத்தை தெரிவுசெய்வது உங்கள் பழைய பிறப்பு சக்திகளை அதுவும் முக்கியமாக கர்மாவை நீங்கள் இந்த பிறப்பில் வெளியில் கொண்டு வருவதற்கு அல்லது அதனை அகற்றுவதற்கு ஏற்ப அமைந்தாலும் சில நேரங்களில் உங்களுக்கு தேவையில்லாத பரம்பரை கர்மாவும் வரலாம். சில நேரங்களில் பாழடைந்த பரம்பரை என்று பல மக்கள் சொல்லுவது உண்டு. அது பரம்பரையாக சில சக்திகள் தொடர்ந்து வருவதை பலமக்கள் கவனிக்கின்றனர். அந்தக் குடும்பத்தை அங்கு பிறக்கும் குழந்தை தெரிவு செய்கிறது. இதற்கு முடிவே இல்லையா என்று நீங்கள் நினைக்கலாம். உண்மையிலேயே எம்மை நாம் உணர்ந்து கொள்வதன் மூலம் மிகவும் நல்ல வகையில் எமது வாழ்க்கையை திருப்பி மாற்றலாம். இது உங்கள் முடிவு. இதனை அனுபவித்து இந்தக் கர்மாவை விடுவதோ அல்லது அதனை உணர்ந்து விடுவதோ என்பது நீங்கள் எடுக்க வேண்டிய முடிவு. ஏன் என்றால் உங்கள் கர்மாவை வாழ்க்கையில் இருந்து விடப்போகிறீர்கள் என்று முடிவு செய்தால் உங்களால் முடியும்.

சில நேரங்களில் சில அனுபவங்களைக் கொண்டுவருவதன் மூலம் ஆத்மா வளர்கிறது. அதனைவிட பலவிதமான அனுபவபூர்வமான நம்பிக்கைகள் சக்திகள் எமக்கு தேவையில்லாதவை எமது வாழ்க்கைக்கு தடையாக இருக்கிறது. இவற்றை நாம் சுலபமாக எடுக்கலாம்.



## Math tutorial 392

Answers to tutorial 391

1)A vector in $R^4$, $\bar{u}$ =(4,2,-5 ,2) might have a magnitude of $|\bar{u}|^2=4^2+2^2+(-5)^2+2^2$ =16+4+25+4 =49

$|\bar{u}| =\sqrt{49} =7$ .It is very tempting to think that a geometric interpretation can be given . a geometric interpretation is not possible for $n\geq4$

2)A point on the y axis has coordinates P(0,a,0). Since it is equidistance from A(2 ,-1 ,1 ) and B(0 ,1 ,3 )

$|AP|^2=|BP|^2$, therefore $4+(a+1)^2+1 =(a-1)^2+9$

a =1, the point on the y-axis is (0 ,1,0)

b)The midpoint of AB is the Point Q(1,0,2) which is not on the y-axis and is equidistant from Aand B

3Since $2\bar{a}+\bar{b}$ is perpendicular to $\bar{a}-3\bar{b}$ , $(2\bar{a}+\bar{b}).(\bar{a}-3\bar{b})=0$ therefore $2|\bar{a}|^2-5\bar{a}.\bar{b}-3|\bar{b}|^2=0$

$2|\bar{a}|^2-5|\bar{a}||\bar{b}|\cos Ø-3|\bar{b}|^2=0$

But $|\bar{a}|=2|\bar{b}|$, substituting gives $Ø=60^0$

4)(a) $\binom{6}{3}\binom{5}{2}$ =200

b)The number of committees with no men $\binom{6}{5}$=6 no. of comittees with no women $\binom{5}{5}$=1, therefore the answer is 462-7=455 since $\binom{11}{5}=462$

Tutorial 392 (Questions)

1)How many ways can two girls and 2 boys be selected from 12 girls and 10 boys.

2)How many of the anagrams of the word Mississauga are palindromes

3)Find a family of cubic functions whose x intercepts are -2 ,-1 and 1

b)Find a particularmember of the above family whose graph passes through the point(2 ,-6)

4)A steel cube is uniformly coated with ice .The volume of ice is given by $y=8x^3+36x^2+54x$ $cm^3$,where x is the thickness of ice,find its thickness when volume is $2170cm^3$

ByMr S.FXavier(Teacher)6473409490/4167322228





ரூபனின் அறையிலிருந்து கட்... கட்... கட்... என சத்தம் கேட்டது. கூகிள் கோகிலா, செக்கண்ட் புளோர் செல்லம்மாவிடம் ரகசியமாக... ரூபன் படம் ஏதன் எடுக்கிறாரோ... டைரக்ரர் மாதிரி கட்... கட்...கட்... என சத்தம் வருது.



மெல்லமா கதை கோகிலா, ரூபன் உலகரைவிட இரண்டு மடங்கு கொதியிலை நிக்கிறான். கொம்பனியிலை கனபேரை வேலையாலை நிப்பாட்டிப் போட்டினமாம். தனக்கு என்ன நடக்குமோ தெரியாதாம். அதுதான் எல்லாம் கட்...கட்...கட்... என ரூபன் துள்ளிகுதிக்கிறான்.




ஒன்ராறியோவிலை முக்கிய பல தேவைகளுக்குப் பணம் தேவையாம். அதுக்காக... கனக்க தேவையற்ற செலவுகள், சலுகைகளைக் கட்டுப் படுத்தீனமாம்.

வரவு எட்டணா... செலவு பத்தணா....
கல்வித்துறையில் கட், மருத்துவத்துறையில் கட், போக்குவரத்து துறையில் கட்,

இதற்கிடையில் ரூபியின் குரல் அழுதபடி விஜயகுமார்-மஞ்சுளாவின் மகள் வனிதா பிக்பொஸ் பிரச்சனையில் பிடுங்குப்படும் குரலைப்போல் அழுதழுது சிக்கிய சி.டீ..யில் வருவதுபோல வந்துகொண்டிருந்தது.



வட்ஸ்அப் வரதன் பயங்கரப் பிரச்சினையாகத் தலைதூக்கும் பத்மஸ்ரீ சுதா ரகுநாதனின் மகளின் மதம்மாறிய பிரச்சினையால்... அதுபற்றிய அர்த்தம் தெரியாதோரின் கருத்துக்களையும், அவரது மறக்கமுடியாத பக்திப்பாடல்களையும் கேட்டுக்கொண்டிருந்தார்.



“அல்லா அல்லா... நீ இல்லாத இடமேயில்லை நீ தானே உலகின் எல்லை...” இந்தப் பிரசித்தி பெற்ற பாடலைப் பாடியவர் நெற்றியை திருநீற்றால் பூச்சடித்து மஞ்சளும் சிகப்பும் அதாவது சந்தனமும் குங்குமமும் நெற்றியை அலங்கரிக்கப் பார்த்தோர் கையெடுத்துக் கும்பிடும் எம்.எஸ் விஸ்வநாதன்.



“தேவன் கோவில் மணியோசை... நல்ல சேதிகள் சொல்லும் மணியோசை...” பாடலைப் பாடியவர் பக்திக்கடல் மனமுருகப் பல பாடலைத்தந்த சீர்காழி கோவிந்தராஜன்.

“சந்தனமும் ஜவ்வாதும் சேர்ந்து மணம் கமழ
பாலபிசேகமுடன் நெற்றித்... திருநீறணிந்து... பக்தர் படை சூழந்துவர
வள்ளி தெய்வானையுடன்... காட்சி தரும் உன் அழகை
காண ஆயிரம் கண் வேண்டும்... முருகனைக்காண கண் ஆயிரம் வேண்டும்...”
பாடலைப் பாடியவர் கிறிஸ்தவரான கே.ஜே.யேசுதாஸ் அவர்கள்.
அதுவும் அந்தப்பாடல் முதலில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்தான் பாடப்பட்டது.

இசைக்கும் பாடலுக்கும் வழிபாட்டிற்கும் சமயவரம்பு இல்லை.
“அலை பாயுதே கண்ணா.... இது முறையோ இது தகுமோ
இது தருமம் தானோ?” சுதா ரகுநாதன் பாடிய பாடலிலொன்று.
உலகரின் மனம் அன்றும் இன்றும் என்றுமென பலவற்றை அசைபோட்டது.

சைவ சமயத்திலிருந்து சமணசமயத்தைத் தழுவிய திருநாவுக்கரசர் சமணசமயத்து நூல்களைக் கற்றுப் பாண்டித்தியம் அடைந்து வாதில் வென்றவர். மீண்டும் சைவசமயத்திற்கு வந்தார். அவரது தேவாரங்கள் 4ஆம் 5ஆம் 6ஆம் திருமுறைகளில் அடங்கும். மூவாயிரத்திற்கு மேற்பட்ட பாடல்கள் ஆகும்.

உலகண்ணை... உலகண்ணை... எனக் கூகிள் கோகிலா இதைப்பாருங்கோ என்று ஐபொட் அகிலா ஜவ்னாவிலிருந்து... வட்ஸ்அப்பில் வீடியோ அனுப்பியிருக்கிறா... நாவற்குழியிலை பௌத்தவிகாரை திறக்கினம். அங்கை ஆத்திரம்கொண்ட மக்களுக்காக பொலிஸ் காவலிட பௌத்த சாதுக்கள் திமிராக நடந்துபோயினம். குடை கொடி ஆலவட்டத்துடன் மேள தாளத்துடன் போய்க்கொண்டிக்கினம். எல்லோரும் வீடியோவைப் பார்க்க...

அகிலா ஆடியமாவாவைக்கு தம்பியாரோடை கீரிமலைக்கு போறதெண்டவ இப்ப நாவற்குழியிலை நிக்கிறா என முணுமுணுத்தா செக்கண்ட் புளோர் செல்லம்மா. வட்ஸ்அப் வரதனின் லப்ரொப்பில் ரொப்பான பாடல் ஒலித்தது.
<u>அலை பாயுதே கண்ணா.... இது முறையோ இது தகுமோ... இது தருமம் தானோ?</u>

வெயிலின் அருமை நிழலில் தெரியும் என்பர். முன்னோர் எமக்கு வைத்துச்சென்றது, விட்டுச்சென்றது... நிலம் வீடு அதனைச்சுற்றிப் பனை, தென்னை, பழமரங்களும் தான். காற்றோடு வரும் இளம் காற்று இதமான காற்று. எயர்கொண்டிசன் தேவையா? நிலத்தைக் கூறு போட்டனர், மரங்களை வெட்டி சாய்த்தனர், களவைத் தடுக்க.. அழகைக்கூட்ட சுற்றுமதில்களைக் கட்டித் வெக்கை தாங்கமுடியாமல் மின்சாரம் செலவிட்டு எயர்கொண்டிசன்...

உலகில் அகோரம் தாங்கமுடியவில்லை. மீண்டும் விழிப்புணர்ச்சி.

உலகின் சுற்றுசூழலை பாதுகாக்க ஒரு லட்சம் கோடி மரங்கள் நடவேண்டுமென்று சர்வதேச ரீதியில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆனால் கனடாவில் கஞ்சா செடி வளர்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பல வீடுகளில் செடி வளர்க்கப்படுகிறது. மரங்களையும் நீரையும் பாதுகாக்கத் தெரியாவிட்டால் வரட்சி, வெப்பம் ஏற்படும். இது தெரிந்தும் தெரியாமல் இருப்பது வெட்கம். இப்போதுதான் சர்வதேசம் வெக்கையை நினைத்து அவிந்து புழுங்குகிறது. மாட்டுக்கு மாடு சொன்னால் கேளாதாம். மணிகட்டின மாடுசொன்னால்தான் கேட்குமாம்.
மாட்டுக்கு மணிகட்டினாலென்ன மாலை போட்டாலென்ன...



உலகளாவியரீதியில் நீரின்றி நீர்வாழினங்கள், பாய்வன, பறப்பன, கால்நடைகள் நீரின்றி ஆங்காங்கே இறந்து கொண்டிருக்கின்றன.




இலங்கையில் முக்கனிகளான மா பலா வாழை அங்கிங்கென நிறைந்திருக்கும். பழவர்க்க உற்பத்தியில் ஒட்டுமாங்கன்றுகள் 1950ஆம் ஆண்டிலிருந்து இணுவில், திருநெல்வேலி பகுதிகளிலிருந்து விவசாய திணைக்களம் பழமரக்கன்றுகளை கொள்வனவு செய்து குடியேற்றத்திட்டப் பகுதிகளுக்கும் ஏனைய மாவட்டங்களுக்கும் விநியோகம் செய்தது. இன்றும் அவை விருட்சமாகப் (இலங்கை ராணுவம், இந்திய ராணுவத்தின் செல்லடிகளில் தப்பி) பலன்தரும் பழமரங்களையும் அதன் சுவையையும் யாரும் மறக்கமாட்டர்.

யாழ்ப்பாணம் என்று சொன்னால் தேன் சுவையூறும்.
மருந்தும் விருந்தும் மூன்று நேரம். ஆனால் இன்று இலங்கையில் மருந்தே... மரணத்தை வரவழைக்கிறது. தரம் குறைந்த மருந்தை மக்கள் எத்தனை தரம் பாவித்தார்களோ?

மாத்தறை டெனியாய நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன நெத்தியடியாகக் கருத்து தெரிவித்துள்ளார். பத்தாயிரம் கோடிக்குமேல் இந்தியாவிலிருந்து காலாவதியான மருந்துகளை இறக்குமதி செய்வோர், ஐந்துகோடி செலவில் மருந்து பரிசோதனை செய்யும் நிறுவனத்தை உருவாக்க முடியாதா? எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஞாபகம் இருக்கிறதா யூலை 15...30




16. ஆடிப்பிறப்பு (ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே! நவாலியூர் சோமசுந்தரப்புலவர்)




16. இன்றும் காற்றினிலே வரும் கீதம். இசைத்திலகம் டி.கே.பட்டம்மாள் நினைவுதினம் (பிற-1919 - மறைவு 2009)

18. கவிஞர் வாலி நினைவுதினம். (1931 - 2013)




19. சுவாமி விபுலானந்தர் நினைவு தினம் (1947)

20. தற்பாதுகாப்பு வல்லுனர் ஹொலிவூட் நடிகர் புறூஸ்லீ நினைவு தினம். (1940 -1973)



20 அன்னை சாரதா தேவி நினைவு தினம். (சுவாமி ராமகிருஸ்ணரின் மனைவி) (பிற.1853 - மறைவு. 1920) உனக்கு மன அமைதி வேண்டுமாயின் யாருடைய குறையையும் காணாதே உன் குறைகளையே பார்




21. நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நினைவு தினம். (பிற-1927 - மறைவு 2001)



23. குணசித்திர நடிகர் டி.எஸ்.பாலையா நினைவுதினம். (1914 - 1972)



25. கொழும்பு வெலிக்கடை சிறையில் குட்டிமணி தங்கதுரை உட்பட 5 தமிழ் கைதிகள் சிறைச்சாலையில் சிங்களக் காடையர்களால் கொல்லப்பட்டனர் பல தமிழர் இதே காலத்தில் கொல்லப்பட்டனர் உடமைகள் எரியூட்டப்பட்டன பலர் உயிரோடு கொழுத்தப்பட்டனர் 1983 இனக்கலவரம்.




27. தங்கத்தாத்தா சோமசுந்தரப்புலவர் நினைவுதினம்.

27. டாக்டர் அப்துல்கலாம் இந்தியாவின் 11ஆவது குடியரசுத்தலைவர் அறிவியலாளர். (1931 2015)

29. ராஜகுரு சேனாதிபதி கனகரட்ணம் மூத்த வானொலி அறிவிப்பாளர்.

29. ஐசாக் இன்பராஜா ஈழத்து நகைச்சுவை நாடகக்கலைஞர் (1952 2014)



30. வாக்கிய பஞ்சாங்க கணிதர் இரகுநாதையர் (1969) நினைவுதினம்

31. ஆடி அமாவாசை.



## படித்ததில் பிடித்தது

நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

# நமது உடல், ஒவ்வொரு உடல் பாகத்திற்கென தனித்தனியே கடிகாரத்தின் அலாரத்தை முன்பதிவு செய்து கொண்டு சுழன்று கொண்டிருக்கிறது

**- சந்திரகுமார் -**

ஒவ்வொரு உறுப்புக்கும் அதன் பணியை செய்து முடிக்க இரண்டு மணி நேரம் ஒதுக்கியுள்ளது. இரண்டு மணி நேரம் முடிந்ததும் மீண்டும் அலாரத்தை அடுத்த உறுப்புக்கு மாற்றி விடுகிறது.

விடியற்காலை 3.00 மணிமுதல் 5.00 மணி வரை நுரையீரலின் நேரம். இந்த நேரத்தில் சுவாசப் பயிற்சி செய்து காற்றின் மூலம் வரும் பிராண சக்தியை உடலுக்குள் அதிகமாகச் சேகரித்தால் ஆயுள் நீடிக்கும். தியானம் செய்யவும் ஏற்ற நேரம் இது. ஆஸ்துமா நோயாளிகள் இந்த நேரத்தில் மிகவும் சிரமப்படுவார்கள்.

விடியற்காலை 5:00 மணிமுதல் 7:00 மணிவரை பெருங்குடலின் நேரம். காலைக் கடன்களை இந்த நேரத்துக்குள் முடித்தே தீர வேண்டும். மலச்சிக்கல் உள்ளவர்கள் இந்த நேரத்தில் எழுந்து கழிவறைக்குச் செல்லும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் நாளடைவில் மலச்சிக்கல் தீரும். உயிரணுக்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக உள்ள நேரமும் கூட இதுவே.


காலை 7:00 மணி முதல் 9:00 மணிவரை வயிற்றின் நேரம். இந்த நேரத்தில் கல்லைத் தின்றாலும் வயிறு அரைத்து விடும். காலை உணவை பேரரசன் போல் உண்ண வேண்டும் என்று சொல்வர். இந்த நேரத்தில் சாப்பிடுவதுதான் நன்கு செரிமானமாகி உடலில் ஒட்டும்.

காலை 9:00 மணிமுதல் 11:00 மணிவரை மண்ணீரலின் நேரம். காலையில் உண்ட உணவை மண்ணீரல் செரித்து ஊட்டச் சத்தாகவும் ரத்தமாகவும் மாற்றுகிற நேரம் இது. இந்த நேரத்தில் பச்சைத் தண்ணீர் கூடக் குடிக்கக்கூடாது. மண்ணீரலின் செரிமான சக்தி பாதிக்கப்படும். நீரழிவு நோயாளிகளுக்கு மோசமான நேரம் இது.

முற்பகல் 11:00 மணிமுதல் பிற்பகல் 1:00 மணிவரை இதயத்தின் நேரம். இந்த நேரத்தில் அதிகமாகப் பேசுதல், அதிகமாகக் கோபப்படுதல், அதிகமாகப் படபடத்தல் கூடாது. இதயம் பாதிக்கப்படும். இதய நோயாளிகள் மிகமிக எச்சரிக்கையாக இருக்க வேண்டிய நேரம்.

பிற்பகல் 1:00 மணிமுதல் 3:00 மணிவரை சிறு குடலின் நேரம். இந்த நேரத்தில் மிதமாக மதிய உணவை உட்கொண்டு சற்றே ஓய்வெடுப்பது நல்லது.

பிற்பகல் 3:00 மணிமுதல் மாலை 5:00 மணிவரை சிறுநீர்ப்பையின் நேரம். நீர்க் கழிவுகளை வெளியேற்றச் சிறந்த நேரம்.



மாலை 5:00 மணி முதல் 7:00 மணிவரை சிறுநீரகங்களின் நேரம். பகல் நேர பரபரப்பிலிருந்து விடுபட்டு அமைதிபெற, எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்க, தியானம் செய்ய, வழிபாடுகள் செய்ய சிறந்த நேரம்.

இரவு 7:00 மணிமுதல் 9:00 மணிவரை, பெரிகார்டியத்தின் நேரம். பெரிகார்டியம் என்பது இதயத்தைச் சுற்றி இருக்கும் ஒரு ஜவ்வு. இதயத்தின் Shock absorber. இரவு உணவுக்கு உகந்த நேரம் இது.

இரவு 9:00 மணிமுதல் 11:00 மணிவரை, டிரிப்பிள் கீட்டர் என்பது ஓர் உறுப்பல்ல. உச்சந்தலைமுதல் அடி வயிறுவரை உள்ள மூன்று பகுதிகளையும் இணைக்கும் பாதை. இந்த நேரத்தில் உறங்கச் செல்வது நல்லது.

இரவு 11:00 மணிமுதல் 1:00 மணிவரை பித்தப்பை இயங்கும் நேரம். இந்த நேரத்தில் தூங்காது விழித்திருந்தால் பித்தப்பை இயக்கக் குறைபாடு ஏற்படும்.

இரவு 1:00 மணிமுதல் விடியற்காலை 3:00 மணிவரை கல்லீரலின் நேரம். இந்த நேரத்தில் நீங்கள் உட்காந்திருக்கவோ விழித்திருக்கவோ கூடாது. கட்டாயம் படுத்திருக்க வேண்டும். உடல் முழுவதும் ஓடும் ரத்தத்தை கல்லீரல் தன்னிடத்தே வரவழைத்து சுத்திகரிக்கும் நேரம் இது. இந்த பணியை நீங்கள் பாதித்தால் மறுநாள் முழுவதும் சுறுசுறுப்பில்லாமல் அவதிப்படுவீர்கள்.

**உறுதியுள்ளவன்,**
**உள்ளத்தில் திடமுள்ளவன்**
**உலகைத்**
**தனக்கு வேண்டிய முறையில்**
**அமைத்துக் கொள்கிறான்.**






# எம்மை நாம் பாதுகாப்பது எப்படி? ‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்’

## உணவு மூலம் உடலை பாதுகாத்தல்



வைத்திய கலாநிதி
கே.ரீ. கோபால்
647-456-9796

நாம் உண்பதற்கே வாழ்வு என்று நினைக்க வேண்டாம். சுகத்துடன் வாழ்வதற்கே உணவு என்பதைப் புரிந்து கொள்ளவும்.

நமது உடலானது இரசம், இரத்தம், மாமிசம், மேதஸ், அஸ்தி, மச்சை, சுக்கிலம் ஆகிய சப்த தாதுக்களினால் ஆனது. இதனிடையே முத்தாதுக்களான வாதம், பித்தம், கபம் இரண்டறக் கலந்து எம்மை இயக்குகின்றன. இவை கால, அர்த்த, கரும, மித்தியா யோகங்களினால் மாற்றம் அடைந்து வியாதி நிலையை ஏற்படுத்துகின்றது.

எனவே சுற்றாடல், தங்குமிடம், கடைப் பிடிக்கும் உணவுப் பொருட்களிலுள்ள இனிப்பு, புளிப்பு, கைப்பு, உறைப்பு, துவர்ப்பு, கார்ப்பு ஆகிய அறுசுவைகளை கையாள வேண்டும். இவற்றில் உள்ள உஸ்ன சீத வீரியத்தன்மையால் மதுர, கடுவிகார நிலையைப் பெற்று எமது உடல்நிலை மாற்றம் அடையும். இதனை கருத்தில் கொண்டு வள்ளுவர் பெருந்தகை பின்வருமாறு கூறிக்கொள்வது யாதெனில்

“மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு
அருந்தியது அற்றது போற்றி உணின்”

என்றும் அத்துடன் நின்று விடாது

“அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு” என்கிறார்.

எனவே நமது உணவில் தரமும் அளவும் முக்கியமாகும். நாம் சமச்சீர் உணவு வகைகளை கையாள வேண்டும். அவையாவன: புரதம், மாச்சத்து, உயிர்ச்சத்துக்கள், தாதுப் பொருட்கள், கொழும்பு என்பனவாகும். எனவே இவற்றின் தொழில் திறனைப் பற்றிப் பார்ப்போம்.

புரதச் சத்தானது நமது உடல் நிலையில் உள்ள பழுதான அணுக்களைப் (Cell) புதுபித்துக்கொள்ளும் திறமை பெற்றது. தசை, சருமம், மயிர், நகம் என்பவற்றை பாதுகாத்து சிறந்த முறையில் வைத்திருக்கும் இயல்புடையது. எனவே புரதமானது எமது உடலில் 60-80 கிராம்வரை இருப்பது சாலச் சிறந்ததாகும். ஆனால் இத்தன்மை பொருந்திய புரதம் குறைந்து எம்மிடத்து காணப்பட்டால் இளமையில் முதுமை நிலை ஏற்படும். சரும் சுருங்கும் தன்மை தென்படும். உடம்பின் பளபளப்புத் தன்மை குன்றிக் காணப்படும். இந்த நிலையைக் கருத்திற்கொண்டு இறைச்சி, மீன், முட்டை, உழுந்து, பயறு, துவரை, ஆடை நீக்கிய பால் பாவித்து வருதல் நன்றாகும்.

அடுத்து மாமிசத்தை எடுத்துக் கொண்டால் நமது தசை வளர்ச்சியைக் கொடுப்பதுடன் சக்தியையும் வலிமையையும் பெற்றுக்கொள்ள முடியும். எனவே இதற்கு உகந்த உணவாக கோதுமை, கைக்குத்தரிசி, சம்பா, கேழ்வரகு என்பவற்றைப் பாவித்து வருதல் சாலச்சிறந்தது. இதனால் இன்சுலின் நொதிப்பொருள் அதிகரிக்காமல் கட்டுப்பாட்டிற்குள் இருக்க வழி வகுக்கும்.

நாம் பாவனைக்கு தக்காளி, கீரை வகை, வெள்ளரிக்காய் என்பவற்றை எடுத்துக் கொண்டால் இதில் இரும்புச்சத்து, உயிர்ச் சத்துகள் நிறைந்து காணப்படுவதினால் உடல்நிலை நலம் பெறுவதுடன் நமது சருமத்தில் உள்ள அயோடின் குறைந்து சருமம் வெளிறிக் கொள்ளும் தன்மை ஏற்படாதிருக்க பால், முட்டை என்பவற்றையும் பாவித்தல் நன்மை பயக்கும்.



இரத்த அணுக்கள் அழியாது பாதுகாத்துக் கொள்ள உயிர்ச்சத்துக்கள் செறிந்து காணப்படும் பழ வர்க்கம் வாழைப்பழம், அப்பிள், தோடை, பப்பாப் பழம், அன்னாசி போன்றவற்றை பாவித்து வருதல் வேண்டும். இதனிடையே நமது உடம்பிற்குத் தேவையான உயிர்ச் சத்துக்கள் A B C D செறிந்து காணப்படுகின்றன.

மேலும் நமக்குத் தேவைப்படும் கொழுப்புச் சத்து ஆண்களுக்கு 50 -70 கிராமும் பெண்களுக்கு 35 -50 கிராமும் இருக்க வேண்டும். இவற்றை கருத்திற் கொண்டு இடையிடையே கோழிக் இறைச்சி சாப்பிட்டு வருதல் நன்றாகும். இதனால் உடம்பு பலம் பெற்று வலிமை பெறும். மேலும் பழம், காய்கறி, தானிய வர்க்கம், கீரை வகைகளைப் பாவித்து வந்தால் குடல்புற்று ஏற்படாது காப்பாற்றுவதுடன் இரத்தத்தில் கொழுப்பு அதிகரிக்காமல் பாதுகாத்துக் கொள்ளும்.

கொழுப்புக் குறைந்த பொருட்களையும் கல்சியம் செறிந்த பொருட்களைப் பாவித்து வந்தால் நமது எலும்புகளின் தேய்வு, துவாரம் தென்படும் நிலையை தடுக்க முடியும். பால் பாவித்து வந்தால் நற்பயன் உண்டு. வயதிற்கு ஏற்ப பாலைத்தேர்ந்தெடுப்பது உத்தமமாகும்.

மேலும் நமக்குத் தேவையான தண்ணீரை தவறாது பாவித்து வருதல் வேண்டும். இதனால் நமது சருமமும் திசுக்களும் ஈரப்பசுமை அற்றுவிடாது பாதுகாக்கும். அத்துடன் தாகம் தணியும் நாவறட்சி குறையும். பசித்தன்மை ஏற்படும்போது எமக்கு ஓரளவு தென்பைத் தரும். எனவே ஒரு நாளில் 6-8 லீற்றர் எடுப்பது நன்று. பாவனையில் வயதிற்கு ஏற்ப கூடிக் குறைத்துக் கொள்ளலாம். இதனால் மலம், சலம் கழிக்கும்போது இலகுவாக இருக்கும்.

நாம் நாளாந்தம் எடுக்கும் தேனீர், கோப்பி என்பவற்றைப் பாவித்து நன்றன்று. பதிலாக மல்லியை எடுத்து துப்பரவு செய்து தண்ணீர் இட்டு சூடாக்கி அருந்தினால் உடல்நிலைக்கு உகந்ததாக இருக்கும். விரும்பினால் பால், கற்கண்டு சேர்ப்பதினால் நாவரட்சி, தாகம் தணிவதுடன் குளிர்ச்சியையும் உண்டாக்கும். நமது தலைமுடி மற்றும் ரோமங்கள் அமினோஅமிலம் குறைந்தால் முடி கொட்டும் தன்மை ஏற்படலாம். இந்நிலையில் முட்டை, பால், இறைச்சி, கீரை வகை போன்றவற்றை வயதிற்கு ஏற்ப பாவித்து வருதல் நன்றாகும். ஆனால் முதுமையை எவராலும் தடுக்க முடியாது. ஆனால் மேல் கூறப்பட்ட சமசீர் உணவில் விரும்பியதை எடுத்து வரலாம். இதனால் முதுமை நிலையானாலும் ஓரளவு இளமைத் தோற்றமும் உடல்நிலை பளபளப்பாகவும் தென்படும்.

கர்ப்பம் தரித்த தாய்மார்கள் பெரும்பாலும் சோயா, பீன்ஸ், முட்டைக்கோஸ், வெள்ளரிக்காய், காய்கறி வகை, கீரை வகை என்பவற்றை எடுத்து வருதல் சாலச் சிறந்தது. கர்ப்ப காலத்து நீரிழிவு நோய் தாய்க்கு இருக்குமானால் உருவாகியிருக்கும் குழந்தை நிறை கூடிக் காணப்படும். இதனை ஓரளவு தடுக்க வாழைக்காய் இஞ்சி சேர்த்துப் பாகம் செய்து பாவித்து வந்தால் தாய்ப்பால் மூலம் பிள்ளை நன்கு போசாக்குடன் உடல் வளர்ச்சியடையும். தாய்க்கு இரத்தோட்டம் வேகமடையும். மார்பு நோக்கி இரத்தம் விரிவடையும். கருப்பை சாதாரண நிலைக்கு சுருக்கமடையும். மனோதத்துவ ரீதியில் தாய்க்குத் திருப்தி ஏற்படும்.

குழந்தை பிறந்து உண்ணும் பராயம் வரும்போது பிஞ்சு கரட் கொடுத்து வந்தால் பற்கள் வலுவடைந்து வலிமையுள்ளதாகவும் ஒழுங்காகவும் இருக்கும். இவர்களுக்கு உயிர்ச்சத்து C, D பழ வர்க்கங்களை இடையிடையே கொடுத்து வருதல் வேண்டும். அவற்றில் தோடை கொய்யா, பாப்பாபழம், தக்காளி போன்றன சாலச்சிறந்தது.
நீரிழிவு வியாதி வந்து எம்மைத்தாக்கும் முன் பாவற்காய், சிறுகுறிஞ்சா, வேப்பம் வடகம், வாழைப்பொத்தி, கேள்வரகு, அன்னாசி, பப்பாப்பழம், மாதுளம்பழம் போன்றவற்றை பாவிப்பதுடன் நார்ச்சத்து (தவிடு) உணவுப் பொருட்களையும் கையாள்வது உத்தமமாகும். இவற்றைக் கூறிய போதும் கடின வேலை செய்வோர், விளையாட்டு வீரர்கள் உணவில் இறைச்சி மீன், முட்டை, உழுந்து, பயறு, அவரை, பால், பழம் தவறாது எடுத்து வருதல் சாலச்சிறந்தது. எனவே புரதப்பொருள் அதிகம் எடுப்பது வரவேற்கத்தக்கது. இதனால் இழந்த வலிமையையும், பலத்தையும் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் உட்கார்ந்து வேலை செய்வோர் உணவில் மிக அவதானம் வேண்டும். அத்துடன் தகுந்த உடற்பயிற்சி செய்து வருதல் சாலச்சிறந்தது.

மேற்கூறியவற்றை நன்கு அவதானித்து கையாண்டு வந்தால் எம்மை நாம் நோய் இன்றிப் பாதுகாத்துக் கொள்ளலாம் என்பதை புரிந்து கொள்ளவும்.

## கூழ் குடிப்போம் வாரீர்

கூழ் குடிப்போம் கூழ் குடிப்போம்
கூட்டாக நாம் எல்லோரும்
கூடி இருந்து கூழ்காய்ச்சிக்
குடிப்போம் வாரீர்

ஒன்று கூடல் நாள் ஒன்றின் போது நாம்
ஓடி ஆடி விளையாடிய களைப்புத் தீர
ஒடியல் மாவில் கூழ்காய்ச்சிக்
குடிப்போம் வாரீர்


காரைமீன் கொண்டைமீன்
கொடுவாமீனோடு
கடுக்கா நண்டு கரைவலைறாலும்
கலந்து போட்டுக் காய்ச்சிய கூழ்
குடிப்போம் வாரீர்

மிளகு சீரகம் மஞ்சளோடு காரமான
மிளகாய் செத்தலும் சேர்த்து அரைத்து
மிகச் சுவையாகக் கூழ்காய்ச்சிக்
குடிப்போம் வாரீர்



கரைத்து வைத்த பனை ஒடியல் மாவை
கலக்கிவடித்துப் பானையில் இட்டு
காரசாரமாய் காய்ச்சிய கூழ்
குடிப்போம் வாரீர்

உப்புப் புளி கரைத்து உடன் கலந்து
உருசியாகக் காய்ச்சிய கூழை
ஊதி ஊதிச் சுவைத்துக்
குடிப்போம் வாரீர்



கவிநாதம் பரந்தாமன்

a new project by TRIDEL

# EDENBRIDGE ON THE KINGSWAY

## ( Royal York and The Kingsway) Etobicoke

### Highend neighbourhood




## FOR YOUR UNITS
## PLEASE CALL HomeLife/ GTA Realtors

New and Experienced Sales reps/Brokers are welcome to join our successful team.

Free Real Estate classes start every week.

- Office open 7 days
- 9:00 am - 9:00 pm
- Over 5,000 Sqft. office
- Conveniently Located in GTA Square Mall

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

HOMELIFE HIGHER STANDARDS


**For More info. Call 416.321.6969**

**HomeLife / GTA Realty Inc.** *Brokerage

5215 Finch Ave. E., #203, Toronto ON. M1S 0C2

*Independently Owned & Operated



BUYING OR SELLING
Indra Michael Xavier
Sales Representative
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
905-201-9977


we always care at . . .
Bridletowne Dental
Dr. Jeyapalan. BDS., DDS.
Dentist
416 492 3775
Bridletowne Dental
2555 Warden Avenue. Scarborough M1W 2H5
( close to Warden and Finch , in the TD BANK PLAZA)



வீடு வாங்க,விற்க,வாடகைக்கு பெற்றிட...
வைத்திய பரிசோதனையற்ற காப்புறுதிக்கும்...
Vany Jeganmohan
Realtor/Financial Advisor
416.670.7436
✓ Buy/Sell/ Lease
✓ Life Insurance
✓ Super Visa
✓ Non Medical
✓ RESP
VJS Financial Services
We ease your cost of living
5215 Finch Ave East, Unit 222 Toronto ON M1S 0C2


DonMills Rd. & Eglinton Ave
Spadina & Front st.
TISI PARA
647-296-0596
www.tisipara.com
Para Tisikulasingam
Sales Representative



வீடு வாடகைக்கு...
வாங்க...
விற்க...
Vasanta Raviendren
Cell: 416-716-1540
Life Insurance
Non Medical
Super Visa
RESP
Mega Financial Group
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave East. Unit 203 Toronto ON M1S 0C2


IT'S YOUR MOVE...
Let me help you make the right one.
Century 21
Titans Realty Inc.,
Brokerage.
Sudharshan
Muthucumaraswamy
Broker
Direct: 416.567.6209
TEAM TITANS
Residential / Commercial / Purchase / Sale / Investment / Leasing


வீடு வாங்க, விற்க, வாடகைக்கு
Ponnambalam Mahalingam
Sales Representative
Dir: 416.729.0955
arunponmahal@gmail.com
HomeLife/ Future Realty Inc.Brokeage*
7 Eastvale Dr., Suite 205 Markham ON L3S 4N8 Bus: 905.201.9977
*Independently Owned & Operated
INCOME TAX E' FILE 416-288-1548


ATSEY
FINANCIAL GROUP LTD
MORTGAGE STRESS?
WORK WITH ALL MAJOR LENDERS
2nd and private financing available.
Call 416.333.9393
MORTGAGE ALLIANCE
PURCHASE • REFINANCE • INVESTMENT PROPERTIES


இல்லமே எல்லாமாகும்...
வீடு வாங்க, விற்க, வாடகைக்கு...
Uthaya Kathiravel
Sales Representative
Dir : 289.980.2159
Bus: 905.201.9977
email: omvikatreno@gmail.com
HomeLife/ Future Realty Inc. Brokerage*


BUY - SELL - LEASE - RENT - INVEST
The Realtor for your Dream House
Amalraj Joseph
Sales Representative
416.300.8294
amalraj.joseph@gmail.com
HomeLife/GTA Realty Inc.


B.J TAXI SERVICE
NEED A RIDE?
SHORT TRIPS FROM $10
விமான நிலையம் சென்றுவர மற்றும் செல்ல
முதியோர் கோயில் மருத்துவ நிலையம்
கடைகள் சென்றுவர வாகன சேவை வழங்கப்படும்
RIDE FOR SENIORS, ODSP, WELFARE GROCERY SHOPPING & FOOD DELIVERY
FAMILY SHOPPING & PARTY PICK UP / DROP UPTEMPLES , DOCTOR APPOINMENTS
AIRPORT $45
PICK UP/ DROP UP
By Appointment Only
CALL:CHERAN 416-727-1484


HOMES & COTTAGES FOR SALE
BRAMPTON
2 years old
$799,000
2-Storey - Detached 4BR
OSHAWA
$699,900
2-Storey - Detached 4BR
Danforth & Vic. Park
0.5 Acres
Redevelopment
HAWARTHA LAKES
$299,990
Bungalow - 5BR
UXBRIDGE - ONTARIO
$1,389,000
Gas Station & Property
GEORGINA -KESWICK
$899,900
Restaurant&Property
Cottages Availabe for (20 People) Rent starting from $149 Perday
1st & 2nd Mortgage available upto 1Million
A.ANTON JEEVA,FRI
Broker
Dir: 416.575.5055
anton.jeeva@gmail.com
www.getanton.com
RE/MAX
ROYAL PROPERTIES INC
Phone: (416) 321-0110